www.padippakam.com

# தொழிலாளர் பாதை

2/-

தொழிலாளர் பாதை

பின்வரும் இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் - இலங்கை - இதழ் 412. அக்டோபர் 21, 91 இதழ் 413. நவம்பர் 18, 91 இதழ் 414. டிசம்பர் 9, 91

சோசலிசத் தொழிலாளர் கழகம் - இந்தியா - இதழ் 40, ஜூலை, 1991., இதழ் 43. டிசம்பர், 91

தொகுப்புப் பிரதி இல. 2 ஜனவரி, 1992.

மாதமிரு இதழ் — 414 ● 1991 டிசம்பர் 09 திங்கட்கிழமை

# பேர்ளின் மகாநாடு வழிகாட்டுகின்றது: நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்பு!




மகாநாட்டு மேடையில் தோழர் டேவிட் நோர்த்தின் உரை

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக நவம்பர் 16 — 17ம் திகதிகளில் பேர்ளினில் நடைபெற்ற உலகத் தொழிலாளர் மகாநாடு, உலக ட்ரொட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் ஒரு திருப்புமுனையைக் குறித்துள்ளது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் கூட்டப்பட்ட பெரும் வெற்றிகரமான மகாநாடாக அமைந்த இதில் தொழிலாளர், இளைஞர்களின் பரந்த தட்டினைப் பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் 200க்கும் அதிகமான பேராளர்கள் கலந்து கொண்டனர்.

ஆரம்ப அரசியல் அறிக்கையைச் சமர்ப்பித்த அமெரிக்க ட்ரொட்ஸ்கிசக் கட்சியான வேர்க்கஸ் லீக்கின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த், மகாநாடு 'நான்காம் அகிலத்துக்கும் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒரு வரலாற்று வெற்றி' எனக் குறிப்பிட்டார்.

''பல தசாப்தங்களுள் முதற் தடவையாக ஒரு ட்ரொட்ஸ்கிச — புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலகின் பல பாகங்களையும் சேர்ந்த தொழிலாள வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யும் தூதுக் குழுக்களை நான்காம் அகிலத்தின் ஒரு அனைத்துலக மகாநாட்டுக்கு அணிதிரட்டுவதும் கூட்டுவதும் சாத்தியமாகியுள்ளது.'' என்றார்.

இம் மகாநாடு, அனைத்துலகக்குழு மிகவும் உற்சாகத்துடனும், வெற்றிகரமாகவும் நடாத்திய அனைத்துலகப் பிரச்சார இயக்கத்தின் பெறுபேறாகும். மகாநாட்டின் அடிப்படைப் பத்திரமாக விளங்கிய நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் மே தின விஞ்ஞாபனம் 18 மொழிகளில் பிரசுரிக்கப்பட்டதோடு ஐரோப்பா, இந்தியத்துணைக்கண்டம், அவுஸ்திரேலியாவட அமெரிக்காவை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான தொழிலாளர், இளைஞர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. முன்னோடி மகாநாடுகளும் கூட்டங்களும் ஜேர்மனி, அமெரிக்கா, இந்தியா, இலங்கை, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் நடாத்தப்பட்டன.

ஒரு வரலாற்றுச் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்தமுறையில் அனைத்துலகக் குழுவுக்கு அரசியல் ஆதரவுகாட்டும் ஒரு தொழிலாளர் குழுவினர்- 'கியூ லெப்ட் பிளட்போம்' இம் மகாநாட்டுக்குவாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தது. இது ஒரு வரலாற்றுச் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும். சோவியத் யூனியனில் இருந்து ட்ரொட்ஸ்கிச இயக்கம்அத்தகையவாழ்த்துச் செய்திகளைப் பெறுவது இதுவே முதற் தடவையாகும். கடவுச்சீட்டுக்களைப் பெறுவதில் அக்குழுவினர் எதிர்கொண்ட பிரச்சினைகள் காரணமாக அவர்கள் நேரில் மகாநாட்டில் கலந்து கொள்ள முடியாது போய்விட்டது.

தோழர் நோர்த் தமது ஆரம்ப அறிக்கையில் கடந்த 4 தசாப்தங்களாக அனைத்துலகக் குழு ஏர்ணஸ்ட் மண்டேலின் பப்லோவாத ஐக்கிய செயலகத்துக்கு எதிராக நடாத்திய போராட்டத்தையும், 1982ல் இருந்து அனைத்துலகக் குழுவின் உள்ளே ஹீலி -- பண்டா — சுலோற்றர் தலைமைக்கு எதிரானபோராட்டம் 1985—86 பிளவுடன் உச்சக் கட்டத்தை அடைந்ததையும், ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அவர்கள் சேர்ந்த இயக்கத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்ந்தமையையும் மீளாய்வு செய்தார்.

பப்லோவாதிகளுடன் கணக்கு வழக்குகளைத்தீர்க்கமான முறையில் தீர்த்துக் கொள்ள அனைத்துலகக் குழுவினால் இன்று சாத்தியமாகியுள்ளது என நோர்த் விளக்கினார். மண்டேலுக்கெதிரானபோராட்டம் கோட்பாட்டு அம்சங்கள் அல்லது வேலைத்திட்ட விவகாரங்கள் பற்றியதன்றி வேறுபட்ட வர்க்க சக்திகளுக்கும் அவற்றின் வரலாற்று இலக்குகளுக்கும் இடையேயானது.

மண்டேல் போக்கின் முழு வரலாற்று பரிணாமத்தினாலும் இது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கடந்த பல ஆண்டுகளாக இப்போக்கு வகித்த பாத்திரங்கள் மூலம் இது உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

மண்டேலை இனியும் ஒரு 'திரிபுவாதி'யாக வருணிக்க முடியாது. ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டம் மீது அவர் தொடுத்த கடந்த காலத் தாக்குதல்கள் காரணமாக—அந்த வார்த்தையின் முழு விஞ்ஞான அர்த்தத்தில் ஒரு முதலாளித்துவஅரசியல்வாதியாகியுள்ளார். அவர் தலைமைதாங்கும் ஐக்கிய செயலகம் ஏகாதிபத்திய ஏஜன்சியாகியுள்ளது.

மண்டேலின் அரசியல் சோவியத் யூனியனிலும் மாஜி-கிழக்கு ஜேர்மனியிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் முதலாளித்துவச் சொத்துக்களை முற்று முழுதாகப் பேணுவதை அடிப்படையாகக் கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதே சமயம் ஐக்கிய செயலகம் அதன் கடந்த காங்கிரசில் நவசமசமாஜக் கட்சியை (NSSP) அதன் இலங்கைப் பகுதியாக அனுமதிக்க தீர்மானம் எடுத்தது. இக்கட்சியின் தலைவர்கள் திருமதி பண்டாரநாயக்காவின் முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தில் பங்குகொண்டதோடு 1970—71ல் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்ததோடு சமீப காலத்தில் வடக்கு—கிழக்குத் தமிழருக்கு எதிரான யுத்தத்திலும் பங்குகொண்டனர் என்றார்.

யூகோசலவாக்கிய மோதுதல் சம்பந்தமாக ஐக்கிய செயலகம் வெளியிட்ட சமீப அறிக்கையின் முக்கியத்துவத்தினைச் சுட்டிக்காட்டிய நோர்த், அதன் பெறுபேறாக அமைக்கப்பட்ட அரசின் சமூகப் பண்பினைக் கணக்கில் கொள்ளாமல் சுயநிர்ணய உரிமைக்கு அழைப்பு விடுத்ததோடு அதன் மூலம் பிற்போக்கு தேசியவாதத் தலைவர்கள் ஒரு பாசிசப் பாணியிலான ஆட்சியினை நிறுவுவதையும் வெளிப்படையாக அங்கீகரித்தது என்றார்.

பப்லோவாதிகளின் அரசியல் பரிணாமம் மாபெரும் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டது எனவும் அவர்கள் இச்சம்பவங்களில் பரீட்சைக்குள்ளாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். ''பப்லோவாதத்தினை நான்காம் அகிலத்தில் இருந்து பிரிக்கும் கோடுகள், எதிர்ப்புரட்சியை புரட்சியில் இருந்து பிரிக்கும் கோடுகளாகும் என்பதை நாம் கட்டாயம் அங்கீகரிக்க வேண்டும்'' என அவர் குறிப்பிட்டார்.

''இந்த பேர்ளின் மகாநாடு, நான்காம் அகிலத்தின் அபிவிருத்தியில் ஒரு புதிய கட்டத்தினைக் குறிக்கின்றது. இன்று முழு உலகிலும் ஒரே ட்ரொட்ஸ்கிச இயக்கம் அனைத்துலகக் குழு மட்டுமே. அனைத்துலகக் குழு, நான்காம் அகிலத்தினுள் உள்ள ஒரு வெறும் குறிப்பிட்ட போக்காகவன்றி இதுவேதான் நான்காம் அகிலம். இம்மகாநாட்டுடன் அனைத்துலகக் குழு சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சி என்ற முறையில் நான்காம் அகில உலகுக்கான தலைமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்கின்றது.''

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான போராட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியம், நான்காம் அகிலத்தை கட்டியெழுப்புதல், முதலாளித்துவப் புனருத்தாரணத்துக்கு எதிராக சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய தொழிலாளர்களின் பந்தோபஸ்து மீதான மூன்று முக்கியபிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டிகளும் குரோதங்களும் ஆழமாகிக் கொண்டுள்ளதை மகாநாட்டின் கவனத்துக்குக் கொணர்ந்த ஏகாதிபத்திய யுத்தம், காலனித்துவம் மீதான பிரேரணைகள்: ''ஈராக்குக்கு எதிரான யுத்தம் ஒரு புதிய காலனித்துவ, ஏகாதிபத்திய காட்டுமிராண்டிக் காலப்பகுதி வெடித்துள்ளது என்பதற்கு அறிவித்தல் விடுத்தது போல் பால்கன்ஸ் யுத்தம், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்திற்கு எச்சரிக்கை சங்கொலி எழுப்ப வேண்டும்'' என பிரகடனம் செய்தது.

இது தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் ஆழமாகி வரும் மோதுதல்களின் முக்கியத்துவத்தினைச் சுட்டிக்காட்டியது. அங்கு கம்போடியா இன்று ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையின் கீழான ஒரு புதிய இந்தோசீனப் பிரிவினையின் மைய

(13ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

படிப்பகம்

www.padippakam.com



## ராஜீவ் காந்தி கொலை குற்றப் பத்திரிகை:

# தமிழ் ஈழ விரோத குற்றப்பத்திரிகையாக்க திட்டம்

இந்திய மாஜி பிரதமர் ராஜீவ் காந்தி கொலை பற்றி விசாரணை செய்யும் 'விசேட விசாரணைக் குழு' (S.I.T) எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் தாக்கல் செய்யவுள்ள குற்றப் பத்திரிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனையும் ஒரு எதிரியாகக் குறிப்பிட இந்திய காங்கிரஸ் அரசாங்கம் எடுத்துவரும் ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள் மூலம் தமிழ் விடுதலை இயக்கத்துக்கு எதிரான கொலைகாரச் சதிகளை இந்தியாவிலும் இலங்கையிலும் புதிய கட்டத்துக்கு உயர்த்த முடிவு செய்துள்ளது.

தமிழ் ஈழம் தேசிய இனத்தினருக்கு எதிரான இந்தச் சதியில் ஏகாதிபத்திய கைக்கூலி நரசிம்மராவ் — பிரேமதாச அரசாங்கங்கள் கூட்டாகவே ஈடுபட்டுள்ளன. தென் ஆசிய எஜமான்களாக எந்த ஏகாதிபத்திய ஆட்சியாளர்களை அணைத்துக் கொள்வது தொடர்பான பிரச்சினைகளின் பேரில் இந்திய - இலங்கை ஆளும் வர்க்கங்கள் 'சார்க்' மகாநாட்டைக்கூட்டுவதிலும் கலந்து கொள்வதிலும், அதில் என்னதான் முரண்பட்டுக் கொண்டாலும் எந்தவொரு இன, மதக் குழுவினரதும் ஜனநாயக கிளர்ச்சி, எழுச்சிகளை நசுக்குவதில் அவர்களிடையே தகராறு கிடையாது.

தமிழ் தேசிய விடுதலை இயக்கத்தினை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் பொருட்டு 'விசேட விசாரணைக் குழு'வின் அநேக அங்கத்தவர்கள் புனர் விசாரணையின் இழகிய தடயங்களை இறுக்கும் பொருட்டு காலத்துக்குக் காலம் இலங்கைக்கு விஜயம்செய்து வந்துள்ளார்கள்''
(ஹிந்து — 5/12/91)

வடக்கு மாகாணத்தில் உள்ள ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினருக்கு எதிராக கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக முதலாளித்துவ சிங்கள இனவாத அரசாங்கம் கடைப்பிடித்து வரும் 'உணவுத்தடை' நடவடிக்கைகள் அங்கு படுபயங்கரமான பட்டினி வலயத்தினை ஏற்படுத்தியுள்ளதோடு வவுனியாவிலும் தீவுப்பகுதியிலும் சிவில் நிர்வாகத்தை' புனர்நிர்மாணம் செய்வதாகக் கூறி அரசாங்க இனவாத படைகள் கைக்கூலி புளொட், டேலோ இயக்கங்களுடன் ஆரம்பித்துள்ள நடவடிக்கைகள் அப்பிராந்தியத்தில் பட்டினியுடனும் எஞ்சிக் கிடந்தோரையும் வெளியேறவைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.



ராஜீவ் காந்தி



வே. பிரபாகரன்

யாழ்ப்பாணம் சென்று திரும்பிய மாஜி யாழ்மாவட்ட அரசாங்க அதிபரும், இன்றைய சுற்றாடல் அலுவல்கள் அமைச்சின் செயலாளருமான டாக்டர் தேவநேசன் நேசையா குறிப்பிட்டதுபோல் ''யாழ்ப்பாணத்தில்போஷாக்கில்லாத குழந்தைகள் சமுதாயம்ஒன்று உருவாகிறது. இதனைத் தடுக்க நாம் விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்கால இளைஞர் சமுதாயம் வலுக்குறைந்த ஊனச சமுதாயமாகவே இருக்கும்'' இது ''ஊனச்சமுதாயமாக,'' எஞ்சி இருக்கும் நிலைதன்னும் இப்புதிய இந்திய-இலங்கை ஆளும் வர்க்கங்களின் சதியினைத் தொடர்ந்துகிடைக்குமா என்ற ஐயமும் உருவாகியுள்ளது.

குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகள் தலைமை இப்பிற்போக்கு நரசிம்மராவ் — பிரேமதாச அரசாங்கங்களுடன் நானாவிதமான உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளும் உத்திகளில் ஈடுபட்டுக் கொண்டுள்ள நிலையில் இந்த ஆளும் கும்பல்கள் ராஜீவ் காந்தி கொலை விசாரணை மீதான வெறிபிடித்த பிரச்சாரத்தினை தமிழ் தேசிய இனத்தினருக்குஎதிராக மட்டுமல்ல முழு இந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகவும் பயன்படுத்த முடிவு செய்துள்ளன.

இந்திய காங்கிரஸ் ஆட்சியாளர்கள் முகம் கொடுத்துள்ள பாரிய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பிரதமர் நரசிம்மராவ் ஐரோப்பிய ஏகாதிபத்திய மையங்களில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார். எனினும் ஹெல்மட் ஹோலின் அரசாங்கமும் சரி ட்ரான்ஸ்வால்ட் மிட்டரண்டின் அரசாங்கமும் சரி இந்திய தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் வழங்கும் எந்தவொரு சலுகையுடனும் திருப்திப் படுவதாய் இல்லை. சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கசிறப்புப் பிரதிநிதி குறிப்பிட்டது போல் நாம் வேண்டும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய சிங்கப்பூரினால்முடியுமானால் இந்தியாவினால் ஏன் முடியாது? என்ற தொனியில் பேசியுள்ளான். 1940பதுகளில் இருந்து 'நேரு சோசலிசம்', 'தேசிய சோசலிசம்' என்ற பேரில் மாஸ்கோ ஸ்டாலினிஸ்டுகளின் ஆதரவுடன் இடம் பெற்ற சகல தேசியவாத நடவடிக்கைகளையும் புதுடில்லி அரசாங்கம்சிதறடித்துள்ளது.

(9ம் பக்கம் பார்க்க)

## பதுளை, பசறை ஆயுதப்படை பயங்கரங்கள்:

# இ. தொ. கா., கூட்டுக்கமிட்டி தலைமைகள் பொறுப்பு சொல்ல வேண்டும்

ஊவா மாகாணத்தைச் சேர்ந்த பதுளை, பசறை போன்ற இடங்களில் 5 பெண்கள் உட்பட 33 தோட்டத் தொழிலாளர்கள் யூ. என். பி. அரசாங்கத்தின் ஆயுதப்படைகளால் கைது செய்யப்பட்டுள்ளதை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், 'தொழிலாளர் பாதை'யும் இந்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளை நிறுத்தவும், நிபந்தனையற்ற விடுதலையை உறுதி செய்யவும் தொழிலாள வர்க்கம் முழு வர்க்க சக்தியைப் பிரயோகிக்க வேண்டும் என வேண்டுகின்றது.

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலை செய்வதில் சமசமாஜ — கம்யூனிச - நவசமசமாஜ இ. தொ. கா. தலைவர்களும் தோட்டத்தொழிற்சங் கூட்டு முன்னணியும் காட்டிய மாற்றாந்தாய் மனப்பான்மை, தோட்டத் தனியார்மயமாக்கத்துக்கு எதிரான போராட்டத்துக்குத் தோட்டத் தொழிலாளர் அணிதிரண்டு வந்த வேளையில் பாய்ந்து விழ யூ. என். பி. அரசாங்கத்துக்கும் ஆயுதப் படைகளுக்கும் மற்றுமோர் வாய்ப்பினை வழங்கியுள்ளது.



எஸ். தொண்டமான்

ஜனவசம, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபன நிர்வாகத்துக்குட்பட்ட தோட்டங்களை 20 தனியார் கம்பனிகளிடம் கையளிக்கும் வேலையை இவ்வாண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யும் யூ. என். பி. அரசாங்கத்தின் திட்டங்களுக்கு எதிராக 1991 நவம்பர் 20-ம் திகதி தோட்டங்களில் இடம்பெறவிருந்த அடையாள வேலைநிறுத்தத்தினை காலவரையின்றி ஒத்திப்போட்டதோட்டத்தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியும், இ. தொ. கா, துரோகத் தலைமையும் ஆயுதப்படைகள் பாய்ந்து விழ உற்சாகத்தை வழங்கியுள்ளன என நாம் குற்றம் சாட்டுகின்றோம்.

'அரசாங்கத்தை விட தனியார் கம்பனிகளின் நிர்வாகம் திறமையாக' இருக்கும் என்பன போன்ற எண்ணற்ற பல நப்பாசைகளின் அடிப்படையில் எதிர்ப்புப் போராட்டங்களைக் கூட கைகழுவி விட்டுள்ள இத்தலைமைகள் இனவாத முதலாளித்துவ யூ.என். பி-அரசாங்கம் 'ஜெலிக்னைட்' குச்சிக் கதைகளுடன் பாய்ந்து பதுளையைச் சேர்ந்த ச்ரோஜாதேவி, எஸ். புஷ்பராணி, பசறையைச் சேர்ந்த கலைச்செல்வி, நோர்வூட் வென்ஜர் தோட்டம் திருமதி விஜயலக்சுமி உட்பட 33 தொழிலாளர்களை கடத்திச் செல்ல வாய்ப்பளித்துள்ளனர்.

இந்த 'பயங்கரவாத' 'ஜெலிக்னைட்' குச்சி கதைகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் எதுவித சம்பந்தமுமே கிடையாது என்பதை பிரேமதாச அரசாங்கத்தினதும் சிங்கள முதலாளித்துவ இனவாதத்தினதும் நெருங்கிய கையாட்களான ஈ. பி. ஆர். எல். எப், 'இவர்கள்அனைவரும் அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள்' என விடுத்துள்ள பத்திரிகை அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. மாறாக இக் கைது செய்தல்கள் தோட்டத்துறையில் தனியார்மயமாக்கத்துக்கு எதிராக — தலைமைகளின்பூரண காட்டிக் கொடுப்புக்கு மத்தியிலும் கிளர்ந்துவரும் தொழிலாளர்களை பீதியடையச்செய்யவும் உலகவங்கித் திட்டங்களை திணிப்பதற்குமான அரச இராணுவ, பொலிஸ் நடவடிக்கையின் ஆரம்பமாகும்.

'தோட்டத் தனியார்மயமாக்கத்துக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்துக்கு தயார் செய்' என்ற தலைப்பில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், அதன் தொழிற்சங்க அமைப்பான பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் வெளியிட்ட (18/11/1991 பிரசுரத்தில் இந்த தனியார் மயமாக்கத்தின் பெருந்தீய விளைவுகளைப் பின்வருமாறு சுட்டிக்காட்டியிருந்தது: ''தோட்டத்துறையில் அமுலுக்கு வர ஆரம்பித்துள்ள இவை முழுத்தீவிலும் ஏகாதிபத்திய காலனித்துவ சுரண்டலை ஆழமாக்க ஆரம்பித்துள்ள வேலைத்திட்டமே. இது முன்னைய பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் செயற்படுத்தப்பட்ட பெரும் மக்கள் படுகொலைகளுடன் அமுல்படுத்தப்படவுள்ள வேலைத் திட்டம். கடந்த சில ஆண்டுகளாக இத்தயாரிப்புகளை தோட்டப்புறத்தில் செயற்படுத்தும். திட்டம் இருந்து வந்தது. ஜயவர்தனா அரசாங்கத்தின் பின் பிரேமதாச அரசாங்கமும்இராணுவபொலிஸ்படைகளை கட்டியெழுப்பியபடி அடக்குமுறையை தோட்டத்துறை பூராவும் நிறுவியுள்ளதுடன் தமிழ் பேசும் தொழிலாளருக்கெதிராக இனவாதத்தை தூண்டுவதையும் தற்சமயம் தீவிரமாக்கியுள்ளது. மலையக மக்கள் முன்னணி ஜி. சந்திரசேகரன் உட்பட சந்தர்ப்பவாத தலைமையும் அதன் போராளிகளும் வடக்கு — கிழக்கு தமிழ் விடுதலைப் புலி அமைப்புடன் சம்பந்தப்பட்டவர்கள் என்ற பிரச்சாரத்தின் அடிப்படையில் யூ. என். பி. அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டது இந்த இயக்கத்தின் ஓர் அங்கமே''

''தொழிலாளர் பாதை'' — 8/11/1991)

ஊவாவில் ஆரம்பித்துள்ள வேட்டைகள் இதில் புதிய உச்சக்கட்டம். வடித்தெடுத்த கம்யூனிஸ்ட் விரோதிகளான தொண்டமான் — செல்லச்சாமி தலைமை ஜனவசம், அ. பெ. தோ. கூட்டுத்தாபனங்கள் தேசியமயமாக இருந்ததாலேயே திறமையாக இயங்கவில்லை என்பதை நியாயப்படுத்த ''சோவியத் யூனியன் உட்பட சோஷலிச நாடுகளிலும் அக்கொள்கை தோல்வி கண்டுவிட்டது'' என்ற பிற்போக்குச் சி. ஐ. ஏ. பிரச்சாரத்தினையும் முன்னெடுக்கிறார்கள். ஸ்டாலினிசம் கடைப்பிடித்த மார்க்சிச விரோத

(9 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# அம்பலாங்கொடை பு. க. க அங்கத்தவர்களை கொல்ல முயற்சி

அம்பலாங்கொடை பொலிசாரின் ஆதரவுபெற்ற யூ. என். பி. குண்டர் கோஷ்டி ஒன்று வத்துகெதர - பரகஹதொட பகுதியில் அரசியல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த பு.க.க. அங்கத்தினர்களையும் ஆதரவாளர்களையும் கொலை செய்ய முயன்றுள்ளது. குண்டர்களை நிராயுதபாணியாக்க முடிந்ததால் பு.க.க.அங்கத்தினர்கள் உயிர் தப்பினர்.

பு.க.க. மத்திய குழு உறுப்பினரான நந்தன நன்னெத்தி, முக்கிய அங்கத்தவரும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலூக்கம் கொண்ட அங்கத்தவருமான எஸ்.கே.கீர்த்தி, ஆதரவாளரான என்.ரஞ்சன் ஆகியோர் தலையிலும், உடலிலும் இரத்தக் காயங்களுடன் அம்பலாங்கொடை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நவம்பர் 21ம் திகதி தாக்குதலுக்கு முன்னதாக அக்டோபர் 25லும் பு.க.க மத்திய குழு உறுப்பினர் நந்தனுக்கும் 'இளம் சோசலிஸ்ட்' பத்திரிகை ஆசிரியரான உதய பிரேமாவுக்கும் தாக்குதல் நடாத்த இந்த யூ.என்.பி குண்டர்கும்பல்மேற்கொண்ட



என். ரஞ்சன்

முயற்சி' நூற்றுக்கும் அதிகமான கிராமிய மக்களின் தலையீட்டால் தவிர்க்கப்பட்டது. குண்டர்களை விரட்டியடிப்பதில் அவர்கள் வெற்றி கண்டனர். இத்தாக்குதல் முயற்சி பற்றிய துண்டுப் பிரசுரம், 'கம்கறுமாவத்த விநியோகத்தில் ஈடுபட்ட வேளையிலேயே நவம்பர் 21 தாக்குதல் இடம்பெற்றுள்ளது. கிறிஸ், வாள், இரும்பு பொல் முதலியவற்றுடன், குண்டர்கள் தாக்குதலில் ஈடுபட்டனர். அன்று போயாதினமாதலால் வீதிகளில் கிராமிய மக்கள் நடமாட்டம் இல்லாதிருந்ததோடு குண்டர்களும் தாக்குதலுக்கு குடிமனை இல்லாத பகுதியை தேர்ந்தெடுத்தனர்.

இத்தாக்குதல் இடம் பெறுவதற்குச் சற்று முன்னதாக



நந்தன நன்னெத்தி

இதே குண்டர்கள் 'இளம் சோசலிஸ்ட்' பத்திரிகை ஆசிரியரின் வீட்டைத் தாக்கிச் சேதப்படுத்தியதோடு அவரின் தந்தையார் எல். பி. ஏடின் தாக்கப்பட்டதால் அவர் அம்பலாங்கொட பொலிசுக்கு முறைப்பாடு செய்யச் சென்றிருந்தார். குண்டர்கள் தாக்குதலை 'நந்தனை கொலை செய், பு.க.க.வுக்கு முடிவு கட்டு' எனக் கூச்சலிட்ட வண்ணம் நடாத்தியுள்ளனர். நந்தன அம்பலாங்கொட பிரதேச பு.க.க. அமைப்பாளர் ஆவர்.

தாக்குதலில் ஈடுபட்ட குண்டர் கும்பலின் தலைவனாக ஏல். பி. லக்ஷ்மன் (லக்கி) என்பவன் செயற்பட்டுள்ளான். எல். பி. தேமிஸ் (சிறிசேன) எல். பி. சுனில், எல். பி. விஜேதுங்க (சாந்த) எம்.



எஸ். கே. கீர்த்தி

நிசாந்த, எஸ். வசந்தகுமார இன்னும் பலர் இக்கும்பலில் இருந்துள்ளனர்.

பு. க. க. அங்கத்தினர்களைக் கொலை செய்யும்இம் முயற்சி அம்பலாங்கொட பொலிசாரின் உதவியுடனேயே இடம்பெற்றுள்ளது என சந்தேகிக்க பல ஆதாரங்கள் உள்ளன. தாக்குதல் இடம்பெற்ற அன்று குண்டர் கும்பலின் தலைவனான லக்ஷ்மனின் வீட்டிற்கு பொலிசார் சிவில் உடையில் பல முறை விஜயம் செய்ததை உறுதிப்படுத்தும் தகவல்கள் பு. க. க. வுக்கு கிடைத்துள்ளது. அன்று கொலையின் பின்னர் பொய் முறைப்பாடு செய்யும் பொரு

ம்

ட்டு தாக்குதல் சம்பவம் இ—பெற்ற இடத்துக்கு சமீபமாக மூன்றுசக்கர டாக்சி நிறுத்தப்பட்டிருந்தது கொலைமுயற்சிகைகூடானதைத் தொடர்ந்து பு. க. க. அங்கத்தினர்கள் தமது வீடுகளைத் தாக்கிய தாகக் கூறும் பொய் முறைப்பாட்டைப் பதிவு செய்யும் பொருட்டு லக்ஷ்மன் என்ற குண்டன் இந்தடாக்சியிலேயே பொலிசுக்கும் சென்றுள்ளான்.

பு. க. க. அங்கத்தினர்கள் தாக்கப்பட்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாக அம்பலாங்கொடை மாவட்ட வைத்திய அதிகாரி பொலிசாருக்கு அறிவித்த போதிலும் பொலிசார் அது பற்றி விசாரிக்கவோ அல்லது வாய் முறைப்பாடு எடுக்கவோ வரவில்லை. நவம்பர் 22ம் திகதி பு. க. க அம்பலாங்கொட அங்கத்தவர் ரத்னசிரி மலலகமவும் பு. க. க. தலைமையகத்தில் இருந்து சென்ற முக்கிய அங்கத்தவரும் இக்கொலை முயற்சி பற்றி விசாரணை அவசியம் எனக் கூறிய போதிலும் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் அம்முறைப்பாட்டை பதிவு செய்ய மறுத்துள்ளார். இச்சமயத்தில் லக்ஷ்மன் என்ற குண்டர் பொலிசில் சுதந்திரமாக உலாவிக் கொண்டிருந்தான். பு.க.க. உறுப்பினர்கள் பொலிஸ்

(13 ம் பக்கம் பார்க்க)

### பிரேமதாச அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத்திட்டம்:

# நாடு முழுவதையும் 'முதலீட்டு வலய'மாக்கும் திட்டத்தை ஊர்ஜிதம் செய்கிறது

பிரேமதாச அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத் திட்டம், ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ சுரண்டலுக்கான நிலைமைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களின் தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம், சேமநல உரிமைகளை அழித்தொழிக்கும் திட்டத்துடன் வெளிவந்துள்ளது.

முழு இலங்கையையும் சுதந்திர வர்த்தக வலயமாக்கும் பிரேமதாச அரசாங்கத்தின் திட்டத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் பிரதமரும், நிதி அமைச்சருமான டி. பி. விஜேதுங்க வரவுசெலவுத்திட்ட உரையில் கூறியதாவது: '' .. கட்டுநாயக்க, கொக்கல முதலீட்டு வலயங்களுடன் கட்டுப்பட்டு நின்ற ஊக்குவிப்புக்கள் இன்று அந்த முதலீட்டு வலயங்களுக்கு அப்பாலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்கான உற்பத்திகள் சம்பந்தமாக இன்று முழு நாடுமே ஒரு முதலீட்டு வலயம்.''

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது முக்கிய அரச வங்கிகளான இலங்கை வங்கி மக்கள் வங்கிகள் தனியார்மயமாக்கப்படா என அரசாங்கம் கூறிக் கொண்ட போதிலும் தேசிய கைத்தொழில்கள் எனப்பட்டவற்றுக்கு முக்கிய முண்டு கோல்களாக விளங்கிய இவ்வங்கிகள், 'வெளிநாட்டு உதவிகளைப்' பெறும் சாட்டில் வெளிநாட்டு முதலாளிகளிடம் ஒப்படைக்கப்படும் என நிதி அமைச்சர் வரவு செலவுத்திட்ட உரையில் சைகை காட்டியிருந்தார்.

இரண்டு பெரும் அரசாங்கத் துறை நிறுவனங்களான ஜனவசமும், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனமும் துண்டாடப்பட்டு 22 தனியார் கம்பனிகளிடம் கையளிக்கும் வேலை இவ்வாண்டு இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. எஞ்சியுள்ள அரசாங்கத் துறை நிறுவனங்கள் அனைத்தினதும் தலைவிதி இதுவே.

உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகள் இலாபமூட்டை கட்டும் விதத்தில் வரிக்குறைப்புக்களும் வரிவிலக்குகளும் வழங்கப்பட்டுள்ளன, செல்வ வரி அடியோடு நீக்கப்பட்டுள்ளது. தனியாட்களிடம்இருந்து அறவிட்டு வந்த உச்ச வரி விதம் 40%ல் இருந்து 35% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. கம்பனி வரிகள் 50%ல் இருந்து 45%ஆக குறைக்கப்பட்டுள்ளது. வங்கி நாணயக் கடிதத்தின் மீது விதிக்கப்பட்டு வந்த முத்திரை வரி 2.5%ல் இருந்து 2% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்திய இரத்தப் புடயன்களுக்கு இங்ஙனம் வாய்ப்பான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் அதே வேளையில் மாதாந்தம் ரூபா, 3000/- குறைவான சம்பளம் பெறும் அரசாங்கத் துறை ஊழியர்களுக்கு ரூபா. 100/- சம்பள உயர்வு (!) வழங்குவதாக அறிவித்துள்ளது. பிரேமதாச அரசாங்கம் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிக்கும் பேரழிவின் பரிமாணத்தினை இது நன்கு காட்டுகின்றது. கடந்த இரண்டு மாதங்களாக ஏழை மக்களின் வயிற்றில் அடிக்கும் விதத்தில் அவர்களின் அன்றன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை பன்மடங்காக அதிகரித்துள்ளது. உலகவங்கி கட்டளையின் பேரில் இவ் வரவு செலவுத்திட்டம் அச் சுமைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் அத்தியாவசியப் பொருட்களின் மீதான வரிகளை அதிகரித்துள்ளது.

பொது மக்களை இராணுவ — பொலிஸ் இரும்புச் சப்பாத்தினால் நசுக்கும் பொருட்டு சகல இறக்குமதிப் பொருட்கள் மேலும் நூற்றுக்கு 1% பாதுகாப்பு வரி அறிவிட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்திகளைப் பொறுத்தமட்டிலும் இது பொருந்தும். கடந்த மாதத்தில் 450 கிராம் பால்மா ரூபா. 5/-னாலும் 500 கிராம் லக்ஸ்பிறே ரூபா, 6/-னாலும் அதிகரித்த அரசாங்கம் இந்த வரவு செலவுத்திட்ட பிரேரணைகளில்பால்மாவிலையை நூற்றுக்கு 25% ஆல் அதிகரித்துள்ளது. 1 கிலோ அரிசியின் விலை ரூபா. 18/- ஆக அதிகரித்தது. தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் பெரிதும் பிரயாணம் செய்ய நேரிட்டுள்ள தனியார் பஸ் கட்டணம் நூற்றுக்கு 30–70% ஆல் உயர்ந்துள்ளது. வேண்டுமென்றே குறைத்துக்காட்டி வரும் கொழும்பு பாவனையாளர் விலைச் சுட்டெண் இப்போது 1234 வரை அதிகரித்துள்ளது. அரசாங்கப் புள்ளி விபரங்களின்படி சனத்தொகையில் சரி அரைவாசிப் பங்கினர் — 89 இலட்சம் — வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டுள்ள நிலையிலேயே இந்த விலை அதிகரிப்புக்களும், வரி அறவீடுகளும் இடம் பெற்றுள்ளன.

இந்நடவடிக்கைகள் மூலம் பிரேமதாச அரசாங்கம் அரசாங்க, தனியார் துறையைச் சேர்ந்த இலட்சக்கணக்கானோரின் தொழில் உரிமையை நாசமாக்கவும், கிராமப்புற ஏழை விவசாயிகளை பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத வறுமைக்குள் தள்ளிவிடவும் செயற்பட்டு வருகின்றது. இலவச கல்வி, சௌக்கிய சேவைகளுக்கு குழிபறிக்கும் தாக்குதல்கள் இவற்றுடன் கைகோர்த்த வண்ணம் இடம்பெற்று வருகின்றன.

ஏகாதிபத்திய நெருக்கடியின் ஒரு பாகமாகவும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாகவும் நாட்டின் பொருளாதாரத்தின் சகல துறைகளும் நாற்றம் கண்டுள்ளன.

பிரேமதாச அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தில் இருபெரும்செலவினங்களான தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான யுத்தத்துக்கான பாதுகாப்புச் செல

(13 ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## தம்பு - கம்யூனிச தொழிற் சங்கத் தலைவர்கள்

# சீ-நோர் பக்டரிகளை மூடிவிட ஆதரவு

சீ-நோர் நிறுவனத்தின் காரைநகர், குருநகர் தொழிற்சாலை கிளைகளில் தொழில் புரியும் தொழிலாளர்களுக்கு வேலைநீக்கம் செய்யும் கடிதங்களை கையளித்த நிர்வாகிகள், நட்டஈடு வழங்குவது பற்றிய யோசனைகளை சமர்பிக்கும்படி தொழிற்சங்க தலைவர்கள் கொழும்பில் விவாதிக்ககூடிய போது தெரிவித்துள்ளன. இந்த ஆண்டிறுதியில் முழு நிறுவனத்தையும் மூடிவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன் சீ.எம்.யூ. தொழிற்சங்க தலைவர்கள் சீ-நோர்நிர்வாகிகளை சந்தித்து, 1990 யூன் மாதத்திலிருந்து தொழிலாளருக்கு சம்பளம் வழங்காதது ஏன்? என கேட்டபோது நிறுவனத்தின் நிதி நெருக்கடி பற்றிய பிரச்சினையை விபரித்து ''சம்பளம் கொடுக்க நிதியில்லை'' என்று பதிலளித்துள்ளனர். மந்திரிசபை நிறுவனத்தை மூடிவிட தீர்மானித்துள்ளதாயும் நிர்வாகி கூறியுள்ளார்.

சீ-நோர் தொழிற்சாலையை மூடிவிடும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை தங்கு தடையின்றிச் செயற்படுத்து முகமாக செயற்படும் சீ. எம். யூ. தலைவர் பாலாதம்புவும் அவரது நிர்வாக குழுவும் யாழ்ப்பாண சீநோர்க் கிளையின் தலைவர் சுப்பிரமணியம் உப-தலைவர் சீறீரங்காவை பதவியிலிருந்து நீக்கிவிட்டு, விசேட அதிகாரம் கொண்ட தமது சகாவை அவர்களுக்கு பதிலாக நியமித்துள்ளதுசேகர் எனக்கூறப்படும் இந்த நபருக்கு அரச அதிகாரிகள், விடுதலைப் புலிகள் அரசியல் தலைமை, செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் அதிகாரத்தையும், சீ-நோர் யாழ்ப்பாண தொழிலாளரது விசேட கூட்டம் கூட்டும் அதிகாரத்தையும் கொடுத்துள்ளார்களாம்! வட்டுக்கோட்டையில் கூட்டப்பட்ட அத்தகைய கூட்டமொன்றில், தொழிலாளரை பிளவு படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் 15 — 20 ஆண்டுகள் வரை சேவையாற்றிய தொழிலாளர்கள் இக் கூட்டத்தில் பங்கு பற்றவில்லை.

சீ. எம். யூ ''விசேட பிரதிநிதியை'' யாழ்ப்பாணத்திற்கு நியமித்தது யுத்த சூழ்நிலையில் தொழிற்சங்க கூட்டம் நடத்தும் சூழ் நிலையில்லை'. என்ற நொண்டிச்சாக்குடன் ஆகும். எனினும் சீ-நோர் சீ. எம். யூ. கிளைத் தலைமைகள் யுத்தம் மும்முரமாக நடந்த சமயத்தில்கூட கொழும்பு தலைமைகாரியாலயத்திற்கும் பலமுறை வந்து சென்றுள்ளது மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடத்தியுமுள்ளனர்.

சீ-நோர்தொழிற்சாலையை மூடிவிடும் திட்டத்தை தம்பு முன்கூட்டியே அறிந்திருந்தார் என்றும் இந்த யூ. என். பி. அரசாங்க, உலக வங்கி தாக்குதலை 'செயற்படுத்துகையில் ஏதாவது எதிர்ப்பு தொழிலாளரிடையே எழுமாயின், அதனை தடைசெய்யும் தேவை அவருக்கிருந்ததாலேயே யாழ்ப்பாண கிளைச்சங்க தலைமைகளை பதவிகளிலிருந்தும் அகற்றிவிட செயற்பட்டாரென்றும் நாம்கூறுகிறோம்யாழ்ப்பாணத்திற்கு தம்பு நியமித்துள்ள அந்த விசேட பிரதிநிதி தொழிலாளரைவெளியேற்றி, சீநோரை மூடிவிடுவதை பூரணப்படுத்தும் கைங்கரியத்திற்கு பக்கபலமளிக்க நியமிக்கப்பட்டதரகராவார். சீநோர் கிளைச் சங்க தலைமைகளை பதவி நீக்கிவிடசெய்ய அவர்கள் செய்த குற்றம் என்னவென்றால், தமது தொழிற்சாலை தொழிலாளரது தொழில், சம்பளம் பேண சீ. எம், யூ,வின் பலத்தை ஒழுங்கு திரட்டவும், உலகவங்கி, யூ. என். பி. அரசாங்க தாக்குதல்களுக்கெதிராகவும் 'நிர்வாகிகளது தாக்குதலகளுக்கெதிராகவும், வடக்கு — கிழக்குத் தொழிலாளரையும் சகல தொழிலக தொழிலாளரை ஒருங்கு திரளுமாறும் அவர்கள், நிர்ப்பந்தம் செய்தமையே. சீ. எம். யூ. பொதுச் சபையில் சீநோர் பிரச்சனை எழுப்பப்பட்ட சமயத்தில், வேலைத்திட்டம் ஒன்றை தீர்மானிக்க ஆதரவு வழங்குமாறு அவர்கள் கிளைச்சங்க தலைமைகளை வேண்டினர், 'கோபரேட்வாத' தம்புவும் அவரது சகாக்களும் இனவாத பதட்டம்தீவிரமடைந்திருந்த நிலைமையில் சீநோர் கிளைத் தலைவர்களை தலைமை காரியாலயத்திலிருந்தும் வெளியேற்றினர். உலகவங்கி, யூ.என்.பி. தாக்குதலை செயற்படுத்த தம்பு முற்றாக இணங்கியுள்ளார். அவற்றை தோற்கடிக்கவல்ல எந்தவொரு வேலைத்திட்டத்தையும் தொழிலாளர் எடுப்பதை தம்புவால் சகிக்க முடியாது. சிம்கா போன்ற தொழிற்சாலைகளில் நிர்வாகிகள் நேரடியாக அவசரகாலசட்டத்தை தொடுத்துள்ள நிலைமையிலும் நாத்தாண்டி கண்ணாடித்தொழிற்சாலை தொழிலாளருக்கெதிராக கொடிய பொலிஸ் தாக்குதல் தொடுக்கப்பட்டபோதும்தம்பு சனாதிபதிக்கும் பொலிஸ் பதிக்கும் ஐ. எல். ஓ.க்கும் விண்ணப்பித்ததுடன் நிறுத்திக் கொண்டார்.

உலகவங்கி வேலைத்திட்டம் தொடர்பான தம்புவின் நடவடிக்கையானது, தொழிலாளரை நட்ட ஈட்டை பெற்றுக்கொண்டு பணிந்துபோய் வேலையிலிருந்தும் விலகி விடுவதேயாகும். இதுவேசமசமாஜ ஸ்டாலினிச, நவசமசமாஜ தொழிற்சங்க தலைமைகளதும் கொள்கையுமாகும்,

தம்புவின் இந்த ஏகாதிபத்திய பாணி 'கோபரேட்வாத' வேலைத்திட்டத்தை நிராகரிக்குமாறு சீ.எம்.யூ தொழி தொழிலாளரை நாம் கோருவோமாக! யூ. என். பி உலக வங்கி தாக்குதல்களுக்கெதிராகவும் முதலாளித்துவ தலைமைகளுக்கு எதிராகவும் சகல தொழிலாளரது போராட்டங்களையும் ஒருங்கிணைத்து பொதுவேலை நிறுத்தமொன்றை ஒழுங்குசெய்ய சீ. எம். யு.வை அணிதிரட்ட சீ.எம். யு அங்கத்தவர் போராடவேண்டும். தொழிலாள வர்க்கத்தின் அத்தகைய போராட்டமானது ஏகாதிபத்தியவாதிகளுக்கும் முதலாளித்துவ அரசுக்கும், முதலாளித்துவ அரசாங்கத்திற்கும் எதிராக செய்யும் ஒன்றென தம்பு நன்கறிவர். தொழிலாளர் ஆட்சியின் கீழ் ஏகாதிபத்தியவாதிகளதும், முக்கிய முதலாளிகளதும் வர்த்தகங்களை தேசியமயமாக்கிவிடும் சோசலிச வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதனூடாக அன்றி தொழிலாள வர்க்கம் எதிர்கொண்டுள்ள முக்கிய பிரச்சினைகளை தீர்த்துவிடமுடியாதென்பதை நன்கறிந்த தம்பு, சீ. எம். யு. தொழிலாளர் அவ்வழியில் செல்வதை தடுத்துவிடும் எந்தவொரு ஈனச்செயலிலும் ஈடுபடத் தயாராயுள்ளார். இந்த வேலைத்திட்டமே, சீ-நோர் கிளைத் தலைமைகளை பதவி நீக்கி, தொழிலாளர் சனநாயகத்தினை காலடியில் நசுக்கி, தமது சங்க தரகரொருவரை நியமித்ததிலிருந்து நன்கு ஊர்ஜிதமாகியுள்ளது.

சீ. எம். யு. அங்கத்தவருக்கு அரசியல் தேவை

(14 ம் பக்கம் பார்க்க)

# பில் பிரெஸ்ட்: நீண்டகால ட்ரொட்ஸ்கிச போராளி மரணம்



பில் பிரெஸ்ட்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் அரசியல் தோழமை புண்ட அமெரிக்க 'வேர்க்கஸ் லீக்' கின் ஸ்தாப அங்கத்தவரும் வாழ்நாள் பூராவும்ட்ரொட்ஸ்கிஸ்டாக விளங்கியவருமான தோழர். பில் பிரெஸ்ட்டின் மரணத்தைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆழ்ந்த கவலையுடன் அறிவிக்கின்றது.

புற்றுநோய்க்கு எதிரான நீண்ட போராட்டத்தின் பின்னர் தோழர் பில் பிரெஸ்ட் செப்டம்பர் 15ம் திகதி காலமானார். அவர் 50 ஆண்டுகளுக்கும் அதிகமான காலம் தமது மனைவி மேரி ஜீன் பிரெஸ்டுடன் சேர்ந்து, ட்ரொட்ஸ்கிச அடிப்படைக் கொள்கைகளுக்கான போராட்டத்தில் ஈடுபட்டு வந்தவர். அமெரிக்காவின் உள்ளும் அனைத்துலகிலும் அவர் நடாத்திய இந்த உறுதியான போராட்டம், நான்காம் அகிலத்தைக் காத்ததோடு உலகம் பூராவும் புதிய ட்ரொட்ஸ்கிச தலைமுறையினருக்கு ஊக்கத்தையும் வழங்கியது.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் நான்காம் அகிலத்தின் அமெரிக்கக் கிளையான சோசலிச தொழிலாளர் கட்சியின் அங்கத்தவராக விளங்கிய தோழர். பிரெஸ்ட். அரச ஒடுக்குமுறைகளுக்கும் ஸ்டாலினிச அதிகாரத்துவ காட்டிக் கொடுப்புக்களுக்கும்மத்தியில் டரொட்ஸ்கிச பதாகையை எதிரிகளிடம் இருந்து காக்கப் போராடினார். 1953ல் பப்லோவாத திரிபுவாதிகளின் துரோகத்துக்கு எதிராக அனைத்துலகக் குழுவை அமைக்கும் போராட்டத்தில் கலந்து கொண்ட அவர் 1960பதுகளில் சோ. தொ.க. தலைவர்கள்மீண்டும் பப்லோ வாதிகளுடன் இணைவதை எதிர்த்தார். இதன் உச்சக் கட்டமாக 1966ல் 'வேர்க்கஸ் லீக்கை' அமைப்பதில் இணைந்து நின்றார்.

இத்துடன் பு.க.க. மத்திய குழு, தோழி. ஜீன் பிரெஸ்டுக்கு அனுப்பி வைத்த இரங்கல் செய்தி பிரசுரமாகிறது.

## பு. க. க. மத்திய குழு தோழி. ஜீன் பிரெஸ்டுக்கு அனுப்பிய இரங்கல் செய்தி

தோழர். பில் பிரெஸ்டின் மரணம்தொடர்பானபுரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் ஆழ்ந்த கவலையை தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் பல காலமாக சிகிச்சை பெற்று வந்தார் என்பதை நாம் அறிந்திருந்த போதிலும் அவரின் மரணம் பற்றி அறிந்ததும் நாம் பெரிதும் கவலைப் பட்டோம். அவரின் மரணம் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியின் மதிப்பு வாய்ந்த காரியாளரை அடித்துச் சென்றுள்ளது. அரை நூற்றாண்டுக்கு மேலாக பாட்டாளி வர்க்கப் போராட்டத்தில் அவர் உயிர்ப்புஷ்டிவாய்ந்த அனுபவம் கொண்ட காரியாளராக விளங்கினார்.

தாங்கள் தோழர். பில்லுடன் சேர்ந்து நான்காம் அகிலத்தின் அழைப்பின் பேரில் அணிதிரண்ட வேளையில் ட்ரொட்ஸ்கியும், ட்ரொட்ஸ்கிசமும் உலகம் பூராவும் ஏகாதிபத்தியம், ஸ்டாலினிசம் இரண்டினாலும் வேட்டையாடப்பட்டு வந்தது. கடந்த காலப்பகுதியில் மிகவும்கஷ்டமான நிலைமைகளின் கீழும் உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டம் தொடர்பான தங்கள் தியாகத்தினை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் உள்ளே அணிதிரண்டுள்ள ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் இன்றைய தலைமுறை என்றும் மதிக்கும்.

அனைத்துலகக் குழு இன்று உலக ரீதியில் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் போராட்டங்களுக்கும் ட்ரொட்ஸ்கிசத்துக்கும் இடையேயான உறவுகள் தீர்க்கமாக மாற்றம் அடைந்த காலகட்டத்தினுள் காலடி வைத்துள்ளது. இவை வெறும் தன்னியல்பான தொழிற்பாடுகள் அல்ல. எல்லாவற்றுக்கும் மேலாக இந்த வரலாற்று மாற்றங்களை இனங்கண்டு கொள்ள அனைத்துலகக் குழு இருக்க வேண்டியிருந்தது. அனைத்துலகக் குழு, அனைத்து தேசியவாத சந்தர்ப்பவாத வடிவங்களுக்கும் எதிராகட்ரொட்ஸ்கிசபாட்டாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத்திட்டத்தினை பாதுகாத்த வண்ணம் எழுச்சிபெற முடிந்தமைக்கு தங்கள் தலைமுறையின் தியாகங்களே அடிப்படை. 1950பதுகளின் முற்பகுதியில் பப்லோவாதத்துக்கு எதிரான தங்கள் போராட்டமும், 1960பதுகளில் சோசலிச தொழிலாளர் கட்சி திரிபுவாத முகாமுக்குப் பின்வாங்கிய வேளையில் தாங்கள் எடுத்த சமரசமற்ற நிலைப்பாடும் தொழிலாள வர்க்கத்தினதும் இளைஞர்களதும் முன்னேற்றமான பிரிவினரிடையே பெரும் எண்ணிக்கையானோருக்கு புரட்சிகரத் திசையை வகுத்துக் கொடுத்ததோடு, பிரமாண்டமான சடசக்தியாகவும் இன்று செயற்படுகின்றது.

வேர்க்கஸ் லீக் தங்கள் அரசியல் பணிகளை மதிக்கும் அதே விதத்திலேயே அனைத்துலகக் குழு தங்களால் எம்மிடம் ஒப்படைக்கப்பட்

(14-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



குட்டி முதலாளித்துவத் தேசியவாதத்தின் தவிர்க்க முடியாத முடிவு :

# விடுதலைப் புலிகள் விடுதலை இயக்கத்தைக் காட்டிக் கொடுக்கிறது

நந்த விக்கிரமசிங்க

(கடந்த இதழின் தொடர்ச்சி)

இதிலிருந்து பு.க.க.வின் சகல பிரசுரங்களும் 'கம்கறு மாவத்த' 'தொழிலாளர் பாதை'யின் சகல வெளியீடுகளும் யு. என். பி. இனவாத யுத்தத்துக்கு எதிராக சிங்கள இனவாத இராணுவத்தின் தோல்விக்காக தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டப் போராடி வந்தது.

ஜூன் 22ல் வெளியான 'கம்கறுமாவத்த'வின் முதல் பக்க தலைப்புச் செய்தி பின் வருமாறு குறிப்பிட்டது: ''வட-கீழ் மாகாணங்களில் இருந்து இந்திய ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேற்றப் பட்டதன் பின்னர் இலங்கை இனவாத அரசின் படைகளின் முகாம்களையும் பொலிஸ் நிலையங்களையும் தமது தாயகத்தினுள் மீண்டும் அமைக்க எடுக்கப்பட்ட முயற்சிக்கு எதிராக கிளர்ந்து எழுந்துள்ள ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் மேல் இரத்தம் தோய்ந்த யுத்தம், ஜனாதிபதி பிரேமதாசவின் யூ. என். பி. அரசாங்கத்தினால் தொடுக்கப்பட்டுள்ளது.

'தொழிலாள வர்க்கம் தமது சகல வர்க்க அமைப்புக்களையும் அணிதிரட்டி தமது வர்க்க போராட்ட விதிமுறைகள் மூலம் இந்த யூ. என், பி. சிங்கள இனவாத யுத்தத்துக்கும் அரச படைகளை தமிழ் தாயகத்தினுள் அனுப்புவதையும் உடன் எதிர்க்க வேண்டும் என நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

''இது சிங்கள தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல. இது ஏகாதிபத்தியச் சார்பு சிங்கள இனவாத முதலாளித்துவ ஆட்சியாளர்கள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஆரம்பித்து, சிங்கள – தமிழ் தேசிய இனம் இரண்டினையும் சேர்ந்த தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களின் மேல் மிலேச்ச சர்வாதிகாரத்தினை திணிப்பதன் மூலம் முடித்து வைக்கச் செய்யும் இனவாத யுத்தமாகும்.''

*1990 ஜூலை 20ம் திகதி 1196ம் இலக்க 'கம்கறு மாவத்த,* 'இனவாத யுத்தம் மூலம் சர்வாதிகார தயாரிப்புக்கள் இறுக்கமடைகிறது' என்ற தலைப்புச் செய்தியுடன் வெளிவந்தது, அடுத்த இதழ்-1197 - ''இனவாத யுத்தத்துக்கு எதிராக யூ.என்,பி. அரசாங்கத்தை வெளியேற்ற பொது வேலை நிறுத்தத்திற்கு தயார் செய்'' என்ற தலையங்கத்துடன் வெளிவந்தது. அது மேலும் கூறியதாவது: ஜூன் 11ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட யுத்தத்தில் ஆயுதப் படைகளும் குண்டர்களும் வட-கீழ் மாகாணங்களில் 2000க்கும் அதிகமான தமிழ் மக்களைப் படுகொலை செய்தனர்.

''திருமலையில் கைது செய்யப்பட்ட தமிழ் தேசிய இனத்தினர் - பெண்கள் - குழந்தைகள் உட்பட — டசின் கணக்கில் பொது அரங்கில் வைத்துச் சுடப்பட்டதாகவும் எருவில் என்னும் கிராமத்தை சுற்றி வளைதது, 47 தமிழ் தேசிய இனத்தினரை கொன்றதாகவும் யுத்தத்தின் கைக்கூலிகளான தமிழ் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டினர். முழுக் கிழக்கு மாகாணமும் யூ.என்.பி. அரசாங்கத்தினால் இரத்தக் தடாகமாக்கப்பட்டுள்ளது.

'கடந்த வாரத்தில் இருந்து கிடைக்கும் தகவல்களின்படி இலங்கை இராணுவம் பரந்தளவில் யாழ்ப்பாண நகரத்துக்குகுண்டு வீசி, வருவதோடு அப்பாவி குடிமக்கள் நகரத்தின் பல பகுதிகளைக் கைவிட்டுச் சென்றுள்ளனர். கிராமங்களுக்கு தப்பியோடியுள்ளனர். சுன்னாகம். மாணிப்பாய் போன்ற உள்ளார்ந்த பகுதிகளும் குண்டு வீச்சுக்கு இலக்காகியுள்ளன.

''இந்தப் பரந்தளவிலான பேரழிவினை தமிழ்-சிங்களம் பேசும் தொழிலாள வர்க்கம் ஒன்றிணைந்து யூ. என். பி. இனவாத யுத்தத்துக்கும் சர்வாதிகார தயாரிப்புக்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவதன் மூலம் முதலாளித்துவ வர்க்க ஆட்சியை தூக்கி வீசி, இலங்கை - தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை ஆட்சிக்குக் கொணர்வதன் மூலமே முடிவுக்குக் கொணர முடியும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகின்றது.

'இனவாத ஆத்திரமுட்டும் பிரச்சாரம் மூலம் யூ. என்.பி. அரசாங்கம் யாழ்ப்பாணத்தினை மீண்டும் கைப்பற்றும் தமது மிலேச்சத்திட்டத்தினை அறிவித்துள்ளது. முழு யாழ்ப்பாணத்தினதும் பொது ஜனங்களை வவுனியாவில் நிறுவும் இரண்டு அகதிகள் முகாம்களில் குவித்து, விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நடாத்தும் திட்டம் ஜனாதிபதி பிரேமதாசவின் அங்கீகாரத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.''

*1990 அக்டோபர் 05ல் வெளியான—1200ம் இலக்க 'கம்கறு மாவத்த'* ஒரு முக்கிய செய்தியை தலையங்கமாகக் கொண்டிருந்தது, ''இனவாத யுத்தத்துக்கு எதிராகதொழிற் சங்கங்களை வழிநடாத்தும்படி தோட்டத் தொழிலாளர் கோரிக்கை'. ''பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள் தமிழர் விரோத இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றவும் ஒரு பொதுவேலை நிறுத்தத்தினை ஒழுங்கு செய்யும் வேலைத்திட்டம் பற்றிக் கலந்துரையாட ஐக்கியதோட்டத் தொழிலாளர் சங்கத்தின் கிளைகளைக் கூட்டுமாறு கோரும் பெட்டிசத்தினை அச் சங்கத்தின் பதுளை பிராந்திய அங்கத்தினர்கள் தலைமைப் பீடத்துக்கு அனுப்பி வைத்துள்ளனர். அப்பெட்டிசத்தில் இதுவரை 58 தொழிலாளர்கள் கையொப்பமிட்டுள்ளனர்'' என்றது.

அத்தோடு ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அங்கத்தவர்கள் பதுளைப் பிரதேசத்தில் ஆரம்பித்துள்ள இப்பிரச்சாரத்தினை தோட்டப் பகுதி முழுவதிலும் நகர்ப்புறத்திலும் ஏனைய பகுதிகளிலும் தொழிற் சங்கங்களுள் பலம் வாய்ந்த இயக்கமாக் உடன் முன்னெடுக்க வேண்டும் என, வர்க்க நனவு படைத்த தொழிலாளர்களை 'கம்கறு மாவத்த' வேண்டுகின்றது' எனக் கேட்டது.

1990 அக்டோபர் 19ம் திகதி வெளிவந்த 1202ம் இலக்க 'கம்கறு மாவத்த', விடுதலை புலிகள் தலைமை அரசாங்கத்திடம் பேச்சுவார்த்தை கோருவதாக குறிப்பிட்டதோடு இது தமிழ் விடுதலைப் போராளிகளின் போராட்டத்தினை காட்டிக் கொடுப்பதாகும் என சுட்டிக் காட்டியது. 'தமிழ் விடுதலைப் போராளிகள் மாபெரும் தியாகங்களின் மூலம் இராணுவ வெற்றிகளை ஈட்டிக் கொண்டுள்ள போதிலும் விடுதலைப் புலிகள் தலைமைகளின் இன்றைய அரசியல் நெருக்கடியை கிட்டுவினதும் பாலசிங்கத்தினதும் அறிக்கைகள் அம்பலமாக்குகின்றன.'' எனக் குறிப்பிட்டது.

*1990 அக்டோபர் 26' 'கம்கறுமாவத்த'* 'அரசாங்கம் இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்குகின்றது' என்ற முதல் பக்க இரண்டாம் தலைப்புச் செய்தியுடன் வெளிவந்தது. அந்தச் செய்தி கூறியதாவது: ''யூ. என். பி. அரசாங்கம் அக்டோபர் 12ம் திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டினை கைப்பற்றும் பொருட்டு ஆரம்பித்த மக்கள் படுகொலை யுத்தத்தின் மூலம் ஏற்கனவே பிரமாண்டமான அழிவினை உண்டுபண்ணியுள்ளது'' என்றதோடு அரசாங்கப் படைகள் பலாலி விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியில் குண்டு வீச்சிலும் ஈடுபட்டுள்ளதோடு ஊர்காவற்றுறையில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் குண்டு வீச்சினால் நாசமாக்கப்பட்டது போன்ற செய்திகளை வெளியிட்டது.

*1990 நவம்பர் 09ல்* ''யூ.என் பி. மூன்று முகாம்களில் யுத்தம்' என்ற 'தலைப்புடன் வெளிவந்த 1204ம் இலக்க இதழ், முதலாளி வர்க்கம் தொழிலாள வர்க்கத்துக்கும் தமிழ் ஈழம் தேசிய இனத்துக்கும், கிராமப்புற ஏழைகளுக்கும் எதிராக யுத்தமிட்டுவரும் முறையையும் சகல ஒடுக்கப்படும் மக்களையும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் ஐக்கியப்படுத்தும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தினை புரட்சிகர வேலைத்திட்டத்தின் மூலம் ஆயுதபாணியாக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியது.

'கிராமப்புற படுகொலைகளை நிறுத்து' என்ற முதற் பக்கத் தலைப்புச் செய்தியுடன் வெளிவந்த 1990 நவம்பர் 23ம் திகதிய 'கம்கறு மாவத்த' 'நகர்ப்புற, தோட்டத் தொழிலாளர் வர்க்கம்... கிராமப்புற பயங்கரங்களும் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான யுத்தமும் தமது தலையில் கட்டியடிக்க தயார் செய்யப்படும் இராணுவ சர்வாதிகாரத்துக்கான திட்டத்தின் ஒரு பாகமாகும்' என புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெற்கில் கிராமப்புற கிளர்ச்சிகளும் வடக்கில் விடுதலைப் போராட்டமும் தொழிலாளி வர்க்கப் போராட்டங்களும்ஒருதொழிலாள வர்க்கப் புரட்சித் தலைமையின் கீழேயே ஐக்கியப் படுத்த முடியும் எனவும் அச் செய்தி சுட்டிக்காட்டியிருந்தது.

அதே இதழ் இஸ்லாம் மத தமிழ் ஈழம் தேசிய இனத்தினை வட - கீழ் மாகாணங்களில் இருந்து விரட்டியடிக்க விடுதலைப் புலிகள் தலைமை எடுத்த பிற்போக்கு நடவடிக்கை தமிழ் விடுதலைப் போராட்டத்தினை ஆபத்தில் மாட்டும் விதத்தினையும் விபரித்தது.

1990 டிசம்பர் 7ல் வெளியான 1204ம் இலக்க கம்கறு மாவத்த' இதழ், ''கிராமப்புற படுகொலைகளுக்கும் தமிழர் விரோத இனவாத யுத்தத்துக்கும் உலகவங்கி தாக்குதல்களுக்கும் எதிராக பொது வேலைநிறுத்தத்தினை தயார் செய்!'' என்ற போராட்ட சுலோகத்தினை கொண்ட தலைப்புச் செய்தியுடன் வெளிவந்தது.

1990 டிசம்பர் 14ம் திகதி 'கம்கறு மாவத்த' 'யாழ்ப்பாணத்தில் நடைபெறுவது என்ன?' என்ற இரண்டு பக்கக் கட்டுரையுடன் வெளிவந்தது, இதில் கண்ணால் கண்ட செய்திகள் இடம் பெற்றன. அத்தோடு இக்கட்டுரை 1989 மே மாதத்தில் இருந்து விடுதலைப் புலிகள் தலைமை, யூ. என். பி. அரசாங்கத்துடன் நடாத்தி வந்த சமரசங்களுக்கு எதிராக தமிழ் ஈழம் கிளர்ந்து எழுந்த விதமும் ஜூனில் மீண்டும் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து அபிவிருத்தி கண்ட நிலைமையும் விரிவாக காட்டப்பட்டது. யாழ்ப்பாணம் கோட்டையை மீட்டுக் கொள்ள அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தோல்விகண்ட விதத்தினை விபரித்த அக்கட்டுரை, அரசாங்கத்தின் காட்டுமிராண்டித் தாக்குதல்கள் மக்கள் வாழ்க்கையை எந்தளவுக்கு நாசமாக்கியது என்பதையும் விளக்கியது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் அதன் 'தொழிலாளர்பாதை' 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளும் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச அரசாங்கத்தின் இனவாத இரத்தக் களரியில் இருந்து காக்கத் தொடுத்த கொள்கை ரீதியான போராட்டத்தின் ஒரு குட்டி அறிக்கையே இது.

## மூடிமறைப்பு

தமிழ் விடுதலைப் போராட்டத்தினை காக்க தெற்கில் இருந்து எந்தவொரு இயக்கமும் முன்வரவில்லை என விடுதலைப் புலிகள் தலைமை கூறும்போது அது அனைத்துலகக் குழுவினதும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினதும் அதன்பத்திரிகைகளதும் இந்த அறிக்கையை மூடிமறைக்கிறார்கள். அது இந்தத் தலைவர்களின் அரசியலுக்குப் பொருத்தமானது. அவர்கள் பிரேமதாச அரசாங்கத்திடமிருந்து இல்லாது போனால் சி. ல. சு, க. உட்பட ஏனைய முதலாளித்துவ கட்சிகளதும் சந்தர்ப்பவாத தலைவர்களதும் ஆதரவினையே எதிர்பார்க்கிறார்கள். தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தை காக்கவும் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிசமாக ஸ்தாபிதம் செய்யவும் கூடிய பாட்டாளி வர்க்கத்தினை அணிதிரட்டும் புரட்சிகர வேலைத்திட்டத்திற்கான போராட்டத்திற்கும் விடுதலைப் புலிகள் தலைமைக்கும் தொடர்பு இல்லாதது மட்டுமன்றி அவர்கள் அதற்கு எதிரிகளுமாவர்.

விடுதலைப் புலிகள் தலைமையின் அரசியல் வங்குரோத்தும் ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கும் நாளுக்கு நாள் அம்பலமாகுவதோடு, தமிழ் ஈழம் பிராந்தியத்தில் தொழிலாளர்களதும், ஒடுக்கப்படும் மக்களதும் விடுதலையை பெற்றுத்தரக்கூடிய ஒரே நிச வேலைத்திட்டம் பு. க. க. முன்வைக்கும் வேலைத்திட்டமே என்பதும் உறுதியாகி வருகின்றது.

'உலக நாடுகள் தமது இயக்கத்தை அங்கீகரிப்பது' பற்றி விடுதலைப் புலிகள் தலைமை முன்வைத்துவரும் கொள்கையானது அவர்களுக்கு நல்ல வாய்ப்பான நிலைமைகளின் கீழ்தன்னும் தமிழ் ஈழம் பிராந்தியத்தில் விடுதலைப் புலிகள் தலைமை தமிழ் ஈழம் பதாகையின் கீழ் ஏகாதிபத்திய மிலேச்ச சுரண்டலின் கங்காணிகளாக இருப்பதைக் குறிக்கும்,

தமிழ்ஈழம் விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப்

(அடுத்த இதழில் தொடரும்)

படிப்பகம்

www.padippakam.com



### மாட்ரிட் அனைத்துலக மகாநாடு:

# புஷ் விரும்பும் 'சமாதானம்' மத்திய கிழக்கு ஒடுக்கப்படுவோருக்கு எதிரானது

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையில் மாட்ரிட் நகரில் கூட்டப்பட்ட அனைத்துலகமகாநாடு, பல நூற்றாண்டுகளாக காலனித்துவ மேலாதிக்கத்தினாலும் ஏகாதிபத்திய ஒடுக்குமுறையினாலு முண்டான தேசிய, சமூக, பொருளாதார முரண்பாடுகளால் நாசமாக்கப்பட்ட ஒரு பிராந்தியத்திற்கு சமாதானத்தை வழங்கப் போவதில்லை. புஷ் நிர்வாகமும், முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இம்மகாநாட்டினை 'சமாதானத்திற்கான ஒரு வரலாற்று சந்தர்ப்பம்' என வருணித்துக் கொள்கின்றன. என்ன மோசடி!

'சமாதானம்' என்ற வார்த்தை மூலம் ஜனாதிபதி புஷ்சும் அவர் பிரதிநிதித்துவம் செய்யும் அமெரிக்க முதலாளித்துவ வர்க்கமும் கருதுவது, ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ளபலஸ்தீனியர்கள்அரபுத் தொழிலாளர்கள் விவசாயிகள்,இஸ்ரேலின்தொழிலாளர் கருதுவதில்இருந்து முற்றிலும் வேறுபட்டது.ஏகாதிபத்தியம் வெகுஜனங்களை முதலாளித்துவச் சுரண்டலில் இருந்தும் தேசியப் பிளவுகளில் இருந்தும் விடுதலை செய்ய முயற்சிக்கவில்லை. சமாதானத்துக்கான நிச அடிப்படை அதுதான். மாறாக அது அப்பிராந்திய மக்களையும் வளங்களையும் உக்கிரமாகச் சுரண்ட முயற்சிக்கின்றது,

மத்திய கிழக்கின் முதலாளித்துவ நலைவர்களை வாஷிங்டன் பிரட்டல்கள், லஞ்சங்கள் மூலம் இம்மகா நாட்டில் கூட்டியது. மாட்ரிட்டில் இடம்பெற்ற பகிரங்க பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இரகசிய இராஜதந்திர குளறுபடிகளும், திரைமறைவு பேச்சுவார்த்தைகளும்இடம்பெற்றன. இவை எல்லாம் மத்திய கிழக்கு உழைக்கும் மக்களின் இழப்புக்களின் பேரிலேயே இடம் பெற்றன.



ஜோர்ஜ் புஷ்



யசிர் அரபாத்

இவற்றின் மூலம் என்ன தான் உடன்பாடுகள் ஏற்பட்டாலும் மத்திய கிழக்கு, யுத்தங்கள், புரட்சிகளின் வடிவில் முன்னொருபோதும் இல்லாத அளவிலான பாரிய வெடிப்புக்களுக்கு முகம் கொடுக்கும். இப்பிராந்தியத்தின் பிரச்சினைகள் அந்தளவுக்கு பரந்த வரலாற்றுப் பரிமாணத்தைக் கொண்டுள்ளதோடு பொருளாதார பேரழிவின் விழிம்பில் உள்ள அமெரிக்க ஏகாதிபத்தியம் இவற்றினைத் தீர்த்து வைக்கும் நிலையில் இல்லை. இப்பிரச்சினைகள் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் மத்திய கிழக்கு, ஆபிரிக்கா, ஆசியாவில் கரைபுரண்டோடிய காலனித்துவத்துக்கு எதிரான வெகுஜன இயக்கத்தினை கருச்சிதையச் செய்வதிலேயே வேரூன்றியுள்ளன. இந்த இயக்கத்தினைச் சிரச்சேதம் செய்யும் பொருட்டு ஏகாதிபத்தியவாதிகள் தேசிய முதலாளி வர்க்கத்தின் பிரதிநிதிகளுக்கு பெயரளவிலான அரசியல்அதிகாரத்தை கைமாற்றினர். உண்மையில் ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதார நலன்கள் தொடர்ந்தும் தீண்டப்படாமல் இருந்து வந்தன. பழைய காலனித்துவச் சக்திகள் மனம்போன போக்கில் வரைந்த கோடுகளின் அடிப்படையிலேயே ஒரு தொகை தேசிய அரசுகள் பிரிக்கப்பட்டன. முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் அவர்கள் மத்திய கிழக்கைக் கூறுபோட்ட போது, இந்த அரசுகள் ஏகாதிபத்தியத்தின் மேல் தொடர்ந்தும் தங்கியிருக்கும் விதத்தில் பார்த்துக் கொண்டனர். பிரித்தானிய மாஜி காலனியாக விளங்கிய பாலஸ்தீனம், சியோனிச இஸ்ரேல் அரசினை நிர்மாணிக்கவும் ஏகாதிபத்திய பிடியினை மேலும் பலப்படுத்திக் கொள்ளவும் பயன்படுத்தப்பட்டது. நாசிகளால் 60 இலட்சம் யூதர்கள் கொன்று குவிக்கப்பட்ட வேளையில் அவர்கள் தமது நாடுகளில் காலடி வைக்கவும் இடமளிக்க மறுத்த ஏகாதிபத்திய ஆட்சியாளர் திடீரென பாலஸ்தீனத்தில் ஒரு யூதர் அரசினை அமைக்கும் 19ம் நூற்றாண்டின் சியோனிச பிற்போக்கு எண்ணத்தினை அரவணைத்துக் கொண்டனர். ஐரோப்பிய யூதர்களின் நிலைமையை யிட்டு அனுதாபம் காட்டுவதன்றி, மத்திய கிழக்கினை மேலும் பிளவுபடச்செய்வதற்கான திட்டமிட்ட நடவடிக்கையாக இதில் இறங்கினர்.

இம்மகாநாட்டிற்கு ஜோர்ஜ் புஷ் தலைமை தாங்குகின்றார் இவர்பாரசீக வளைகுடாவில் இலட்சோப இலட்சம் ஈராக் போர்வீரர்கள், தொழிலாளர்கள், பெண்கள், குழந்தைகளை கொன்று, இரத்தக்களரியில் நீச்சலடித்து வந்துள்ளார். மாஸ்கோவில் சரிந்துபோன ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் மிகைல் கொர்பச்சேவ், இம்மகாநாட்டில் ஏகாதிபத்தியத்தின் 'பபூன்' ஆக கோணங்கி விளையாட்டில் ஈடுபட்டுள்ளார். 'அமெரிக்க மத்திய கிழக்கு இராஜதந்திரத்தின் ஆயுதமாக சோவியத் மாறியுள்ளது என கூறுவது கூட்டி மதிப்பிடுவதாகாது' என 'நியூயோர்க் டைம்ஸ் குறிப்பிட்டது.

'காம்ப்டேவிட்' ஒப்பந்ததின் வாரிசான ஹஸ்னி முபாரக், டெல்-அல்-சத்தா படுகொலைகளின் அசாத் மட்டுமன்றி இறுதியில் பாலஸ்தீன விடுதலை இயக்க தூதுக் குழுவும் இதில் கலந்து கொண்டுள்ளது, பல்லாண்டுகால ஈடிணையற்ற போராட்டம், பிரமாண்டமான தைரியத்தின் பின்னர் பீ. எல். ஓ. தலைமை யுத்தத்தின் பின்னைய முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களான fln (அல்ஜீரியா) தேசாபிமான முன்னணி (சிப்பாபே)யின் காலடியில் சென்று தனது சொந்த மக்களை விற்றுத்தள்ள ஏகாதிபத்தியம் கூட்டிய மகாநாட்டில் உட்கார்ந்து கொண்டுள்ளது.

பீ.எல்.ஓ-தலைமை மாட்ரீட் மகா நாட்டை அங்கீகரித்தமை, ஏகாதிபத்தியத்துக்கும், சியோனிசத்துக்கும் எதிரான பாலஸ்தீன மக்களின் நீண்ட காலப் போராட்டத்தையே காட்டிக்கொடுப்பதாக உள்ளது. இந்த மகாநாட்டில் பீ. எல். ஓ.வின் பிரசன்னத்தைக் கூட இஸ்ரேல் நிர்ணயம் செய்யுமளவிற்கு இச்சமாதான, மகாநாட்டின் இலட்சணம் உள்ளது. ஒரு அனைத்துலக புரட்சிகர வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அரபுத் யூதர் தொழிலாள வர்க்க, தினை ஐக்கியப்படுத்துவதன் மூலம் மட்டுமே மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியத்துக்கும், சியோனிசத்துக்கும் எதிரான போராட்டத்தை நடாத்த முடியும். நான்காம் அகிலம், மத்திய கிழக்கு ஐக்கிய சோசலிச அரசுகளை அமைக்கப் போராடுகின்றது. மத்திய கிழக்கு பூராவும் அனைத்துலகக் குழுவின் கிளையை அமைப்பது இன்று உடனடிப் பணியாகியுள்ளது,

---

# மத்திய வங்கி: சம்பள கோரிக்கையின் மீது வர்க்க நடவடிக்கையில் இறங்க ஊழியர் தீர்மானம்

மத்திய வங்கி ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை வென்றெடுக்கும் பொருட்டு தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதென நவம்பர் 7ம் திகதி கூடிய மத்திய வங்கி ஊழியர் சங்க அங்கத்தவர்கள் ஏகமனதாக தீர்மானம் செய்தனர்.

சங்கம் சமர்ப்பித்துள்ள சம்பள கோரிக்கைக்கு தீர்வு வழங்க 24 மணித்தியால காலக்கெடு வழங்கவும், அது நிராகரிக்கப்படுமிடத்து நவம்பர் 11ம் திகதி தொடக்கம் மறியல் போராட்டத்தில் இறங்கவும், அதன் பின்னரும் கோரிக்கைகள் நிறைவேற்றப் படவில்லையானால் உலகவங்கித்தாக்குதலுக்கு முகம் கொடுத்துள்ள ஏனைய தொழிலாளர்களுடன் சேர்ந்து பொது வேலைநிறுத்தத்தில் குதிக்க வேண்டும் எனவும் தீர்மானம் செய்யப்பட்டது

எச்.எம்.பி.ஹேரத்தினால் சமர்பிக்கப்பட்ட இப்பிரேரணைஅங்குகூடியிருந்த சுமார் ஆயிரம் ம. வ. ஊ. ச. அங்கத்தினரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. ம. வ. ஊ. ச. மாஜி. செயலாளரான எச். எம். பி. ஹேரத் சங்கத்தினை அணிதிரட்ட முன்நின்றதன் காரணமாக வேட்டைக்குள்ளாகி கடந்த செப்டம்பர் மாதம் தொடக்கம் மத்திய வங்கி அனுராதபுர பிராந்தியப் பணிமனைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

ம. வ. ஊ. ச. பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ள நவசமசமாஜ கட்சி சே. தோ. கருணாரத்னஉள்ளடங்கலான சந்தர்ப்பவாதிகளால் சமர்ப்பிககப்பட்ட 'கறுப்பு பட்டி' இயக்கம் அங்கத்தவர்களால் நிராகரிக்கப்பட்டது. மத்திய வங்கி நிர்வாகத்துக்கு அடிபணியும் இந்த உயிரற்ற வேலைத்திட்டத்தின் நோக்கம், நிர்வாகத்தின் விருப்பு, வெறுப்புக்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சம்பளத்திட்டத்துக்கு இணங்கிப் போவதே. நிர்வாகத்துக்கு 24 மணித்தியால காலக்கெடு போதியதல்ல எனவும் இச்சந்தர்ப்பவாதிகள் முனகிக் கொண்டனர்.

பல மாதங்களாக சம்பளக் கோரிக்கையை இழுத்தடித்து விட்டு, தமது விருப்பு வெறுப்புக்கேற்ப தயார் செய்யப்பட்ட சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் பாக்கிப் பணமும் 24 மணித்தியாலத்துள் செலுத்த முடியுமானால், ஏன் 24 மணித்தியாலத்துள் சங்கத்தின் கோரிக்கைகளை அமுல் செய்ய முடியாது? என எச். எம். பி. ஹேரத் கேட்டார். நிர்வாகத்தின சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் செலுத்தப்பட இருந்த சம்பள பாக்கிப் பணத்தையும் ஊழியர்கள் ஏற்க மறுத்துள்ளனர்.

ஹேரத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை ஏகமனதாகநிறைவேற்றியதோடு அதன்படி தொழிற்படுமாறு சங்கத் தலைமைப் பீடத்தினை நெருக்கினர். சே.தோ கருணாரத்ன—எம்.டி. பிரேமதாச தலைமை நடுங்குவதைக் கண்ட ஒரு அங்கத்தவர் கூறியதாவது: பயம் வேண்டாம், தொழிற்சங்க நடவடிக்கையில் அங்கத்தவர்கள் முன்னணியில் நிற்பதாக' கூறினார். கூட்டத்தில் பேசிய டபிள்யூ. ஜயவீர, 'அங்கத்தவர்களின் கோரிக்கையின்படி போராட்டத்தினை நடாத்த முடியாது போனால் தலைமை இராஜினாமாச் செய்ய வேண்டும், எனக் கூறினார்.

வடக்கு — கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இடம்பெறும் யுத்தத்துக்கு செலவிட நேரிட்டுள்ளதாலும், அரசாங்கம் செலவு வெட்டில் ஈடுபட்டுள்ளதாலும சம்பளத்தை அதிகரிக்க முடியாது என மத்திய வங்கி ஆளுனர் கூறியிருந்தார். இன்று அரச வர்த்தக வங்கிகளில் சம்பள அதிகரிப்பின் பின்னர் தமது மனம்போன போக்கில் சம்பள அதிகரிப்பை தயார் செய்துள்ளார். இத்திட்டத்தின் படி சிற்றூளியர், எழுதுவினைஞர் தரங்களைச் சேர்ந்தவர்களுக்கு குறைந்தபட்ச சம்பள உயர்வும், அதிகாரிகள் தரத்துக்கு அதிகபட்ச சம்பள உயர்வும் கிடைத்துள்ளது. இதன்படி சம்பளத்தில் பெரும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டுத் திட்டம் சிறிது காலத்துக்கு முன்னர் உலக வங்கி கட்டளையின் பேரில் வனசிங்க கமிட்டியால் தயார் செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



## முதலாளித்துவ மக்கள் முன்னணி வேண்டாம்! யூ. என். பி.யை வெளியேற்ற

# பொது வேலைநிறுத்தத்துக்கு தயார் செய்!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக
அரசியல் குழுவின் அறிக்கை

### தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்துக்கு போராடு!

சமசமாஜத் தலைவர்கள் வெண்ணிற ஆடை போர்த்தும் லலித் அத்துலத்முதலி—காமினி திசாநாயக்கபேர்வழிகள் நேற்று ஜயவர்தனா — பிரேமதாச அரசாங்கங்களில் ஒன்றாக இரத்த வெள்ளத்தில் நீச்சலடித்து, இன்று 'பாராளுமன்ற ஜனநாயகத்தை' நோக்கித் திரும்ப வந்திருப்பவர்கள் அல்ல. ஜனநாயக இயக்கம் எனப்படுவதன் உச்சியில் உள்ள சி. ல. சு. க. தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஜனநாயகத்தின் தரத்தினை 1971 — 1977 அவசரகாலச் சட்ட சர்வாதிகார ஆட்சியின்போது இரத்தக் களரிகளுக்கு முகம் கொடுத்ததன் மூலம் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்கள் அனுபவித்தனர். இது சமசமாஜ — கம்யூனிச கட்சித் தலைவர்களின் காட்டிக் கொடுப்பின் புண்ணியத்தால் கிடைத்தது. இவர்களின்இந்த 'ஜனநாயக இயக்கம்' 1971 — 1977ல் கூட்டரசாங்க அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக எனக் கூறிக் கொண்டு இன்றைய பொனபாட்டிச சர்வாதிகார அரசியலமைப்புக்கும் அரை—இராணுவ ஆட்சிக்கும் வழிவகுக்கும் பொருட்டு பிரேமதாச, திசாநாயக்க, அத்துலத்முதலியுடன் கூட்டாகஜயவர்தனாவீதிக்கு கொணர்ந்த ஜனநாயக இயக்கத்துக்கு அணுவளவும் கயமையில் குறைந்தது அல்ல. அதற்குப் பதிலாக இது ஏகாதிபத்திய, காலனித்துவ நலன்களுக்குச் சேவை செய்யும் இலக்கினால் நிரம்பி வழிந்தது.

'இன்றைய அரசியல் பணி' யாகவும், 'முதல் நடவடிக்கை'யாகவும் முதலாளித்துவ தலைவர்கள் வகுத்துக்கொண்டுள்ளவையும் செய்யவேண்டியவை என சமசமாஜ — கம்யூனிச—நவசமசமாஜ தலைவர்கள் சிபார்சு செய்துள்ள 'பாராளுமன்ற ஜனநாயகத்தின்' தரத்தினை இலங்கையில் அறியாத தொழிலாளர் - ஒடுக்கப்படுவோர் யார்?

## வரலாறு

1947 சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் 1948ல் சுதந்திரம் எனப்படுவதை வழங்க பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் தீர்மானம் செய்தனர். 'தேசிய' முதலாளிகளின் கைக்கு அரசியல் அதிகாரத்தினை மாற்றி, 'பாராளுமன்ற ஜனநாயகம்' என்ற பேரில் ஆட்சி அமைப்பைத் திணித்தனர். நான்காம் அகிலத்தின் கிளையான இந்திய போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சியைச் சூழ தொழிலாளர் - ஒடுக்கபபடும் மக்கள் ஈர்க்கப்படுவதையும், தேசிய புரட்சிகரப் போராட்டத்தின் அபிவிருத்தியை நசுக்கவுமே இது இடம்பெற்றது. முழு இந்தியத் துணைக் கண்டத்திலும் ஏகாதிபத்திய அமைப்பின் கை பாகமாக இங்கு நிர்வாக அமைப்புத் திணிக்கப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்தைத் துண்டாடி, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை என்ற ஒற்றையாட்சி அரசுகள் உருவாக்கப்பட்டன. இவை ஏகாதிபத்தியவாதிகள் வரைந்த எல்லைகோடுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டன. இந்தப் 'பாராளுமன்ற ஜனநாயகத்தின்' முதலாளித்துவ அரசியல் உபாயத்தின் அடிக்கல்லாக இன-மத மோதுதல்கள் சிருஷ்டிக்கப்பட்டன. தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள், திசை திருப்பப்பட்டனர், இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டனர். முதலாளித்துவத்தின் ஆரம்பக் கட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட விதிமுறையான ஜனநாயக உறவுகள் கூட இந்த பாராளுமன்ற ஜனநாயகம் எனப்படுவதாகவிளங்கவில்லை. தொழிலாள வர்க்கத்தின் எந்தவொரு அடிப்படைச் சமூகப் பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது விவசாயிகளினதும் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய சிறுபான்மையினரினதும் ஜனநாயக உரிமைகளை உறுதி செய்யவோ ஏகாதிபத்தியவாதிகளுக்கு வம்பில் பிறந்த ஒட்டுண்ணி முதலாளி வர்க்கம் வெற்றி காணவில்லை. அது அந்த உரிமைகளுக்கு எதிராக நின்று வந்தது.

1948ல் இலங்கையின் முன்னேற்றமான தொழிலாளர்கள் இந்த ஏகாதிபத்தியச் சார்பு 'சுதந்திரமும்' ஆட்சி முறையும் மோசடியானவை எனக் காட்டி நான்காம் அகிலத்தின் போல்ஷிவிக்-சமசமாஜக் கட்சியின் தலைமையில் கொழும்பில் ஊர்வலம் நடாத்தினர்.

அவர்களை ஊர்ஜிதம் செய்யும் வகையில் இந்த பாராளுமன்ற ஜனநாயகம் எனப்படுவதன் கீழ் தொழிலாளர் — ஒடுக்கப்படுவோர் படித்தது என்ன?1948 ஆகஸ்டில்-அன்று தொழிலாள வர்க்கத்தின் பெரும்பான்மையினரும், இன்னமும் முக்கிய தனிப் பெரும்பான்மை குழுவுமான தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, இன வேறுபாட்டின் அடிப்படையில் முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்தினால் ஒழிக்கப்பட்டது. 1953 ஹர்த்தாலில் 9 தொழிலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது இந்த 'பாராளுமன்ற ஆட்சி'யின் கீழேயே. 1956ல் தனிச்சிங்கள இயக்கத்தினை நடாத்தியதும் 1958 அவசரகாலச் சட்டத்தின் கீழ் தமிழ் ஒடுக்கப்படும் மக்களை அடக்குவதை இனக் கலவர மட்டத்துக்கு இட்டுச் சென்றதும், 1959ல் தொழிலாளர்களுக்கு எதிராக அத்தியாவசிய சேவை சர்வாதிகார விதிகளை இயற்றியதும், 1964ல் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவுக்கு நாடுகடத்தும் சட்டம் இயற்றியதும், 1971-77 அவசரகால சர்வாதிகார ஆட்சியின் கீழ் 15,000 கிராமப்புற இளைஞர்களைக் கொன்று தள்ளியதும் இந்த 'பாராளுமன்ற ஜனநாயகத்தின்' கீழான இந்த 'ஜனநாயக முதலாளி'களே.

1978ல் இலங்கை முதலாளிகள், 1970-77 முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தின் கீழ் சமசமாஜ-கம்யூனிச தலைவர்கள் நடாத்திய கொலைகார காட்டிக் கொடுப்புக்களைப் பயன்படுத்தி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி அரசியலமைப்புக்குப் பாய்ந்தனர்.

1968-75ல் யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய நெருக்கடியின் முதற் கட்டத்தில் அடிபட்ட இலங்கை முதலாளிகளின் பொருளாதார விதிமுறைகள் வங்குரோத்தடைந்து, நெருக்கடிக்குள்ளாகின. இக்கட்டத்தில் உலகம் பூராவும் ஆரம்பமாகியிருந்த ஏகாதிபத்திய மூலதனப் பாய்ச்சலுக்கு கதவு திறக்கும் பொருட்டு கிளர்ச்சியில் ஈடுபட்டு வந்த தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள், தமிழ் ஒடுக்கப்படுவோரை துரோகத் தலைவர்களின் காட்டிக் கொடுப்பைப் பயன்படுத்தி அரசபடை அணிகளைக் கொண்டு அடக்கும்பொருட்டு ஜயவர்தனாவின் 1978 சர்வாதிகார அரசியலமைப்பு கொணரப்பட்டது. இன்று யூ. என். பி - சி.ல.சு. க.வில் உள்ள இலங்கை முதலாளிகளின் முக்கிய குழுவினர் 'பாராளுமன்ற ஜனநாயகம்' பற்றி மோசடியாகக் குறிப்பிடக் காரணம் இந்தத்தேவைகளும், நெருக்கடியும் தணிந்து போய் விட்டது அல்ல. ஏகாதிபத்தியவாதிகளதும் அவர்களது கையாட்களதும் தேவையும், நெருக்கடியும் உக்கிரமடைந்துள்ள நிலையிலேயே பேசிக் கொள்கின்றனர். அது முதலாளிகளது கேவலம் எதிர்ப்புரட்சி தயாரிப்புக்கும், தலைவர்களது துரோக மோசடிக்கும் நல்ல அடையாளம். ஜனநாயகம் பற்றிய ஊழையிடலின் உள்ளடக்கம் ஏகாதிபத்தியவாதிகளுக்கும், ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளுக்கும் உரிய விதத்தில் சுரண்டும் ஜனநாயகமாகும்.

முதலாளிவர்க்கத்தின்இந்த எதிர்ப்புரட்சிப் பயணம் நிச்சயமாக இரத்தத்தினால் வரையப்பட்டுள்ளது: இந்த ஏகாதிபத்திய சகாப்தத்தில் பின்தங்கிய நாடுகளின் முதலாளி வர்க்கங்கள் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியின் எந்தவொரு பாத்திரத்தினையும் இட்டு நிரப்புவதில் வெற்றிகாணப்போவதில்லை.

## பாராளுமன்ற ஜனநாயகம்

முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தை உண்டு பண்ணுவது எப்படியும்தொழிலாள வர்க்கத்தின் வேலைத் திட்டம் அல்ல. ''பாராளுமன்ற ஜனநாயகம்'' என்பது முதலாளித்துவ மூலதனத்தின் சர்வாதிகாரம் கொணரும் ஆட்சி வடிவமாகும். முதலாளித்துவம் வீழ்ச்சி அடையும் போது பாராளுமன்ற ஜனநாயகமும் வீழ்ச்சி அடைகின்றது. இராணுவ, பாசிச விதிமுறை ஆட்சிகளுக்கு முதலாளித்துவ ஆளும் வர்க்கம் திரும்புகின்றது.

பாட்டாளி வர்க்கமும்அதன் புரட்சிக் கட்சியும் பாராளுமன்றத்தைப் பயன்படுத்துகின்றது. அங்ஙனம் செய்வது பாராளுமன்றம் உட்பட முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கி வீசவும் பாராளுமன்றம் எனப்படுவதன் சுய கோலத்தை அம்பலப்படுத்தவும், புரட்சிகர பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் செல்லும் ஒரு மேடையாக மட்டுமே. எனினும் பாட்டாளி வர்க்க புரட்சிகரப் போராட்டத்தின் மேடை அதுவல்ல. பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு எதிராக வர்க்க எதிரியின் முகாமுக்கு ஓடிச் சென்ற கவுட்ஸ்கிக்கு எதிராக லெனின் வழங்கிய பதிலை இன்று இந்தத் துரோகத் தலைவர்களின் நிச கோலத்தை புரிந்து கொண்டு வர்க்க எதிரிக்கு எதிரான போராட்டத்துக்குத் தயார் செய்யும் பொருட்டு பாட்டாளி வர்க்கம் கற்க வேண்டும்:

''...ஆனால் கவுட்ஸ்கி மறந்து போகும் விதத்தில் முதலாளித்துவப் பாராளுமன்ற முறையின் வரலாற்று எல்லைகள், பாரம்பரிய எல்லைகளை ஒரு லிபரல்வாதியால் மட்டுமே மறந்து போக முடியும் என்பதை குறிக்கிறது 'ஜனநாயகம்' வெளிப்படுத்தும் விதிமுறை சமத்துவங்களும் பாட்டாளி வர்க்கத்தினை சம்பள அடிமைகளாக்கும் அத்தகைய ஆயிரக்கணக்கான நிச எல்லைகளுக்கும் மோசடிகளுக்கும் இடையேயானபாரியமுரண்பாடுகள்மிகவும்ஜனநாயக ரீதியிலான முதலாளித்துவ அரசில் கூட ஒடுக்கப்படும் மக்களுக்கு அடிக்கடி சந்திக்கின்றன. முதலாளித்துவ அமைப்பின் நாற்றம் கண்ட பொய்யான, மோசடியான அமைப்பினைக் காணும் விதத்தில் மக்களின் கண்களை இம்முரண்பாடுகள் ஈர்க்கின்றன. மக்களைப் புரட்சிக்குத் தயார் செய்யும் பொருட்டு: சோசலிசத்தின் பிரச்சாரகர்களாலும் தினமும் அம்பலப் படுத்தப்படுவதும் இம்முரண்பாடுகளே! இப்போது புரட்சியின் சகாப்தம் ஆரம்பமாகியுள்ளதால் கவுட்ஸ்கி அதற்குப் புறமுதுகு காட்டி, மரணத்தறுவாயில் உள்ள முதலாளித்துவ ஜனநாயகத்தின் அழகினைப்பற்றி வர்ணிக்கத் தொடங்கியுள்ளார்'' (லெனின் திரட்டிய நூல்கள் தொகுதி எண் 9 — சிங்களம் பக்கம்—27)

தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டு வரும் எதிர்ப்பினை முதலாளித்துவ பிற்போக்காளர்களின் கைக்குள் தள்ளிவிடும் விதத்தில் வாய்க்கால் பறிப்பதில் சமசமாஜ கம்யூனிச. நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் நனவான முறையில் தொழிற்பட்டு வருகின்றார்கள் என நாம் குற்றம் சாட்டுகின்றோம்: இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஸ்டாலினிச தலைவர்களின் கருத்தை வெளியிடும் விதத்தில் 1991 செப்டம்பர் 14ம் திகதி 'அத்த பத்திரிகையில் அரசியல் நிருபரின் கட்டுரை கூறியதாவது: ''இன்று போராட்டத்துக்கு (!) கிளம்பியுள்ள பல்வேறு சக்திகளை நிறைவேற்றுஜனாதிபதி முறையை அகற்றும் போராட்டத்தில் ஒன்றாக இணைப்பது எமது பொறுப்பாகும். புனித விடயங்களின் பேரில் இப்போராட்டத்தின் பிளவினை உண்டுபண்ணவும் அவர்களுக்கிடையே மோதுதலை உண்டுபண்ணவும் எடுக்கப்படும் சகல முயற்சிகளையும் நாம் தோற்கடிக்க வேண்டும்.''

ஸ்டாலினிஸ்டுகள் தெளிவாகக் கூறுவது இதுதான்: எமது எஜமான்கள் புதியஅணி திரள்வில் ஈடுபட்டுள்ளனர். தொழிலாளர்கள் ஒடுக்கப்படும் மக்களும் அவர்களின் சகல பிரச்சினைகளையும் புறத்தே தள்ளிவிட்டு, அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும்: அங்ஙனம் செய்யாமல் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் போராடினால், தொழிலாளர்களும்—ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவ கட்சிகளில் இருந்தும் சுயாதீனமாக அணிதிரட்டப் புரட்சியாளர்கள் முன்வந்தால்அவர்களை நசுக்க வேண்டும்!

அத்துலத்முதலி கும்பல் சி. ல. சு. க. தலைவர்களுடன் சேர்ந்து, பிரேமதாசவை தாண்டிச் சென்று, கிண்டிவிடும் தமிழர் விரோத இனவாத நெருப்புக்கு எண்ணெய் வார்க்க சமசமாஜ, கம்யூனிச. நவசமசமாஜ. தலைவர்கள் அணிதிரள்வது அவர்களின் காட்டிக்கொடுப்பின் எதிர்ப்புரட்சித் தன்மையை சுட்டிக் காட்டுகின்றது. ஸ்டாலினிச 'அத்த'வும் நவசமசமாஜ 'ஹரய'பத்திரிகைகளும் இந்த இனவாதப் பிரச்சாரத்துக்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ளன. சிங்கள, தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைக் கூறுபோடும் இந்த இனவாத ஆத்திரமூட்டல்கள் ஏகாதிபத்தியச் சார்பு சர்வாதிகாரத்தினை திணிப்பதற்கு பிற்போக்கு முதலாளி வர்க்கத்துக்கு அவசியப்படு

(8 -ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# முதலாளித்துவ மக்கள் முன்னணி....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கை**

கின்றது. இந்தச் சந்தர்ப்பவாதத் தலைவர்களின் சிங்கள இனவாதக்கூச்சலை வெறுத்து ஒதுக்குமாறு நாம் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றோம்.

## சுயாதீன வேலைத்திட்டம் இல்லை

பிற்போக்கு முதலாளித்துவக் கும்பல் சமர்ப்பித்த அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணையில் தொங்குவதன் மூலம் சமசமாஜ – கம்யூனிச - நவசமசமாஜ தலைவர்கள், ஏகாதிபத்தியவாதிகளில் இருந்தும், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்கத்தில் இருந்தும் சுதந்திரமான வேலைத்திட்டம் தமக்குக் கிடையாது என்பதை நிரூபித்துள்ளார்கள். ஒருதடவை சிறிமாவோ பண்டாரநாயக்காவினதும் மற்றொரு தடவை ஜயவர்தனாவினதும் பிறிதோர் தடவை பிரேமதாச அரசாங்கத்தினதும் ஏஜன்டுகளாக செயற்பட்ட இவர்கள், இன்று முதலாளிகளின் புதிய அணிதிரளல் மூலம் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களைஏகாதிபத்தியவாதிகளுக்கு அடிமைப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் 'மோசமான நிலைக்கு' முகம் கொடுப்பதாகவும் அதிலிருந்து விடுவிட முதலாளிகளின் ஜனநாயக இயக்கத்துடன் இணைய வேண்டும் எனவும் இத்தலைவர்கள் கூறுகின்றார்கள். இதன் மூலம் முதலாளிகளின் இன்றைய கொடிய ஆட்சி ஏதோ ஆகாயத்தில் இருந்து வீழ்ந்தது போல் இவர்கள் பேசிக்கொள்கிறார்கள். சமசமாஜ கட்சித் தலைவர்கள் 1964ல் ஸ்டாலினிச முதலாளித்துவ கைக்கூலிகளுடன் சேர்ந்து முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் நுழைந்ததோடு 1987ல் இந்திய ஆக்கிரமிப்புக்கு ஆதரவளிக்கும் 'மோசமான நிலை'யைத் தோற்றுவித்தனர். அத்தோடு ஏகாதிபத்திய ஆட்சி முறையை காக்கும் - முண்டு கொடுக்கும் இயக்கமாக ஆரம்பமான இந்த வேலைத்திட்டம் இன்று காலனித்துவத்துககு வக்காலத்து வாங்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது.

தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களைக் காட்டிக்கொடுக்கும் பப்லோவாத நவசமசமாஜ வலதுசாரி மத்தியவாத தலைவர்களின் நடவடிக்கைகளையிட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சிறப்பாக எச்சரிக்கை செய்கின்றது. 'ஜனநாயகத்தை' உருவாக்கும் முதல் நடவடிக்கையாக அத்துலத்முதலி கும்பல், சி. ல. சு. க, மற்றும் முதலாளித்துவ பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பொது அறிக்கையில் கையெழுத்திட்ட நவசமசமாஜ தலைவர்கள், இன்று சி. ல. சு. க.வுடன் மேடைகளில் ஏறி வருகின்றார்கள்: அதற்கிடையே 'தேசிய முன்னணி' அரசாங்கம் அமைப்பதை தாம் விரும்பவில்லை எனவும் இவர்கள் கூறிக்கொள்கிறார்கள். சி,ல.சு. க அத்துலத்முதலி கும்பல் 'விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாச அரசாங்கம் ஆயுதம் வழங்கியது' என்ற கூச்சலுடன் ஆரம்பித்துள்ள தமிழர் விரோத இனவாத பிரச்சாரத்துடன் மாட்டிக்கொண்டுள்ள இவர்கள் இதே சமயம் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை 'அங்கீகரிக்கும்படி அத்துலத்முதலி, திசாநாயக்காவுக்கு அழைப்பு விடுக்கின்றனர். அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணைக்கு சில கிழமைகளுக்கு முன்னர் யூ. என். பி.யுடன் தேசிய இன பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற தெரிவுக் குழுவில் சேர்ந்த நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் கமிட்டியில் உட்காரத் தாம் உடன்பாடில்லை என்றனர். இணங்கவில்லை என்கின்றனர். முதலாளிகன்னை ஏகாதிபத்தியச் சார்பு வேலைத்திட்டத்துக்கு தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களை அடிமைப்படுத்துவது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல என்பதை நன்கறிந்த இந்த மத்தியவாத துரோகக் கும்பல், அதற்கேற்பவே இந்த நனவான நடவடிக்கைகளில் குதித்துள்ளது என பு. க. க, சுட்டிக்காட்டுகின்றது.

இதற்கிடையே கடந்த 14 ஆண்டுகளாக இரண்டு யூ. என். பி. அரசாங்கங்களில் அமைச்சர் பதவிகளில் லஞ்சம் பெற்றுக் கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் தொண்டமான் செல்வச்சாமி தலைமை, ஜனாதிபதி பிரேமதாசவின் குண்டர் சர்வாதிகாரத்தின்எடுபிடிகளாக முன்வந்துள்ளனர். தொண்டமான் கூறியுள்ளதாவது: ''நிறைவேற்று ஜனாதிபதியைத் தெரிவு செய்கையில் சகல பிரஜைகளும் - பெரும்பான்மையினரைப் போலவே சிறுபான்மையினரும் விருப்பத்தை தெரிவிக்க வேண்டும். பாராளுமன்ற முறையில் பிரதமர் தெரிவு செய்யப்படுவது பெரும்பான்மை அரசியல் கட்சியினால் மட்டுமே.

''இலங்கை வரலாற்றை திரும்பிப் பார்க்குமிடத்து வெஸ்ட்மினிஸ்டர் பாணியிலான பாராளுமன்ற ஜனநாயகம் இருக்கும் போது தான் சகல வகையான பிரச்சினைகளும் உண்டானதாக எனக்குத் தெரிகின்றது.''

தாம் பிரதிநிதித்துவம், செய்வதாகக் கூறும் தோட்டத் தொழிலாளர்களிடையே யூ. என். பி, அரசாங்கத்தின் கொடிய தாக்குதல்களுக்கு எதிராக வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பினை ஒடுக்கும் பொருட்டு பொலிஸ் - இராணுவ - குண்டர் பலத்தைக் கட்டவிழ்க்க வெளிவெளியாகவும், மறைமுகமாகவும் ஆதரவளிக்கும் தொண்டமான், ஜனாதிபதி முறை பற்றிய வர்ணனையில் ஈடுபட்டுள்ளதன் நோக்கம் அவர் இராணுவ சர்வாதிகாரத்தினை அமைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார் என்பதே.

## விடுதலைப் புலிகள் தலைமை

பிரேமதாச அரசாங்கத்தின் நெருக்கடி உக்கிரம் கண்டதோடு விடுதலைப் புலிகள் தலைமையின் பிற்போக்கும், வங்குரோத்தும் மேலும் மேலும் அம்பலமாகத் தொடங்கியுள்ளது. பிரேமதாச அரசாங்கத்தினை 'தூக்கிவீசும் இயக்கத்துக்கு' ஆதரவு தரும்படி அவர்கள் 'பகிரங்கக் கடிதம்' மூலம் கேட்டுக் கொண்டுள்ளனர் ஏகாதிபத்தியவாதத்தில் இருந்து சுதந்திரமடையும் முக்கிய பணியினைக் கைநழுவ விட்டுள்ள இவர்கள், ஒருமுறை ஏகாதிபத்தியச் சார்பு இந்திய முதலாளி வர்க்கம் பக்கமும், மறுமுறை ஏகாதிபத்தியச் சார்பு பிரேமதாச அரசாங்கம் பக்கமும் கொடுக்கல் வாங்கல் நடாத்திய இவர்கள் இன்று மற்றுமோர் ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு கும்பல் பக்கம் இழுபட்டுள்ளனர். அவர்கள் ஆதரவளிப்பதாகக் கூறிக்கொண்டுள்ள முதலாளிகளின் இயக்கம், ஆரம்பம் முதலே தமிழர் விரோத இனவாதத்தினைத் தூண்டிவிட்டுள்ளமை இத்தலைவர்களின் வங்குரோத்தினை நிரூபித்துள்ளது.

அத்தோடு விடுதலைப் புலிகள் தலைமை சந்தர்ப்பவாத ரீதியில் பிரேமதாச அரசாங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்களுக்கும் காத்துக் கிடக்கின்றது.

ஜயவர்தனா அரசாங்கத்தினதும் இந்திய ஆக்கிரமிப்புப் படைகளதும், பிரேமதாச அரசாங்கத்தினதும் இனவாத யுத்தத்துக்கு பந்தம் பிடித்த தமிழர் கூட்டணி, ஈபிஆர்எல்எப் தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், இன்று இந்திய முதலாளிகளின் தலையீட்டுடன் லலித் அத்துலத்முதலி கும்பலுடன் வயிறளக்கின்றனர். அரச படைகளின் கூலிப்படைகளாகத் தொழிற்படும் புளொட். ஈபீடீபி தலைவர்கள், பிரேமதாச அரசாங்கம் இந்த மக்கள் படுகொலைகளை தொடர்ந்து நடாத்த வேண்டும் எனப் பிரச்சாரம் செய்கின்றனர். சிறிது காலத்துக்கு முன்னர் பிரேமதாச அரசாங்கத்தின் நெருக்கடியின் மத்தியில் பாராளுமன்றத்துக்கு வந்த ஈரோஸ் பா. உறுப்பினர்களின் முதல் நடவடிக்கை, தெற்கில் இரத்தக் களரிகளுக்கும் அவ்வாறே வடக்கு - கிழக்கில் கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்துக்கு தமிழ் ஒடுக்கப்படுவோருக்கு எதிரான யுத்தச் சட்டத்துக்கு வாய்ப்பளிக்கும் அவசரகாலச் சட்டத்தினைத் தொடர்ந்து நடாத்தச் சார்பாக வாக்களித்ததே,

இவை அனைத்தும் ஏனைய சகல முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களைப் போலவே இந்த தமிழ் குட்டி முதலாளித்துவஇயக்கங்களும் ஏதோ ஒரு விதத்தில் ஏகாதிபத்தியவாதிகளுடன் அல்லது ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுடன் சமாதானத்துக்கான பாதை தேடுவதன் மூலம், தாம் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொண்ட ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு எதிராகச் செயற்படுவதை மேலும் மேலும் எதிர்ப்புரட்சி கட்டத்துக்கு உயர்த்தி உள்ளனர்.

உலக ஏகாதிபத்தியஅமைப்பின் நெருக்கடியால் தோன்றியுள்ள இலங்கை முதலாளி வர்க்கத்தின் ஆழமான நெருக்கடியானது இலங்கை - தமிழ் ஈழம் பிராந்தியங்களின் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் தீர்க்கமான அரசியல் நிலைமைக்கு முகம் கொடுக்கத் தள்ளியுள்ளது. இந்நூற்றாண்டின்ஆரம்பத்தில் ஏகாதிபத்திய அமைப்பு நிலைநாட்டப்பட்டதும் உலகப் பாட்டாளி வர்க்கம், ஒடுக்கப்படும் மக்களின் எதிரில் உருவான சகல வரலாற்றுப் பிரச்சினைகளும் இன்று மீண்டும் தலைநீட்டியுள்ளது போலவே அதன் ஒரு பாகமாக பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவ ஆட்சிக் காலத்தில் திரட்டப்பட்டதும், 1948ல் சுதந்திரம் எனப்பட்டதன் பின்னர் கீழ்ப்படுத்த முயற்சிக்கப்பட்டதுமான தீர்க்கப்படாத சகல பிரச்சினைகளும் தொழிலாள வர்க்கத்தின் எதிரில் தலைதூக்கியுள்ளன. ஏகாதிபத்தியவாதிகள் காலனித்துவ சுரண்டலை மீண்டும் கோரி நிற்பதோடு, கைக்கூலி முதலாளிகள் காலனித்துவத்துக்கு தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் அடிமைப்படுத்த வேண்டிய தாக்குதலுக்குத் தயாராகி வருகின்றார்கள். நெருக்கடி நிறைந்த முதலாளி வர்க்க ஆட்சியை தூக்கிவீசும் பொருட்டு தொழிலாள வர்க்கம் கிராமப்புற ஏழைகள்' நகர்ப்புற ஒடுக்கப்படும் மக்களுடனான பிணைப்பினை உறுதி செய்து கொண்டு, பாட்டாளி வர்க்கத்தின் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சுயாதீனமாக அணிதிரள வேண்டும். ஏகாதிபத்தியத்தினைத் தூக்கிவீசும் பொதுப் போராட்டத்தின் ஒரு பாகமாக இப்போராட்டம் விளங்குகின்றது. இதன் நிச அர்த்தம், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துடனான ஐக்கியத்தினை உறுதி செய்வதன் அடிப்படையில் மட்டுமே இலங்கைத் தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் தமது போராட்டத்தினை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்ல முடியும்.

★ போனபாட்டிச ஜனாதிபதி அரசியலமைப்பில் இருந்து முதலாளித்துவ பாராளுமன்றத்துக்கு செல்வதற்கன்றி அவர்கள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பேராளர்களைக் கொண்ட அரசியலமைப்புக் சபையைக் கூட்டி, ஜனநாயக அரசியலமைப்பினை வரைந்து கொள்ளப் போராட வேண்டும், ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளுக்கு அங்கு பிரதிநிதித்துவம் கிடையாது. 1948 அரசியலமைப்பினையும் முதலாளித்துவ ஆட்சி முறையையும் ஒழித்துக் கட்டுவதும் 1972, 1978 அரசியலமைப்புக்களை ஒழிப்பதும், சகல ஒடுக்குமுறைச் சட்டங்களை ஒழிப்பதும், ஏகாதிபத்திய அரசாங்கங்கள், அமைப்புக்களுடனான சகல உடன்படிக்கைகளையும் அகற்றுவதும் தமிழ் தேசிய சிறுபான்மையினரின் சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்து, சகல தேசிய இனங்களுக்கும் சமஅந்தஸ்து வழங்குவதும், இன,மத வேறுபாடுகளைஒழிப்பதும்,தொழிலாளர், விவசாயிகளின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்யும் விதத்திலும் இச்சபை அரசியலமைப்பைத் தயார் செய்ய வேண்டும். தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் இந்த நிச உரிமைகளை கேவலமாக நசுக்கி, 1948ல் ஏகாதிபத்தியவாதிகளும், 1972, 1978ல் ஏகாதிபத்திய கைக் கூலிகளும் தமது வர்க்க ஆட்சியைக் கொண்டு நடாத்துவதற்காகத் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தினரை நசுக்கும் அரசியலமைப்புக்களைத் தயார் செய்தனர். தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் முதலாளிகள் தம்மை ஒடுக்கி வைக்கும் எதிர்ப்புரட்சி ஆட்சி முறைகளைத் திணிக்க இடமளியாமல் அரசியலமைப்புச் சபையைக் கூட்டு!என்றபிரச்சாரத்தினை ஆரம்பிக்கவும் அதற்கான போராட்டத்தினைக் கையில எடுக்கவும் முன்னணிக்கு வர வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

★ இந்தப் பிரச்சாரத்தினை முன்னெடுத்துச் செல்லவும், தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டத்தினை ஒழுங்கு செய்யவும் தமது பேராளர் மகாநாட்டைக் கூட்டுதல் அவசியம்: சகல தொழிலாளர் அமைப்புக்களதும், அமைப்புக்கள் இல்லாத இடங்களில் வேலைத்தல கமிட்டிகளை நிறுவி அவற்றில் ஏழை விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்களின் அமைப்புக்களை நிறுவவும் வேண்டும். அதன் மூலம் அவர்களின் பேராளர்கள் இம்மகாநாட்டிம் கலந்து கொள்ள வேண்டும்.

(20-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# லுணுவத்த தோட்டம்: தோட்டத் தனியார்மயமாக்க நிலைமைக்கு நல்ல முன்னோடி

ரீ. என். நிஹிஷான்

தோட்டங்கள் தனியார்மயமாக்க நடவடிக்கைகள் முற்றுப்பெறு முன்னரே தோட்டங்களில் உழைப்புச் சுரண்டல் தலை விரித்தாடும் கோலத்தை லுனுவத்தைக்கு விஜயம்செய்த 'தொழிலாளர் பாதை' நிருபர்களால் கண்டு கொள்ள முடிந்தது. பட்டினி, நோய்களுக்கு சிகிச்சையின்மை போன்றவற்றால் இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் இந்த ஏகாதிபத்திய,முதலாளித்துவ அமைப்பினால் எங்ஙனம் காட்டுமிராண்டித்தனமாகச் சுரண்டப்படுகிறார்கள் என்பதை ஹியூ கோலன்ட் தோட்டத் தொழிலாளியான வீ.தேவராசுவின் வாழ்க்கையில் காண முடிகிறது. எமது நிருபருடன் பேசுவதற்கும் கூட சக்தியற்ற நிலையில் அவர் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார்.

நீண்ட பிரயத்தனத்தின் பின்னர் அவர் கூறியதாவது:- ''நான் 35 ஆண்டுகளாக இத் தோட்டத்தில் தொழில் செய்கின்றேன். எனக்கு இப்போது 46 வயது. 3 குழந்தைகள் இருக்கிறார்கள். இருதயநோய காரணமாக நான் 1968ல் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டேன்.'' சத்திரசிகிச்சை இடம்பெற்ற இடத்தை தேவராசு காட்டினார். மார்பின் நடுப்பகுதியில் இருந்து முதுகு முள்ளந்தண்டுவரை 12அங்குலங்கள் வெட்டப்பட்டு உள்ளன. எனினும் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிவடைந்தது என்றும் கூறினார்.

''சத்திரசிகிச்சையின் பின்னர் என் உயிர் பிழைக்குமா? என்பதில் டாக்டர்கள் சந்தேகம் கொண்டிருந்தனர். ஆனால் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக நிறைவேறியது. எனினும் டாக்டர்கள் கடினவேலை எதுவும் செய்ய வேண்டாம் என என்னை எச்சரித்தனர். இதன் பின்னர் ஒரு வருட காலம் நான்தொழில்செய்யவில்லை. ஆனால் வேலைக்குப் போனதும் சாதாரண தொழிலாளர்கள் செய்யும் வேலையையே நானும் செய்ய நேரிட்டது. கொழுந்து பறித்தல், அகழி வெட்டுதல், மட்டம் வெட்டுதல் போன்ற வேலைகளைச் செய்ய நேரிட்டது. இந்த வேலைகள் எனக்கு கடினமானவை என முறைப்பட்டும் நிர்வாகிகள் கருணை காட்டவில்லை. இந்த விதத்தில் தொடர்ந்து வேலை செய்ததும் சில வருடங்களில் எனக்குப் பழையபடி அதே வருத்தம் ஏற்பட்டது. காய்ச்சல் காய்கிறது. இப்போது நான் 11 நாட்களாக மூச்சுவிடக் கஷ்டப்பட்டு வருகிறேன். வேலைக்குச் செல்ல இயலாது. வேலைக்குச் செல்லாவிட்டால் சம்பளம் இல்லை. வேலைக்குப் போனாலும் பார வேலையையே செய்ய நேரிடுகிறது. பளுவில்லாத வேலை தருகிறார்களில்லை. சலுகை வழங்குமாறு கேட்டு ஜனாதிபதிக்கும் முறைப்பட்டேன். எதுவும் நடைபெறவில்லை''.

மூச்செடுப்பதில் உள்ள சிரமம் காரணமாக அவரால் தொடர்ந்து பேசிக் கொள்ள முடியவில்லை. தாம் அனுபவித்துக் கொண்டுள்ள துயரத்தையிட்டு ஜனாதிபதியின் இடம் பெயர் சேவைக்குஎழுதி மாதங்கள் பல கழிந்த போதிலும் எதுவித பலனும் கிடைக்கவில்லை என அவர் சொன்னார். இதற்கிடையே முதலாளித்துவ யூ. என். பி. அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவிகள் ஏற்றுக் கொண்டுள்ள இ.தொ.கா. செயலாளர் எம். எஸ். செல்லச்சாமிக்கும் வெலிமடை இ.தொ.கா. தலைவர் மொஹிதீனுக்கும் அவர் பல கடிதங்கள் எழுதியுள்ள போதிலும் பதில் தன்னும் அனுப்பாத முறையில் அவர்கள் நடந்து கொண்டுள்ளார்கள்.

இளமையிலேயே ஆரம்பித்த இந்தத் துயரமான வாழ்க்கையை நினைவு கூர்கையில் தேவராஜ் தொடர்ந்து கூறியதாவது: ''நான் தோட்டத்தில் வேலைக்குச் சென்றது 11வயதில். அன்று சம்பளமாக --90 சதம் கொடுத்தார்கள். 20 வயதில் எனக்கு இந்நோய் பிடித்தது. சத்திர சிகிச்சையின் பின்னர் மருந்து வாங்க எனக்கு ஒரு 'காட்' கொடுத்தார்கள். 1983 இனவாத கலவரத்தின் போது அதுவும் நாசமாய் போய்விட்டது. இன்று எங்கும் மருந்து வாங்கவசதியில்லை. தோட்ட 'டிஸ்பென்சரி'யில் ஒரு வெள்ளை குளிசை தருகிறார்கள். அள்வளவு தான்.''

இந்தத் தொழிலாளர்களுக்கு முதலாளித்துவ அரசாங்கத்திடம் இருந்து மட்டுமல்ல இவர்கள் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கத் தலைமைகளிடம் இருந்தும் எதுவித கருணையும்கிடையாது.முதலாளி வர்க்கத்துக்கு இவர்களின் உழைப்பைக் சுரண்டுவதே அவசியம். அவர்கள் எலும்புக் கூடாகும் வரை உழைப்பைச் சுரண்டுகிறார்கள். தொழிற் சங்க தலைவர்கள் இந்த உழைப்புக் கொள்ளைக்கு துணை போகிறார்கள். தேவராஜ் போன்ற ஆயிரமாயிரம் ஏழை நோய்வாய்ப்பட்ட தொழிலாளர்கள் வைத்திய ஆலோசனையையும் பொருட்படுத்தாது பாரவேலைகளில் ஈடுபடுத்தப் படுகிறார் கள். நாளுக்கு ரூபா 46/- உழைக்கவே இவையெல்லாம்.

தோட்டங்களில் இருந்து வந்த ஒரு சில வரையறுக்கப்பட்ட வைத்திய வசதிகளும் அடியோடு வெட்டப்பட்ட நிலையிலேயே இவர்கள் தொழில் புரிகிறார்கள். வைத்தியசாலைகளுக்கு ஈடு கொடுக்கக் கூடிய உணவினை இவர்களின் அற்பசொற்ப சம்பளத்தைக் கொண்டு வாங்க முடியாது. அவர்களின் முக்கிய உணவு பாண் மாவு எந்தவிதமான போஷாக்கு உணவும் கிடையாது. அவர்கள் போஷாக்கின்மையால் வாடுகிறார்கள். இந்த உண்மையைத் துரோகத் தலைவர்களும் கூட. ஏற்றுக் கொண்டுள்ளார்கள். சமீபத்தில் இ.தொ.கா. துரோகத் தலைவர் ஒருவர் மேற்கொண்ட ஆய்வுகளின்படி தோட்டத் தொழிலாளி தனது சம்பளத்தில் நூற்றுக்கு 90%ஐ உணவுக்கு செலவிடுகிறான். பாண், மாவு அரிசி முதலானவற்றுக்கு மேலதிகமாக அவன் கிழமைக்கு ஒரு தடவை 100கிராம் கருவாடு வாங்குகிறான். இறைச்சி, மீன் சாப்பிடுவதில்லை. ஐக்கிய நாடுகள் சபை உணவு அமைப்பின் கலோரி மட்டமான 3000க்குப் பதிலாக தோட்டத் தொழிலாளிக்கு 1200கலோரியே கிடைக்கிறது. போஷாக்கின்மையின் மட்டத்தினை இது காட்டுகின்றது.

நிலைமை இங்ஙனம் இருக்கையிலேயே தோட்டத் தனியார்மயம் இடம்பெறுவதற்கு சமசமாஜ - கம்யூனிச - நவசமாஜ-இ.தொ,கா தொழிற் சங்கத் தலைவர்களின் ஆதரவும் கிடைத்துள்ளது. அரசாங்கத்தினால் உரிய முறையில் நடாத்த முடியாது போன தோட்டங்களின் நிர்வாகத்தை தனியார் கம்பனிகளால் நடாத்த முடியும் என்ற நச்சுத்தனமான பிரச்சாரத்தில் இந்த துரோகத் தலைவர்கள் குதித்துள்ளார்கள்.

தோட்டங்கள் தனியார்மயமாக்கத்துக்கு எதிராக பெருந்தோட்டத்துறை உட்பட நாட்டின் சகல உற்பத்தி துறைகளும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கப்படுவதற்கான சோசலிச வேலைத் திட்டத்திற்கு தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்க போராளிகள் முன்வர வேண்டும். இந்த இலக்கில் பொது வேலை நிறுத்தத்தினை ஏற்பாடு செய்யும் தீர்மானத்தினை முன்னெடுக்கும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் பேராளர் மகாநாட்டை கூட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், பெருந் தோட்ட, கைத் தொழில்-தொழிலாளர் சங்கமும் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவு வழங்குமாறு 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது. அதன் மூலமே இன்றைய ஏகாதிபத்தியச் சார்பு யூ.என்.பி. அரசாங்கத்தை வெளியேற்றவும் தோட்டத் தொழிலாளர் துயரங்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கவும் தொழி-லாளர் – விவசாயிகள் அரசாங்கத்தை அமைக்கவும் முடியும்.

## ராஜீவ் காந்தி கொலை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிராக இடம் பெறும் வெறி கொண்ட பிரச்சாரம் தமிழ்நாடு மாநில ஜெயலலிதா அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலி போராளிகளுக்கும் இடையேயான பிரச்சினையாக அன்றி இந்திய மத்திய அரசாங்கம்— ஹிந்தி வெறி சோவினிச பாரதீய ஜனதா கட்சி உள்ளடங்கலான பிரச்சார முன்னணி மூலம் முன்னெடுக்கப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சி, ADMK வுக்கும் மு. கருணாநிதி தலைமையிலான தி.மு.க.விற்கும் இடையேயான பிரச்சினை, இந்த தமிழ் ஈழம் மக்களுக்கு எதிரான பிரச்சாரத்தினை கருணாநிதி கூறுவது போல் இலங்கையில் இன நெருக்கடி வெடித்த காலத்தில் இருந்து (1983) ஆரம்பிப்பதாக்அல்லது ஜெயலலிதா - நரசிம்மராவ் கும்பல் கூறுவது போல் 1989ல் (கருணாநிதி ஆட்சிக்கு வந்த காலத்தில) இருந்து ஆரம்பிப்பதா? என்பத்த.இந்த முதலாளித்துவ கும்பல்களுக்கிடையே தமிழ் ஈழம் போராட்ட குரல் வளையை நெரிப்பது தொடர்பாக வேறு அடிப்படையான கருத்து வேறுபாடு கிடையாது.

மாஜி உள்நாட்டுச் செயலாளர் நாகராஜா கைது தொடர்பான பிரச்சினையில் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் மு. கருணாநிதி இதை ஊர்ஜிதம் செய்துள்ளார்:- ''கருணாநிதி தீவிரவாதிகள் இந்த மாநிலத்தில் ஏதோஒரு சில மாதங்களுக்கு முன் வந்து குதித்தது போல் தோன்றும் வகையில் அன்றி மாநிலத்தில் 1983ல் இருந்து விடுதலைப் புலிகளின் நடவடிக்கைக்ளை விசாரிக்க ஒரு உயர் நீதிமன்ற நீதிபதி நியமனம் செய்யப்பட வேண்டும் என கோரினார்'' (ஹிந்து-2.11.91)

இந்திய முதலாளி வர்க்கம் இந்த விசாரனை தொடர்பாக இந்திய தொழிலாள- ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் முறையில் பயங்கரவாத, நாசகர நடவடிக்கைகள் சட்டத்தை (tdaa) இந்தக் கொலை விசாரணை தொடர்பாக பயன் படுத்தி வருகின்றது. இந்தக் கொலை தொடர்பான பொலிஸ் விசாரணைகளுக்கு இந்திய முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் முன்னுரிமை கொடுப்பதன் மூலம் இந்திய பக்டரி மூடுவிழாக்கள், வேலைநீக்கங்கள், அரசுடமை நிறுவனங்கள் பன்னாட்டு கம்பனிகளிடம் ஒப்படைப்பு, வேலையின்மை போன்ற கொதிக்கும் பிரச்சனைகளால் தினமும் முன்னணிக்கு வரும் இலட்சோப இலட்சம் தொழிலாள- ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக இன, மத, பிராந்திய வெறிகளை தூண்டி விடுகின்றன.

இந்திய ஸ்டாலினிச சீ.பீ.ஐ -சீ.பீ எம் தலைவர்களுக்கு இந்திய முதலாளி வர்க்கக் கட்சிகளில் இருந்து சுயாதீனமான வேறுபட்ட வேலைத் திட்டம் கிடையாது.இதனால் இந்திய மத்திய அரசாங்கத்தின் ஒவ்வொரு பொலிஸ் அரசு வேலைத்திட்டமும் இத் துரோகத் தலைவர்களின் ஆசியுடனேயே அமுல் செய்யப்படுகின்றது. தமிழ் ஈழத்தினருக்கு எதிரான தமிழ் நாட்டு பொலிஸ் வேட்டைகள் இதை நிரூபித்துள்ளன.

இலங்கை — தமிழ்ஈழம் சோசலிசக் குடியரசு ஒன்றியத்தினை இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசின் பாகமாக அமைக்க இந்திய தொழிலாள- ஒடுக்கப்படும் மக்களிடையே ட்ரொட்ஸ்கிச சோசலிசத் தொழிலாளர் கழகம்மட்டுமேபோராடுகின்றது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கும் இந்திய அரசின் தமிழ் ஈழம் விரோத சதிக்கும் எதிராக இப்பிராந்தியத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணைந்து போராடுவது சோ.தொ.கழகமே.

## பதுளை பசறை...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

'தனிநாட்டில் சோசலிச' கொள்கையே சோவியத் ரூஷ்ய நெருக்கடிக்கு காரணம் என்ற உண்மையை இவர்கள் மூடிமறைக்கிறார்கள்.

தோட்டங்களை துண்டாடுதல், வேறு முதலாளித்துவச் சுரண்டல்களுக்கு ஒப்படைத்தல் போன்ற சதிகள் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளன. அவிசாவளை பகுதியில் கைத் தொழில் பேட்டை அமைக்கும் பொருட்டு 360 ஏக்கர் கொண்ட ஆதர்பீல்ட் தோட்டத்தை சுவீகரிக்கும் நடவடிக்கையில் யூ.என். பி. அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. இ. தொ. கா. விற்கும்தோட்டத் தொழிற்துறை அமைச்சுக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின் சரத்துக்களை மீறுவதாக இது அமைந்துள்ளது. இச்சகல சதிகளையும் மூடிமறைக்கும் பொருட்டு இ. தொ. கா. தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு பங்கு வழங்கும் பேரில் ஒரு சில பாழடைந்துபோன தோட்டங்களை தொழிலாளர் தலையில் கட்டியடிக்கவும் நிலம் வழங்கும் சாட்டில்; தரிசு நிலத்துண்டுகளை ஒப் படைக்கவும் முயல்கின்றனர்.

தலைமைகளின் இந்த அழிவு வேலைத்திட்டங்களை இரு கரம் நீட்டி ஏற்கும் நிலையில் தோட்டத் தொழிலாளர்கள் இல்லை. எனவேதான் துரோகத் தலைமைகளின் ஒத்துழைப்புக்கு மத்தியிலும் அரசு இந்த ஏஜன்டுகளில் மட்டும் தங்கியிராது தொழிலாள வர்க்க சக்தியை உடைக்க நேரடி தலையீட்டில் இறங்கியுள்ளது. பதுளை, பசறை கைதுகள் இதற்கு நல்ல சான்று. தோட்டத்துறை உட்பட சகல உற்பத்தி துறைகளையும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிச வேலைத்திட்டத்திற்கு போராட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடனும், பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்துடனும் இணையுமாறு நாம் வேண்டுகின்றோம்,

கொழும்பு — 10. 1ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்தவக்குபுறவினால் மஹரகம நாகஹுவத்தை வீதி, 51ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும்

# "நிரந்தரப் புரட்சி இல்லையேல் நிரந்

**பேர்ளினில் நவம்பர் 16-17ல் நடைபெற்ற உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கு முன்னோடியாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அக்டோபர் 26ல் நடாத்திய மகாநாட்டில் பு. க. க. செயலாளர் விஜே டயஸ் சமர்ப்பித்த அறிக்கை**

தோழர்களே,
தோழியர்களே,

நீங்கள் அனைவரும் அறிந்தது போல் எமது இம்மகாநாடு நவம்பர் 16-17ம் திகதிகளில் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு நடாத்தத் தயாராகி வரும் உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கான முன்னோடி மகாநாடாகும். அனைத்துலகக் குழுவின் கிளைகளின் அரசியல் தலையீட்டின் மூலம் இத்தகைய முன்னோடி மகாநாடுகள் பல ஏற்கனவே உலகம் பூராவும் நடைபெற்றுள்ளன.

அக்டோபர் 19-20 வார இறுதியில் அவுஸ்திரேலிய சோசலிச லேபர் லீககினால் சிட்னி நகரில் நடாத்தப்பட்ட முன்னோடி மகாநாடு பெரிதும் வெற்றிகரமான மகாநாடாக விளங்கியதாக அத்தோழர்களிடம் இருந்து நாம் அறிகின்றோம். பல்வேறு கைத்தொழில் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர் குழுக்களும், ஆசிரியர், தாதிகள் போன்ற சேவை துறை ஊழியர்களும் அங்குபேராளர்களாகக் கலந்து கொண்டுள்ளார்கள். அதுமட்டுமன்றி ஏகாதிபத்தியத்தினால் எதிர்காலம் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ள பெருந்தொகையான இளைஞர், யுவதிகளும் அதில் பங்குபற்றியுள்ளார்கள்.

கடந்த ஜூலையில் பிரித்தானிய, பிரான்ஸ், ஜேர்மன் பேராளர்கள்கலந்துகொண்ட முன்னோடி மகாநாடு பேர்ளின் நகரில் நடைபெற்றது.

செப்டம்பர் 26ல் சென்னையிலும் அக்டோபர் 5ல் கல்கத்தாவிலும் நடைபெற்ற வெற்றிகரமான முன்னோடி மகாநாடுகள் இரண்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது.

அமெரிக்க ட்ரொட்ஸ்கிச அமைப்பான வேர்க்கஸ் லீக் எதிர்வரும் நவம்பர் 10ம்திகதி சோசலிசத்துக்கான அனைத்துலகக் கூட்டம்' என்றபேரில் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கினைக் கலந்துரையாடுவதற்கான ஒரு பலம்வாய்ந்த கூட்டத்தினை நடாத்தவுள்ளது.

அத்தோடு வேர்க்கஸ் லீக்கின் தேசியச் செயலாளர் டேவிட் நோர்த் கடந்த வாரங்களில் சோவியத் யூனியனில் மேற்கொண்ட அரசியல் தலையீடு, பிரமாண்டமான வெற்றியீட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது. சோவியத் யூனியனுள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளையைக் கட்டி எழுப்புவதற்குப் பலம்வாய்ந்த அத்திவாரத்தினையிடுவதில் வெற்றியீட்டப்பட்டுள்ளது.

## பாட்டாளி வர்க்க அனைத்துலக வாத அடிப்படை

இவை அனைத்துலகக் குழுநிச உலகக் கட்சியாக உலகம் பூராவும் உள்ள தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களைபாட்டாளிவர்க்க அனைத்துலகவாதத்தின அடிப்படையில் புரட்சிகரமான முறையில அணிதிரட்டும் போராட்டத்தில ஈடுபட்டுள்ளது என்பதற்கு மூடிமறைக்க முடியாத சாட்சியாகும். எமது தலையீடு, ஏகாதிபத்திய, முதலாளித்துவ அமைப்பின பேரழிவைப் பற்றி அஹிம்சா கூக்குரல எழுப்புவதற்கு முற்றிலும முரணானது. ஏனெனில ஏகாதிபத்தியத்தின உலகளாவிய அழிவினை நிறுத்தும் வல்லமை கொண்ட விஞ்ஞானரீதியான வேலைத்திட்டத்தினால் ஆயுதபாணியான புரட்சிகர சமூக சக்தியான உலகத் தொழிலாளர் வர்க்கத்தினை அணிதிரட்ட நாம் போராடுவதற்கு காரணம்.

இம்மகாநாட்டினுள் கலந்துரையாடலுக்குள்ளாகும் முக்கிய பத்திரமான அனைத்துலகக் குழுவின மே தின அறிக்கையின முதல் பந்தியிலேயே பேர்ளின் மகாநாட்டின அர்த்தம் பின்வருமாறு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது:

"இம்மகாநாடு வார்த்தை ஜாலங்களுக்கும் வெற்றுச் சுலோகங்களுக்கும் ஒரு காட்சியறையாகாது. அத்தகைய அரசியல் நடிப்புக்களால் தொழிலாள வர்க்கத்துக்குப் பயன இல்லை. அதற்குப் பதிலாக அனைத்துலகக் குழு புரிந்து கொண்டுள்ள முறையில இம்மகாநாடு, ஏகாதிபத்திய முதலாளித்துவத் தலைவர்களின உத்தேச யுத்தத்தினையும், காலனித்துவ அடிமைத்தளையையும், பரந்த வறுமையையும் கொண்ட 'புதிய உலக அமைப்பு'க்கு எதிராகத் தொழிலாள வர்க்கத்தினை புரட்சிகரமாக அணிதிரட்டும் பொருட்டு சோசலிச வேலைத்திட்டத்தினைக் கலந்துரையாடி, நிறைவேற்றும். இம்மகாநாட்டின் மைய இலக்கு, சமூக ஜனநாயகவாதிகள், ஸ்டாலினிஸ்டுகள், மற்றும் சந்தர்ப்பவாதப் பிரதிநிதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட சோசலிச அனைத்துலகவாதத்தின மாபெரும் பாரம்பரியங்களை உலகத் தொழிலாளர் அணியினுள் புதுப்பிப்பதே."

பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதிகள் என்ற ரீதியில் நாம் இந்தப் பணிக்குத் தோள் கொடுத்து நிற்கையில் முழு உலக பொருளாதார, அரசியல் உறவுகளும் சகல விதத்திலும் முழு மாற்றத்துக்குள்ளாகியுள்ளன. நாம்வர்க்க சமரசவாதத்தினதும் சமாதானத்தினதும் காலகட்டத்தினைக் கடந்து வந்தவர்களாதலால் இந்த மாற்றங்கள் பற்றிய விடயத்தை நாம் நன்கு ஆழமாக புரிந்துகொள்ளவேண்டும். அந்த 4 1/2 தசாப்தங்களாக சமூகத்தினுள் திரண்டு போயுள்ள வழக்காறுகளிலிருந்தும்பழக்க வழக்கங்களிலிருந்தும் எம்மை நாம முழுமையே விடுவித்துக் கொள்கின்ற — தொழிலாள வர்க்கத்தை விடுவிக்கும நிசசவாலுக்கு இன்று முகம் கொடுத்துள்ளோம. உலக அமைப்பில் இடம்பெற்றுள்ள மாற்றங்களின மிகவும் தீர்க்கமான தன்மையை நாம் புரிந்துகொண்டால் மட்டுமே அந்தச் சவாலை நாம் வெற்றி கொள்ள முடியும். இம்மாற்றங்களுடன தொடர்புபட்ட வரலாற்றுப பணிகளுக்கு தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டுவது என்பது அம்மாற்றங்கள பற்றி புரட்சிக் கட்சியூடாக அப்புரட்சிகரச் சக்திகள் கைவரப்பெறும நனவின் அடிப்படையிலேயேயாகும்.

அரைக் காலனியான ஈராக்குக்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமையிலான ஏகாதிபத்தியச் சக்திகளால் நடாத்தப்பட்டு வரும் வளைகுடா யுத்தம் மூன்றாவது ஏகாதிபத்திய உலக யுத்தத்தின ஆரம்பத்தினைக் குறிக்கின்றது என நாம் செய்த பண்புமயமாக்கம் எவ்வளவு சரியானது? ஈராக்குக்கு எதிராக இடம்பெற்ற யுத்தம ஈராக்கினை மட்டம் தட்டும்யுத்தம அன்றி ஈராக்கினை முழுமையே அடிபணியச் செய்யும நோக்கத்துடன் இடம்பெற்ற யுத்தம் என்பது இப்போது தெளிவாகியுள்ளது. குண்டுமாரிகளால் இலட்சக்கணக்கான மக்கள் துடைத்துக் கட்டப்பட்ட போதிலும ஈராக்கின பொருளாதார வாழ்வு 19ம் நூற்றாண்டு மட்டத்துக்கு பின்தள்ளப்பட்ட போதிலும் ஈராக்குக்கு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து சலுகை கிடையாது. முழுக் காலனியாக்கும் படி கோரிய வண்ணம் ஏகாதிபத்தியவாதிகளின் கள்வர் குகையான ஐக்கிய நாடுகள் சபையைக் கொண்டு மேலும் மேலும் ஆக்கிரமிப்புப் படைகளை அங்கு பாய்ந்து விழச் செய்ய ஏகாதிபத்தியவாதிகள் திட்டமிட்டு வருகின்றனர். அரைக் காலனித்துவ முதலாளித்துவ ஆட்சியாளர்களைச் சகல தேசியவாத வேலைத்திட்டங்களையும் சுருட்டி வைத்துவிட்டு பூரணமாக அடிபணியுமாறு ஏகாதிபத்தியவாதிகள் இன்று கட்டளையிட்டுள்ளார்கள். காலனித்துவத்தின் காலகட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது என்பதற்கு சரியான சாட்சி இல்லையா?

வளைகுடா யுத்தத்தின்பின்னர் இந்த ஏகாதிபத்தியஉலக யுத்தத்தின் வேலைத்திட்டம் மேலும் வெளிப்பட்டுள்ளதை நாம் கண்டுள்ளோம். சயரேயில் ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியாளனான மொபூட்டுவினால் அந்நாட்டு மக்களைக் கட்டுப்படுத்த முடியாதுஎனக் கண்டதும் பிரான்சிய, பெல்ஜியம் ஏகாதிபத்தியவாதிகள் அந்நாட்டுக்குத் தமது படைகளை அனுப்பத் தீர்மானித்தனர். இப்படைகளின் உதவியுடனும் மொபூட்டோ நாட்டின் அரசியல் ஆளுமையை மீண்டும் நிலைநாட்ட முடியாது போனால் ஏகாதிபத்தியப் படைகள் அந்நாட்டை ஒரு காலனியாகக் கைப்பற்றிக் கொள்ளும். சயரேயின் சுதந்திரம் எனப்படுவதற்கு அதன்மூலம் குரல்வளை நெரிக்கப்படும்.

ஐரோப்பிய ஏகாதிபத்தியவாதிகள் தமது ஆபிரிக்ககாலனிகளை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு செயற்பட்டு வரும் நிலையில் தென் அமெரிக்கப் பிராந்தியத்தினுள் அமெரிக்க ஏகாதிபத்தியம் சும்மா கிடக்குமா? இல்லை. ஹெயிட்டி தீவின் அரசியல் மாற்றத்தை பாவித்து அமெரிக்க இராணுவம் அங்கு முகாமிடும் பொருட்டு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் இப்போது செயற்பட்டு வருகின்றது.

கம்போடியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் படைகள் வேரூன்ற எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை இதில் இருந்து எப்படி வேறுபடுத்துவது? கம்போடியாவின் ஏகாதிபத்தியச் சார்பு சிஹானூக் இளவரசர் மட்டுமன்றி வியட்னாம் கம்போடியா போன்று உலகம் பூராவும் ஸ்டாலினிஸ்டுகளின் தோள் மேலாக இப்போது ஏகாதிபத்திய இராணுவம் அங்கு மீண்டும் இறங்குகின்றது. 1975ல் ஸ்டாலினிஸ்டுகளால் தேசிய வெறியனான பொல்போட்டின் கீழ் உறுதி செய்ததாக வாயடித்த சுதந்திரம் எனப்படுவதற்கு இன்று நேரிட்டுள்ளது இதுவே.

இந்தியாவில் கடந்த 4 ஆண்டுகளுள் மூன்று அரசாங்கங்கள் வீழ்ச்சி கண்டதன்பின்னர் இன்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ள நரசிம்மராவின் காங்கிரஸ் அரசாங்கம், முன்னொரு போதும் இல்லாத அளவில் ஏகாதிபத்திய பகற்கொள்ளைக்குக் கதவுகளைத் திறந்துவிட்டுள்ள போதிலும், ஏகாதிபத்தியவாதிகள் அதன் மூலம் திருப்திப்படுவதாய் இல்லை. இந்த அக்டோபர் மாத முற்பகுதியில் இந்தியா வந்த அமெரிக்க வர்த்தகத் தூதுவர் காலா ஹீல்சின் நடமாட்டம், இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களைத் தமது நூலில் ஆடும் பொம்மையாக ஏகாதிபத்தியவாதிகள்கருதிச்செயல்படுவதை காட்டியது. 'புத்திஜீவி மூலவள உரிமை' தொடர்பான சட்டம் பற்றிக் குறிப்பிட்ட அவள், சிங்கப்பூர் அமெரிக்காவின் சிபார்சினை ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்தியாவும் அவ்வாறே அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென வும், இல்லையேல் அமெரிக்க வர்த்தக தடை 301 இந்தியாவுக்கு எதிராக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளாள். உலகப் படத்தில் ஒரு குற்றான சிங்கப்பூரைக் கணிப்பதைவிட கூடுதலாக துணைக்கண்டம் என்றாலும் இந்தியாவைக் கணிக்கப்போவதில்லை என்பதே அப்பேச்சின் பொருள். இத்தகைய கெடுபிடி ஏகாதிபத்தியப் போக்குடன் இணைந்துள்ள பிரமாண்டமான சமூக வெடிப்புப் பற்றிய புரட்சிகர அறிகுறிகள், ஏகாதிபத்தியவாதிகள் காலனித்துவத்துக்கு மீண்டும் தள்ளப்படும் அவல நிலையை வெளிப்படுத்துகின்றது.

இந்த நூற்றாண்டில் உலகத்தினைக் கூறுபோடும் பொருட்டு இரண்டு தடவைகள் உலகயுத்தத்தில் இறங்கிய ஏகாதிபத்தியவாதிகள் இன்று அந்தப் பாதையிலேயே தள்ளப்பட்டு உள்ளனர். அமெரிக்க ஏகாபத்தியத்தின் சார்பு சக்தி



மகாநாட்டிற்கு வருகைதத்த பேராளர்களில் ஒரு பகுதியின

யை பயன்ப...
பட்ட பொ...
யல் ஆளுமை...
வந்த, கட்டு...
பட்ட ஏகாதி...
வீழ்ச்சி க...
அமெரிக்கா...
தாரப் ...
போகையில் ...
னிய ஏகாதி...
அதன் நல...
கொண்டுள்...
பூகோளத்தி...
ஆதிக்கத்தி...
வலயங்களு...
லும் இற...

போட்டிக்கு ...
சமாதான இ...
அவை உலகி...
போடும் ஏக...
யுத்தத்தினை...
தள்ளுகின்ற...

இதன் பின்...
பத் திரும்...
அழிவுகளின் ...
ஏகாதிபத்தி...
தற்காலிகமா...
காண முடிய...
படையான ...
தொழிற்பட்...
வர்க்கச் சம...
தலைவர்களு...
விட்ட அந்த...
என்னவெனி...
சகதிகளின் ...
க்கும், அவற்...
யான ச...
ற்கும் உல...
க்கும் கால...
அரச அ...
யேயான ...
யாகும்.

அனைத்து...
விஞ்ஞாபன...
வருமாறு ...
ளது: "இரு...
டில் இப்பூ...
டும் மீண்...
த்த பொ...
கும் வன்...
வெடிப்புக்க...
படை மூலம்...
பத்திக்கும் ...
துடமைக்குப்...
உலகப் ப...
அரசு முறை...
யான இந்த...
விளங்கின.
விட எடு...
முயற்சிகளு...

www.padippakam.com

# எதிராக அணிதிரள்வோம்:

# ர மக்கட் படுகொலை"

தி உருவாக்கப்
ாதார, அரசி
் கீழ் இருந்து
ாட்டுக்கு உள்
தியஅமைப்பு
விட்டது.
பொருளா
் தகர்ந்து
ர்மன், யப்பா
திய சக்திகள்
ளப் பிடுங்கிக்
. மட்டுமன்றி
ஏகாதிபத்திய
ன பிராந்திய
ன பேட்டியி
ள்ளன. இப்



ரச அல்லது
கிடையாது.
மீண்டும் கூறு
த்திய உலக
நோக்கித்

னியில் திரும்
உலகளாவிய
லாகவன்றி
் கீழ்
னும் தீர்வு
கவும் அடிப்
ண்பாடுகள்
ான, சகல
துரோகத்
ந்து போய்
ண்பாடுகள்
உற்பத்திச்
ார் உரிமை
பூகோளரீதி
யமாக்கத்தி
ிய சந்தை
ான தேசிய
க்கு மிடை
ண்பாடுகளே

குழுவின்
தைப் பின்
படுத்தியுள்
நூற்றாண்
தினை மீண்
ட்டிப்படை
ர வீழ்ச்சிக்
அரசியல்
் அடிப்
சமூக உற்
ார் சொத்
ற்பத்தியின்
ம தேசிய
இடையே
ண்பாடுகளே
றை அடக்கி
ட்ட சகல
இடையே

யும் அவை திரும்பவும் வெடிக்கும் திசையில் வளர்ச்சி காண்கின்றன. ஒரு வெற்றிகரமான அனைத்துலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சியூடாக முதலாளித்துவத்தைத் தூக்கிவீசுவதைத் தவிர மூன்றாம் உலக யுத்தத்தினைத் தடுப்பதற்கான வழியில்லை. யுத்தத்தினைத் தடைசெய்யும் ஏனைய சகல பிரேரணைகளும்—அணுவாயுதப் பெருக்கத் தடை ஒப்பந்தங்கள், ஆயுதப் பரிகரண அழைப்புக்கள் தொடக்கம் முதலாளித்துவத்துக்கு விடுக்கும் அஹிம்சை விண்ணப்பங்கள், வழிபாடுகள் வரை—ஏமாற்றுவேலைகள் அல்லது மோசடிகள் ஆகும்.''

## முதலாம் உலக யுத்தம்

ஏகாதிபத்தியம் தூக்கி வீசப்படுவதைத் தவிர்த்து அதன் மரண ஓலம் நீடிக்கப்பட்டதற்கு காரணம் தொழிலாள வர்க்கத்தின் துரோகத் தலைவர்களே. இரண்டாம் அகிலத்தின் சமூக ஜனநாயகக் கட்சிகள் முதலாம் உலக யுத்தம் வெடித்தவுடன் ஏகாதிபத்திய முகாமுக்குள் சென்றன.

தொழிலாள வர்க்க அனைத்துலகவாதத்தினை பாதுகாப்பது என்பது விரல்விட்டு எண்ணக் கூடிய புரட்சியாளர்களின் பொறுப்பாகியது. சுவிட்சர்லாந்தில் சிம்மர்வோல்ட் என்னும் கிராமப்புறப் பகுதியில் நடைபெற்ற ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிரான அனைத்துலகவாதிகளின்மகாநாட்டிற்குஇரண்டு சிறிய வாகனங்களில் அடக்கி விடக்கூடிய ஒரு சிறிய குழுவினரே கூடினர்.

எனினும் லெனின்-ட்ரொட்ஸ்கி — லக்சம்பேர்க்—லீப்நேக்ட் முதலானவர்களின் தலைமையில் அவர்கள் எடுத்த புரட்சிகர நிலைப்பாடு தொழிலாள, ஒடுக்கப்படும்மக்களுக்கு எவ்வளவு நெருக்கமானதும், தொடர்புபட்டதும் என்பதை ருஷ்யாவின் அக்டோபர் புரட்சி நன்கு நிரூபித்தது. அவர்கள் கடைப்பிடித்த அனைத்துலகவாதவிதிமுறை, உலகம் பூராவும் கோடிக் கணக்கானோரின் வரலாற்று நலன்களைப்பிரதிநிதித்துவம் செய்தது. அந்த விடயம் ட்ரொட்ஸ்கிஸ்டுகளான நாம் இன்று எடுக்கும் தீர்மானங்களிலும் நடவடிக்கைகளிலும் தீர்க்கமான முக்கியத்துவத்தினைத் தெளிவுபடுத்துகின்றது.

நீண்ட கதையைச் சுருக்கிச் சொன்னால் ஸ்டாலினின் தலைமையின் கீழ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் மூன்றாம் அகிலமும் இந்தப் புரட்சிகரக் கொள்கையைக் காட்டிக் கொடுக்கத் தொடங்கியது. ஸ்டாலினிச, 'தனிநாட்டில் சோசலிசம்' கோட்பாட்டுக்கு எதிராக உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தினை பாதுகாப்பது ட்ரொட்ஸ்கிஸ்டுகளிடம் ஒப்படைக்கப்பட்டது. உலக வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ட்ரொட்ஸ்கியின் அப்போராட்டம் இன்று அனைத்துலகக் குழு தலைமை தாங்கும் நான்காம் அகிலத்தினாலேயே பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றது.

## இரண்டாம் உலக யுத்தத்தில் ஸ்டாலினிஸ்டுகள்

முதலாம் உலக யுத்தகாலத்தில் ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் முகாமுக்குள் நுழைந்த சமூக ஜனநாயகவாதிகளுடன் இழுபட்ட வண்ணம் ஸ்டாலினிஸ்டுகள் இரண்டாம் உலக யுத்தத்துக்கு வழிவகுத்த விதத்தினைக் காட்டுவதற்கு சில விடயங்களை முன்வைக்க என்னை அனுமதியுங்கள்.

பிரித்தானியப் புரட்சியின் உச்சக் கட்டமான 1926பொது வேலை நிறுத்தத்தினை தொழிற் கட்சியின் 'இடதுசாரிகள்' எனப்பட்டவர்களுடன் சேர்ந்து காட்டிக் கொடுத்தமையும் 1927ல் சியாங்கை சேக்கின் முதலாளித்துவக் கட்சிக்கு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியை அடிபணியச் செய்து சீனப்புரட்சியைக் காட்டிக் கொடுத்தமையும், 1928 — 31 காலத்தில் ஜேர்மனியில் நாசிசத்திற்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் ஐக்கிய முன்னணிக்கு ஏதிராகநின்று, ஹிட்லர் ஆட்சிக்கு வர வழி வகுத்தையும், 1930பதுகளின நடுப்பகுதியில் பிரான்சிய, ஸ்பானியப் புரட்சிகளை மக்கள் முன்னணி அரசியல் ஊடாகக் காட்டிக் கொடுத்தமையும் ஸ்டாலினிசத்தின் வரலாற்று அறிக்கைகளாகும். இவை அனைத்தும் சோவியத் யூனியனுள் சோசலிசத்தைக் கட்டி எழுப்பும் பேரிலேயே செய்யப்பட்டன.

இலட்சோப இலட்சம் தொழிலாளர்களையும் இலட்சக்கணக்கான கம்யூனிஸ்டுகளையும் படுகொலை செய்த நாசி ஹிட்லருடன் உடன் படிக்கைக்குச் சென்றமை, ஸ்டாலின் இழைத்த காட்டிக் கொடுப்புக்களதும் உச்சக் கட்டமாகும். தொழிலாள வர்க்கத்தின் கொலைகாரனான ஹிட்லருடனான ஒப்பந்தமும் தனிநாட்டில் சோசலிசத்துக்கான ஒரு உதவியாகவே செய்து கொள்ளப்பட்டது.

பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் கேவலம் ஸ்டாலினிச எழுத்தாளராக விளங்கிய பாம்டட், ஸ்டாலின் — ஹிட்லர் ஒப்பந்தத்தை நியாயப்படுத்திய முறையைப் பாருங்கள்: 'லேபர் மன்த்லி' என்ற சஞ்சிகைக்கு அவர் எழுதியதாவது: ''ஆங்லோ — அமெரிக்கன் ஏகாதிபத்தியத்துக்கு முகம் கொடுக்கும் பொருட்டு நாசி ஆட்சியாளர்களுக்கு சோசலிச சோவியத் யூனியனுடன் சமாதானம் செய்து கொள்ள நேரிட்டது. யுத்தம் ஆரம்பித்த இடத்தில் இருந்து ஒவ்வொர் அடியாக சோவியத் யூனியனின் மூலோபாய நிலைப்பாட்டைப் பிரமாண்டமான முறையில் பலப்படுத்திய உதவிகளை வழங்க நாசிகளுக்கு நேரிட்டது. இன்றைய நெருக்கடியின் மத்தியில் அவர்கள் சோவியத் யூனியனை மேலும் பலப்படுதது வதற்கான உதவிகளை வழங்கத் தள்ளப்பட்டுள்ளார்கள். அது போல்ஷிவிசத்தின் மகிமையைப் பறைசாற்றுகின்றது''



தோழர். விஜே டயஸ் உரை நிகழ்த்துகிறார். மகாநாட்டிற்கு தலைமை தாங்கிய பு. க. க. மத்திய குழு உறுப்பினர் தோழர். சுனில் அருகில் அமர்ந்திருக்கிறார்.

இந்த ஸ்டாலினிஸ்ட் இதனை எழுதும் 1941ஜூனில் ஹிட்லரின் படைகள் சோவியத் யூனியனின் பாதுகாப்பற்ற எல்லைப்புறங்களைக் கைப்பற்றி, அந்நாட்டினுள் பல மைல்கள் ஊடுருவிக் கொண்டிருந்தது என்பதைக் கணக்கில் எடுக்கும் போது, ஸ்டாலினிஸ்டுகள் போல்ஷிவிசத்தின்மகிமையை அணைத்துக் கொண்ட முறைமையும் சோவியத் யூனியனுக்கு உதவி வென்றெடுத்த முறைமையையும் புரிந்து கொள்ளலாம். நாசி ஆக்கிரமிப்பு உத்தியோக பூர்வமாகப் பிரகடனம் செய்யப்பட்டது, 1941 ஜூன் 22 லாகும்.

1939 செப்டம்பரில் ஸ்டாலின்—ஹிட்லர் உடன்படிக்கை கைச்சாத்தானமை ஜேர்மன் ஏகாதிபத்தியத்தின்உலக யுத்தத் திட்டங்களை பெரிதும் பலப்படுத்துவதாகியது. ஜேர்மன் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக—ஹிட்லருக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த தொழிலாளர்களையும் பாட்டாளி வர்க்க அனைத்துலகப் போராளிகளையும் வேட்டையாடுவதை இந்த ஒப்பந்தக் கைச்சாத்துடன்ஸ்டாலினிசம் பொறுப்பேற்றது.

ஹிட்லரால் தடை செய்யப்பட்டு, வேட்டையாடப்பட்ட ஜேர்மன் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக விளங்கியவரும் யுத்தத்தின் பின்னர் கிழக்கு ஜேர்மனி ஆட்சியாளராக நியமனம் பெற்ற வோல்டர் உல்பிரிஜ் இந்தவேட்டைக்காகத் தூபமிடுவதை 1939ல் உடனடியாக ஆரம்பித்தார். ஹிட்லரின் சித்திரவதை முகாம்களில் ஒடுக்குமுறைக்குள்ளான இலட்சக் கணக்கான தொழிலாளர்களின் இரத்தம் சுவைக்கும் கயவன் என்ற முறையில் உல்பிரிஜ் கூறியதாவது:

''சோசலிசத்தை எதிர்பார்க்கும் அநேக தொழிலாளர்கள் ஒப்பந்தத்தை (ஹிட்லர்-ஸ்டாலின்) பெரிதும் மதிக்கக் காரணம் சோஷலிசத்தின் மாபெரும்தேசத்துடன் தமது உறவுகள் பலமடைவதாகும். கம்யூனிஸ்டுகள் மட்டுமன்றி அந்நக சமூக ஜனநாயக, தேசிய சோசலிச (நாசிகள்) தொழிலாளர்கள் கூட ஒப்பந்தத்லத உடைக்க ஒருபோதும அங்கீகாரம் வழங்காதிருப்பதை தமது பணியாகக் கணிக்கிறார்கள்'' என்றார். அவர் மேலும் கூறியதாவது:- ''ஜேர்மன- சோவியத் மக்களின உறவுகளுக்கு எதிராக சதி செய்வோர் ஜேர்மன் மக்களின எதிரிகளாவர். அவர்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டுகளாகப் பேர் சூட்டப்படுவர். இந்த எதிரிகளை இராணுவத்திலும் அரசாங்கத்திலும் அவர்கள் வகிக்கும் பதவிகளில் இருந்து விலக்க வேண்டும் என்ற அநேக கோரிக்கைகளும் வெளிப்பட்டுள்ளன.''

இலங்கையில் பீட்டர் கெனமன இவர்களின் வாலில் தொங்கியவர். கே. பி. சில்வா பேணிக்கொண்டுள்ள சம்பிரதாயங்கள் அந்தக் கைக்கூலிகளின் சம்பிரதாயமே. இரண்டாம் உலக யுத்தத்தினைத் தூண்டிவிட உதவிய குற்றவாளிகள் பட்டியலில் இவர்களும் அடங்குவர். மூன்றாம் உலக யுத்தத்தினைத் தவிர்க்க வேண்டின் இந்தத் துரோகிகளிடமிருந்து தொழிலாள வர்க்கத்தை விடுவிக்க வேண்டும் என்பதை சந்தேகிப்போர் இருக்க முடியுமா?

ஹிட்லர் சோவியத் யூனியனுக்கு எதிராக இராணுவத்தை ஈடுபடுத்தியதும் இந்த ஸ்டாலினிஸ்டுகள் மறு நாக்கால் பேசத் தொடங்கினர். அவர்கள் இப்போது பிரித்தானிய—பிரான்சிய— அமெரிக்க ஏகாதிபத்தியக் கோஷ்டியில் சேர்ந்து, உலக யுத்தத்தின் தீப்பிளம்புக்கு தூபமிட்டனர்.

பீட்டர் கெனமனுக்கு துரோக அரசியலைப் போதித்த பிரித்தானிய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஹறி பொலிட் தாளத்தை மாற்றிப் பாடத் தொடங்கினார்.

''இப்போது சேர்ச்சில் அரசாங்கம், சோவியத் யூனியனுடன் கூட்டுக்கு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, இன்று சகல பிரச்சினைகளையும் தாண்டி செல்லும் தீர்க்கமான பிரச்சினையாக இது இருப்பதால் சேர்ச்சில் அரசாங்கம் தொடர்பாக சகல வர்க்க நனவுபடைத்த தொழிலாளர்களதும், இடதுசாரிப் போராளிகளதும் மனோபாவம் இதனையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பது தெளிவு. இக்கொள்கையை நடைமுறைப்படுத்த சேர்ச்சில் அரசாங்கம் எடுக்கும் சகல நடவடிக்கைகளுக்கும் நாம் முழுமனதோடு ஆதரவு வழங்குகின்றோம்.''

இந்த ஸ்டாலினிஸ்டுகள் வாந்தியெடுத்து உண்ணும் கும்பல் இல்லையா என பொது அறிவு படைத்த எவரும் நினைத்தால், அதற்கு பொலிட் முன் கூட்டியே பதில் அளித்துள்ளார்:

''சேர்ச்சில் அரசாங்கம் தனது நடைமுறையை மாற்றி கொண்டுள்ளதா? அல்லது கம்யூனிஸ்ட் கட்சி தனது நடைமுறையை மாற்றிக் கொண்டு உள்ளதா என்ற பிரச்சனை ஒரு அற்ப விடயம் ஆகும். அவை பற்றி அக்கறை காட்டுவோர் எமது அன்றாட வாழ்வில் பொது அனுபவங்களைச் சிருஷ்டிக்கும் உயிர் புஷ்டியுள்ள வரலாற்றின் புதியதும் பிரமாண்டமானதுமான அபிவிருத்திகளைப் புரிந்து கொள்ள முடியாத குறுகிய சிந்தனையாளர்கள் மட்டுமே.''

எவ்வளவு இறுக்கமான சொற் பிரயோகங்கள்? இவை எதற்காக? ஏகாதிபத்திய யுத்தத்தின் கைக்கூலி வேலையைப் பாதுகாக்க அல்லவா?

ஸ்டாலினிஸ்டுகள் பிரித்தானிய ஏகாதிபத்தியக் கோஷ்டிக்கு ஆதரவளித்தமை, இலங்கையிலும, இந்தியாவிலும் மற்றும காலனித்துவ நாடுகளிலும் மட்டுமன்றி, பிரித்தானியா மற்றும ஏகாதிபத்திய நாடுகளிலும ட்ரொட்ஸ்கிசக் காரியாளர்கள் உட்பட தொழிலாள வர்க்கப் போராளிகளை அழித்தொழிப்பதில் தரகர் வேலை பார்த்ததுடன் இணைந்துள்ளது.

இந்தியாவிலும் இலங்கையிலும ட்ரொட்ஸ்கிச போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சியினருக்கு எதிராக மட்டுமன்றி சமசமாஜக் கட்சியினருக்கு எதிராக உளவு பார்த்தல், குண்டர் தாக்குதல் நடாத்தல் போன்றவற்றில் ஸ்டாலினிஸ்டுகள் ஈடுபட்டனர். இந்த ஸ்டாலினிஸ்டுகளுடன் தோளில் கைபோட்டுக் கொண்டு அவர்களுடன் மக்கள் முன்னணியில் குதித்துள்ள சமசமாஜ — நவசமசமாஜ கோழைகளுக்கு எந்த விதமான புரட்சிகர பாரம்பரியங்களும் கிடையாது என்பதை அதன் மூலம் காட்டிக் கொண்டுள்ளனர். ஸ்டாலினிச துரோகிகளைப் போலவே சமசமாஜ - நவசமசமாஜ சந்தர்ப்பவாதிகளும் வர

(42 ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவ...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

லாற்றின் குப்பைக் கூடைக்குள் தள்ளப்படவுள்ளனர்.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் உலகத் தொழிலாள வர்க்கத்துக்குப் புறமுதுகுகாட்டி, ஏகாதிபத்தியவாதிகளின் வாலில் தொங்குவதன் மூலம் உயிர்பிழைக்க ஸ்டாலினிஸ்டுகள் முயன்றதைப் போலவேஇன்று சமசமாஜ நவசமசமாஜ இ.தொ.கா. உள்ளடங்கலான சகலதுரோகிகளும் முதலாளித்துவ அரசுக்கும் அதன் யுத்த நடவடிக்கைகளுக்கும் மேலும் மேலும் அதிகாரம் வழங்குவதன் மூலம் தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான தாக்குதல்களின் லெப்டினன்டுகளாக மாறியுள்ளனர். இந்தத் துரோகக் கும்பலின் துரோக அரசியல் செல்வாக்குகளில் இருந்து தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் சகல பிரிவினரையும் விடுதலை செய்வது, புரட்சிகர இயக்கத்தின் பொறுப்பாகும். தொழிலாள வர்க்கத் தலைமையின் வரலாற்று நெருக்கடியைத் தீர்ப்பது என்பது அதுதான்.

முதலாம் உலக யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் உலகம் பூராவும் தீவிரமடைந்த நெருக்கடிக்கு மேலாகப் பயணம் செய்த ஏகாதிபத்தியவாதிகள், இரண்டாம் உலக யுத்தத்தின் அழிவினை மனித இனத்தின் மேல் திணிக்கும் வாய்ப்பினை ஸ்டாலினிச, சீர்திருத்தவாத அதிகாரத்துவங்கள் வழங்கின. இவர்கள் யுத்தத்தின் பின்னைய உலக அமைப்பில் முக்கிய முண்டுகோல்களாக விளங்கினர். இவர்களின் உதவியையும் காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவ தேசிய இயக்கங்களின் காட்டிக்கொடுப்பையும் பயன்படுத்தி, ஏகாதிபத்தியவாதிகள் அமெரிக்காவின் ஆளுமையின் கீழ் தற்காலிகமான ஸ்திரப்பாட்டினை உண்டுபண்ணிக் கொள்ள முடிந்தது. இந்த ஸ்திரப்பாடானது உலக யுத்தத்தின் வெற்றியை உறுதி செய்ததோடு கோடிக்கணக்கான மக்களையும் உலகளாவிய ரீதியில் உற்பத்திச் சக்திகளினையும் பிரமாண்டமான முறையில் அழிப்பதன் மூலம் கட்டி எழுப்பப்பட்டது.

## பப்லோவாத திரிபுவாதம்

இந்த ஸ்திரப்பாட்டுக்கு நீண்ட ஆயுளை வழங்கி, ஏகாதிபத்தியத்துக்கு அடிபணியும் பொருட்டு நான்காம் அகிலத்தினுள் ஒரு திரிபுவாத சந்தர்ப்பவாதப் போக்கு தலைநீட்டியது. இங்கு நாம் பேசுவது பப்லோவாதம் பற்றியாகும். ஏகாதிபத்திய அமைப்பின் முண்டு கோல்களான ஸ்டாலினிஸ்டுகள் நூற்றாண்டு காலம் வெற்றியை அனுபவிப்பார்கள் எனவும் அந்த அதிகாரத்துவத்தின் கீழ் இருந்துவரும் சீரழிந்த தொழிலாளர் அரசுக்கு வேறு எதுவித பதிலீடும் கிடையாதெனவும் . சுட்டிக்காட்டிய இந்த பப்லோ — மண்டேல் முன்நோக்கின் செல்லுபடியான தன்மை என்ன? சீர்கெட்ட தொழிலாளர் அரசினை 'கொம்பிரதோர்', முதலாளிகளின் கீழான காலனியாகமாற்ற ஸ்டாலினிஸ்டுகளின் பெரெஸ்ரொயிகா இன்று செயற்பட்டு வருகின்றது. ஸ்டாலினிஸ்டுகள் தமது அரச அதிகாரத்தினை உறுதி செய்வதையும் பேணுவதையும் கைவிட்டு, இன்று ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ வர்க்கமாக மாறி, தமது ஆட்சி நிலவிய நாடுகளைக் காலனிகளாக மாற்றுவதன் மூலம் தமது கம்யூனிஸ்ட் கட்சிகளைக் கூட கலைத்துவிட செயற்பட்டு வருகின்றனர். பப்லோவாதிகள் நூற்றாண்டு ஆயுள் விதித்தது இந்த விதிமுறைக்கே.

அவ்வாறே பப்லோவாதிகள் காலனித்துவ, அரைக்காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவ தேசிய இயக்கங்களை நிச மக்கள் இயக்கங்களாகப் பெயர் சூட்டி, நான்காம் அகிலத்தின்பணி, அவற்றுக்குகீழ்ப் படிந்து, இணங்கிப் போவதே எனச் சிபார்சு செய்தனர். அவர்களின்படி பண்டாரநாயக்காவின் இயக்கம் இலங்கையில் நிச மக்கள் இயக்கமாகியது. இந்தியாவில் என்றால் நிச மக்கள் இயக்கம் காந்தி — நேருவின் காங்கிரஸ் இயக்கமாகியது. இன்று இந்த மக்கள் இயக்கம் எனப்படுபவற்றின் நிலை என்ன? சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது கட்சியை விட்டுச்செல்ல தீர்மானம் செய்துள்ளதாக இன்றைய பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகள் குறிப்பிட்டுள்ளன. அனுர பண்டாரநாயக்கா பொறுப்பேற்றது மக்கள் இயக்கமா? அந்த இயக்கத்திற்கு இன்று அப்பெயர் சூட்டுபவர்கள், சமசமாஜ தலைவர்களும் இன்று மண்டேலுடன் இழுபடும் நவசமசமாஜ தலைவர்களும் மட்டுமே. அந்த இயக்கம் உண்மையில் மக்களிடையே செல்வாக்கிழந்த இயக்கமாகும். இந்தியாவில் காங்கிரஸ் கட்சிக்கு ராஜீவ் காந்தியின் பிரேதத்தின் மேலாகவும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை வென்றெடுக்க முடியாது போய்விட்டது.

இவை பப்லோவாதத்திற்கு எதிராக அனைத்துலகக் குழு 1953ல் ஆரம்பித்த அரசியல் போராட்டம் வரலாற்று ரீதியில் எவ்வளவு அத்தியாவசியமானதும் நியாயமானதும் என்பதை சரியான விதத்தில் எடுத்துக் காட்டுகின்றன. யுத்தத்தின் பின்னைய உலக ஏகாதிபத்திய அமைப்பின் வீழ்ச்சியும், கிழக்கு ஐரோப்பாவிலும் சோவியத் யூனியனிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவம் குழிபறிந்து போனமையும், அத்தோடு உலகம் பூராவும் முதலாளித்துவ தேசிய இயக்கங்கள் மக்கள் ஆதரவினையன்றி மக்கள் வெறுப்பை வெற்றி கொண்ட இயக்கங்களாக மாறியமையும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கின் செல்லுபடியான தன்மையைப் பலம் வாய்ந்த முறையில் ஊர்ஜிதம் செய்துள்ளன.

ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்தும் காலனித்துவ அழிவில் இருந்தும் தலையெடுக்கும் நிச அவசியத்துடன் முன்னணிக்கு வந்து கொண்டுள்ள கோடிக் கணக்கான மக்களுக்கு வழிகாட்ட ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சி கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்ட நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும் என்பதை நாம் சர்ச்சைக்கு அப்பாற்பட்ட உண்மையாகச் சுட்டிக்காட்டக் காரணம் அதுவே.

இது வெறும்புகழ்ச்சி அல்ல. இது இன்றைய சமூக உறவுகள் பற்றிய பண்புமயமாக்கமாகும். ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்துக்கும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கும் இடையேயான உறவுகளின் தீர்க்கமான புரட்சிகர மாற்றத்தினை வெளிப்படுத்தும் பண்புமயமாக்கமாகும். எனவேதான் நாம் ஆரம்பத்திலேயே இந்த மாற்றத்தினைப் புரிந்து கொள்வது தீர்க்கமானது என்றோம்.

இது சிறிய நாடாதலால் பலம்வாய்ந்த நாடுகளைப் பிடித்துக் கொண்டுள்ள உலக யுத்தம் போன்ற சம்பவங்களில் இருந்து எம்மால் விடுபட்டு இருக்க வாய்ப்பு உண்டு என நினைப்பது பெரும் தப்பு, முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் வெளிப்பாடுகள் ஆரம்பமான 19ம் நூற்றாண்டில் கூட இந்நாடுகளால் உலக அபிவிருத்திகளில் இருந்து தலைதப்ப முடியவில்லை. இன்று உலக உற்பத்தியினதும் உலக உழைப்புப் பகுப்பினதும் பரம்பலைக் கணக்கிலெடுக்கும் போது அத்தகைய தலைதப்பல் பற்றி நினைப்பது எவ்வளவு ஆபத்தான நப்பாசையாகும் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆதலால் ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் காலகட்டம் மீண்டும் உருவாகியுள்ளது என நாம் கூறும் போது அத்துடன் இணைந்து உள்ள உலகப் புரட்சியின் காலப் பகுதிக்குள் நாம் நனவான முறையில் பிரவேசிக்க வேண்டும். சோசலிச புரட்சியின் உலகக் கட்சியின் அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவது உடனடிப் பணியாகியுள்ளதற்கு காரணம் அதுவே. அது கட்டாயமாகியுள்ளது.

## இந்தியத் துணைக்கண்டம்

ஸ்டாலினிசத்தின் கீழ் உருவான 'கொம்பிரதோர்' முதலாளித்துவக் கும்பல் அணிதிரண்டு கொண்டு சோவியத் யூனியனை சிதறடிக்க தேசியவாத வெறியை தூண்டிவிட்டுள்ளது போலவே, இந்தியத் துணைக் கண்டத்திலும் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ இனவாத, மதவாத, ஜாதிவாத இயக்கங்களும் கூட இன்று தலைநீட்டி வருகின்றன. காலனித்துவத்தின் கீழ் இந்தியாவை ஒன்றுபடுத்திய பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளே இந்தியத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டங்களை நசுக்கும் பொருட்டு 1947ல் இந்திய முதலாளிகளுடன் சேர்ந்து ஹிந்து-முஸ்லீம் இந்தியா இரண்டினை நிறுவியது. இன்று தொழிலாள வர்க்கத்தின் அபிவிருத்தியின்படி பார்க்குமிடத்து அந்தப் பிரிவினை போதியதல்ல என்பதை ஏகாதிபத்தியவாதிகள் அறிவர். காங்கிரஸ் ஆட்சியாளர்களின் குழுக்களும், கோஷ்டிகளும் ஏகாதியத்தியவாதிகளின் கையாட்களாக இனவாத ரீதியில் இந்தியாவை முழுமனே சிதறடிக்க இன்று முன்வந்துள்ளனர்.

ஒரிஸ்ஸா முதல் அமைச்சர் பிஜு பட்நாய்க்கின் இயக்கம் இதற்கு நல்ல உதாரணம். ஒரிஸ்ஸாவுக்கு சுயாதீனம் அவசியம் என கூச்சலிடும் அவர் முன்வைக்கும் முக்கிய கோரிக்கை என்ன? இதுவரை காலமும் இந்திய மத்திய அரசாங்கத்தின் தனி அதிகாரமாக இருந்துவந்த வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைச் செய்யஒரிஸ்ஸாவுக்கும்சுதந்திரம் வேண்டும் என அவர்கோருகின்றார். அது ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியாக தொழிற்பட முதலாளிகளுக்கு சுதந்திரம் வேண்டும் கோரிக்கை. அவ்வாறே ஏகாதிபத்திய பன்னாட்டுக் கம்பனிகளுடன் நேரடியாக ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமையையும் அவர் வேண்டுகின்றார். ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியினால் கடந்த காலப்பகுதியில் உறுதிசெய்து தர முடியாது போன ஜனநாயக உரிமைகள் பற்றிய பிரச்சினையையே பாவித்து இந்த இனவாத முதலாளித்துவப் புள்ளிகள் இப்போது தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் செலவில் இந்தியாவைத் துண்டாடும் ஏகாதிபத்திய காலனித்துவ வேலைத் திட்டத்தின் தரகர்களாக முயற்சிக்கிறார்கள். ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்கள் இந்த வேலைத்திட்டத்துடன் தம்மை நேரடியாகப் பிணைத்துக் கொண்டுள்ளார்கள். ஒரிஸ்ஸா கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கு இதுவே. இலங்கையில் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இனவாத யுத்தத்துக்குத் தோள் கொடுத்துள்ள சமசமாஜ — ஸ்டாலினிச — நவசமசமாஜ தலைவர்கள் இந்த விதத்திலேயே தொழிலாள - ஒடுக்கப்படும் மக்களைப் பிளவுபடுத்தும் தரகர்களாக உள்ளனர். அவர்கள் தேசியவாத விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கோரிக்கையின்படி வடக்கில் தொழிற் சங்கங்களைக் கலைத்துவிட எடுத்த தீர்மானம் அந்த நாணயத்தின் மற்றப் பக்கமாகும். இத்துரோகிகளின் நடைமுறை. 'அந்த அல்லது இந்த முதலாளித்துவக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் கையாட்களாகுவதே.

இந்த அதிகாரத்துவங்களின சலுகைகளைப் பேணிக் கொள்ள வேறு வழி இல்லை என்பதை இவர்கள் நன்றாக அறிவர். அவர்களின் இலக்கு, தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் பயங்கரமான அழிவினை உண்டுபண்ணுவதன் மூலம் தங்களின் சலுகைகளைக் காப்பதே. இந்தத் துரோகிகளுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவதன் மூலம் தொழிலாள வர்க்கம் தமது சுயாதீன அரசியல்வேலைத்திட்டத்தினைச் சூழ ஒடுக்கப்படும் மக்களை புரட்சிகரமான முறையில் அணிதிரட்ட வேண்டும் என நாம் சுட்டிக்காட்டக் காரணம் அதுவே.

இலங்கையில் முதலாளித்துவ யூ. என். பி—சி.ல.சு.க, கட்சிகள் இனியும் மக்கள் மேல் எந்தவிதமான அரசியல் ஆளுமையையும் கொண்டிருக்க முடியாத அளவுக்குநாற்றம் கண்டுள்ளன. இவர்களையே ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாகத் தழுவிக் கொள்ள சமசமாஜ—ஸ்டாலினிச—நவசமசமாஜ கட்சி சந்தர்ப்பவாதிகளும் ஏனையோரும் ஆயத்தமாகின்றனர். இத்தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தினைக் காட்டிக் கொடுப்பதனைப் பயன்படுத்தி கடந்த காலத்தில்கிராமப்புற மக்கட் பகுதியினரை அணிதிரட்டிக் கொள்வதில் வெற்றி கண்ட யூ. என். பி — சி. ல. சு. க. முதலாளித்துவக் கட்சிகள் இன்று கிராமப்புற ஒடுக்கப்படும் மக்களின் அளவு கடந்த வெறுப்புக்கு உள்ளாகியுள்ளன.

தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் போராட்டமும் இதற்கு நல்ல சாட்சியாகும். தெற்கில் கிராமப்புற மக்களிடையே கிளர்ச்சி எழுச்சி நிலைமை உருவாகி வருகின்றது. இலட்சக்கணக்கான கிராமப்புற இளைஞர்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கவும் - டயர் நெருப்பில் சுட்டுப் பொசுக்கவும் யூ.என் பி முன் வந்துள்ளதற்குக் காரணம் அதுவே. இன்று இக் கட்சிகள் அங்கும் இங்குமாக சுழலக் காரணம் ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ ஆட்சியை காப்பது எப்படி என்ற பிரச்சினை சம்பந்தமாகவே. இராணுவ பாசிச சர்வதிகாரத்துக்குவழியமைப்பது எப்படி என்பது சம்பந்தமாகவே.

சீட்டுக் கூட்டத்தினை அங்குமிங்குமாகக் கலைத்து அதைச் செய்து கொள்ள முயற்சித்தாலும் 'ஏசை' வீசிவிட ஆளும்வர்க்கத்தில்எவருக்குத் தைரியம் இல்லை. அத்தகையதொரு நிலையில் தொழிலாள வர்க்கம் புரட்சிகரத் தலையீட்டில் இறங்குமா என்ற பீதியும் அவர்களின் தலைக்குள் உள்ளது.

1917ல் ஸார் ருஷ்யாவில் நிலவிய நிலைமை இதற்கு எவ்வளவு சமானமானது? ட்ரொட்ஸ்கி 'ருஷ்ய புரட்சியின் வரலாறு' என்ற நூலில் அதனைக் காவியப் பாணியில் விபரித்துள்ளார். ஸார்

(13-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# பேர்ளின் மகாநாடு வழிகாட்டுகின்றது..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மாகியுள்ளது. அமெரிக்காவுடனான மோதுதல்கள் உக்கிரமடையும் அதேவேளையில் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட யப்பானியப் பிரதமர் மியாஷாவா, 1945ன் பின்னர் முதற்தடவையாக படைகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அரசாங்கத்துக்கு வரையறையற்ற அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

''ஜப்பானிய ஏகாதிபத்தியம் ஐக்கிய நாடுகள் சபையின் முடுதிரையின் கீழ் தனது படைகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கான முதலாவது அரங்கினை வழங்கும் பொருட்டு இந்தோசீனத்தை 'மறுசீரமைக்கும்' அதன் திட்டத்துக்கான மையமாகக் கம்போடியாவை நோக்குகின்றது'' என இப்பிரேரணை குறிப்பிட்டது.

## யூகோசிலவியா

இப்பிரேரணை தொழிலாளர்களை யூகோசலவாக்கியாவின் படிப்பினைகள் பக்கம் திரும்புமாறும் வேண்டியுள்ளது. அங்கு ஸ்டாலினிச பிற்போக்குத் தேசியவாதிகளதும் 'கொம்பிரதோர்' முதலாளிகளதும் முதலாளித்துவப் புனருத்தாரண வேலைத்திட்டம் உள்நாட்டுப் போருக்கு இட்டுச் சென்றுள்ளது.

தொழிலாளர் இயக்கத்தில் உள்ள தேசியவாதத் தலைவர்கள் நாட்டுக்கு நாடு வேறுபட்டவர்கள் அல்லர் என எச்சரிக்கை செய்த இப்பிரேரணை 'தொழிலாளர்களை இனவாதத்துக்கும், தேசிய வெறிக்கும் எதிராகப் போராடும்படியும் இவ்வெறியர்களை தொழிலாளர் இயக்கத்தில் இருந்து வெளியேற்றும்படியும்' வேண்டியுள்ளது.

நான்காம் அகிலத்தினைக் கட்டி எழுப்புவது பற்றிய பிரேரணை, ஸ்டாலினிசத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் எதிரான நீண்ட நெடும் போராட்டத்துக்கும், தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலக இயக்கத்தின் வளர்ச்சிக்கும் இடையேயான தொடர்பினை நிலைநாட்டியது.

''அடுத்த மாபெரும் புரட்சிகரக் கிளர்ச்சியில் தொழிலாள வர்க்கம் அடியோடு செல்வாக்கிழந்துபோன அல்லது ஏற்கனவே முழுமனே சிதறுண்டுபோன ஸ்டாலினிசக் கட்சிகளின் தலைமையின் கீழ் வரப்போவதில்லை. மாறாக நான்காம் அகிலமும் அதன் பகுதிகளுமே இந்த இயக்கத்துக்குத் தலைமை வழங்கக் கூடிய நிலைமையில் இருக்கும்.''

மூன்றாவது முக்கிய பிரேரணை சோவியத் யூனியன், சீனா, கிழக்கு ஐரோப்பாவில் அவர்களின் முக்கிய நலன்களை அச்சுறுத்திக் கொண்டுள்ள ஸ்டாலினிச கொலைகாரர்களுக்கும் முதலாளித்துவ பகற்கொள்ளைக்காரர்களுக்கும் எதிராகக் கடுமையான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு 'சுடாட்டமற்ற ஒத்துழைப்பு' வழங்கச் சபதம் பூண்டுள்ளது. தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக நடாத்தப்பட்டு வரும் உள்நாட்டு யுத்தத்தில் கொர்பச்சேவ், ஏகாதிபத்தியத்தின் உறுதியான ஆதரவினை எதிர்பார்த்துள்ளதாக இது எச்சரிக்கை செய்தது.

தொழிற்சங்க உரிமைகளை பேணும் அவர்களின் போராட்டத்தில் முதலாளித்துவ அரசினால் பழிவாங்கப்பட்டும், பொய் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுமுள்ள வர்க்கப் போர் சிறைக் கைதிகளைக் காக்க ஒரு பிரச்சார இயக்கத்தினைத் தொடுப்பதென முடிவு செய்தது. இதன் மூலம் மகாநாடு, தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை நடைமுறை ரீதியில் ஐக்கியப்படுத்தும் விதத்தில்ஒருபெரும்படி முன்சென்றுள்ளது. இம் முடிவினைத் தொடர்ந்து ஒரு கருங்காலியினால் ஓட்டப்பட்ட பஸ்சின் மேல் சுட்டார் என்ற குற்றச்சாட்டுக்கு எதிரான மேன்முறையீட்டினை எதிர்பார்த்துப் பிணையில் நிற்கும் அமெரிக்க கிறேஹோஹவுண்ட் பஸ்சாரதி ரொஜர் கவுத்ரா ஒரு பலம்வாய்ந்த உரை நிகழ்த்தினார்.

அத்தகைய ஒரு பிரச்சாரத்தினை ஒழுங்கு செய்யவும், கூட்டிணைக்கவும் ஒரு அனைத்துலகத் தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டி தெரிவு செய்யப்பட்டது.

மகாநாடு, வட சைபீரியாவைச் சேர்ந்த வொர்குட்டா சுரங்கத்தொழிலாளர்களுக்கு உடனடியாக அவசியப்படும் வைத்திய, மருந்து வழங்கல்களைத் திரட்ட முடிவு செய்தது. அங்கு 'பெரெஸ்ரொய்கா' வேலைத்திட்டத்தின் கீழ் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் அமுல் செய்யப்பட்ட சீர்குலைப்பு நடவடிக்கைகள் சுரங்கத் தொழிலாளர்களின் உயிர்களை இந்தக் குளிர் காலத்தில் ஆபத்துக்குள்ளாக்கியுள்ளது.

யுத்தத்துக்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்களை அணிதிரட்டும் போராட்டமாக, மகாநாடு சோசலிசத்துக்கான இளைஞர்களின் போராட்டம் பற்றிய ஒரு பிரேரணையை நிறைவேற்றியது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் 'பாட்டாளி வர்க்க இளந்தலை முறையினருக்கு வழங்கப்பட்டுள்ள ஒரே உரிமை ஒரு புதிய ஏகாதிபத்திய யுத்த களத்தில் செத்து மடிவதே' என அது எச்சரிக்கை செய்தது. இந்த இளம் தலைமுறையினரின் தலைவிதி சோசலிசப் புரட்சியுடன் பிரிக்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது என இது பிரகடனம்செய்துள்ளது,

''தொழிலாள வர்க்க இளைஞர்கள் தொழிலாள வர்க்கத்தின் எதிர்வரும் புரட்சிகரப் போராட்டங்களுள் ஒரு புதிய முன்நோக்கினையும்வேலைத்திட்டத்தையும் — சோசலிச அனைத்துலகவாதம் — முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.''

இரண்டு நாள் கலந்துரையாடல் பூராவும் ஏகாதிபத்திய யுத்தத்திற்கு எதிரான போராட்டம் நான்காம் அகிலத்துக்கான போராட்டம — பாட்டாளி வர்க்கத் தலைமையில் வரலாற்று நெருக்கடியைத் தீர்ப்பதும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியை

(14 ம் பக்கம் பார்க்க)

# ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவ...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் தட்டினரில் பலருக்கு ஸாரை குழிபறித்துவிட்டுஆட்சியைக் காக்கும் அவசியம் இருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்த எவரும் முன் வரவில்லை. எல்லோருமே நீங்கள் அதற்கு இணங்கினால் நான்அதற்கு ஆதரவு! அவசியமானால் நாம் உதவியளிக்கின்றோம்' என்ற பாஷையிலேயேபேசிக்கொண்டனர். ஸார் பயணம் செய்த புகையிரதத்தினை நிறுத்துவது பற்றி பேசிக்கொண்ட போதிலும் அதைச் செய்ய எவரும் இருக்கவில்லை. ஸாரை வெளியேற்றச் சக்தியற்ற ஒரு கூட்டம் தலைவர்கள் இதன் பின்னர் அரசமாளிகைத் தொலுக்கரைப் பிடித்தனர். சகல பாவங்களையும்அவரின் தலையில்போட்டு ஸார் ஆட்சியைக் காப்பாற்ற முயற்சித்தனர்.

ஆனால் வெகுஜனங்கள் புரட்சிகரமான முறையில் தலையிட்டதன் மூலமே ஸார் விரட்டி அடிக்கப்பட்டான்: அது 1917 அக்டோபரில் போல்ஷிவிக் கட்சியின் தலைமையின் கீழ் சகல துரோகத் தலைவர்களையும் பின்னணிக்குத் துடைத்துக் கட்டி, தொழிலாள வர்க்கம் வெகுஜனங்களின் தலைவனாக கிளர்ந்து எழுந்து,தமது கைக்குள் அரச அதிகாரத்தினைக் கைப்பற்றிய பின்னரே அந்த வெற்றி உச்சக்கட்டத்தை அடைந்தது. இது முதலாம் உலக யுத்தத்தின் மத்தியில் இடம் பெற்றது.

## நான்காம் அகிலத்தைக் கட்டி எழுப்பு

நாம் உயிர்வாழும் இந்த ஏகாதிபத்திய யுத்தத்தினதும் காலனித்துவத்தினதும் காலப் பகுதியின் அரசியல் அர்த்தம் அதுவே. லெனின் — ட்ரொட்ஸ்கி தலைமை தாங்கியபோல்ஷிவிக் கட்சி போன்ற ஒரு பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத கட்சி இன்று உலகத் தொழிலாள வர்க்கத்துக்கு அவசியம். அக்கட்சியை நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு கட்டி எழுப்புகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறும் அதன் போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் நாம் கோரும் போது, நாம் உலகக் கட்சியைக் கட்டி எழுப்ப அர்ப்பணம் செய்யுமாறு கோருகின்றோம்.

இலங்கையுள் எமது போராட்டம், பாட்டாளி வர்க்க அனைத்துலகவாதத்தின் அடிப்படையில் யூ.என்.பி.யை வெளியேற்றி, ஏகாதிபத்தியச் சார்பு மக்கள் முன்னணிகளுக்கு இடமளிக்காமல் தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரத் தொழிலாள வர்க்கமும் தமிழ் தேசிய இனமும், கிராமப்புற விவசாயிகளும் உள்ளடங்கிய ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் அடிப்படையிலேயே இடம்பெற முடியும். இலங்கை-தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியமாகக் கட்டியெழுப்பப்படும் தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தினை ஊர்ஜிதம் செய்வதென்பது உலகத் தொழிலாள வர்க்கத்தினை ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக பூகோள ரீதியில் புரட்சிகரமான முறையில் அணிதிரட்டுவதுடன் இணைந்துள்ளது. அனைத்துலகக் குழு நவம்பர் 16—17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் நடாத்தும் தொழிலாளர் மகாநாடு அந்த விதத்தில் எமக்குப் பெரிதும் அவசியமானது. அதன் முன்நோக்கினை அங்கீகரித்து, அதற்கு ஆதரவளித்துப் போராடுமாறு நாம் சகலரையும் வேண்டுகின்றோம்.

நன்றி.

# அம்பலாங்கொடை பு. க. க.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய அதிபருக்கு மீண்டும் விடயத்தை தெளிவுபடுத்தியதைத் தொடர்ந்தே வாய் முறைப்பாடு எடுக்கப்பட்டதோடு முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டது. நாட்டின் பொது சட்ட விதிகளின் படி கொலை முமற்சியில் ஈடுபட்டோரை கைது செய்து விசாரணை செய்வது வழக்கமாக இருந்த போதிலும் இந்த பு. க. க. அங்கத்தினருக்கு எதிரான கொலை முயற்சி தொடர்பாக அவர்களை கைது செய்யவோ அல்லது விசாரணை நடாத்தவோ பொலிசார் மறுத்துள்ளனர். இதற்கு மாறாக குண்டன் லக்ஷ்மன் பொலிசில் செய்துள்ளமுறைப்பாட்டின்பேரில் பு. க. க. உறுப்பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக பொலிஸ் நிலைய அதிபர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக அப்பகுதி மக்களிடையே கடும் ஆத்திரமும், எதிர்ப்பும் வளர்ச்சி கண்டுள்ளது. அற்ப விடயத்துக்காகவும் கிராம ஒடுக்கப்படும் மக்களை இழுத்துச் செல்லும் பொலிசார் இக்கொலைகாரர்களுக்கு ஆதரவு வழங்குவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

யூ. என். பி. கொலை முயற்சியின் இலக்கு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் நடவடிக்கைகளுக்கு முற்றுப் புள்ளி வைப்பதே. கிராமப் படுகொலைகளுக்கு எதிராக பு. க. க. உறுதியோடு தொடர்ந்து நடாத்தி வரும் பிரச்சாரம் கிராமப்புற மக்களிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையிட்டு யூ. என். பி. அரசாங்கமும் அதன் கைக்கூலிகளும் குழப்பம் அடைந்துள்ளது.

அம்பலாங்கொடை பிரதேச யூ. என். பி. ஜுன்டா காரர்களின் முயற்சியை தோற்கடிக்க அனைத்துலகத்தொழிலாள வர்க்கத்தின்பலத்தினை அணிதிரட்ட பு. க. க. முழுப் பலத்துடனும் போராடும். இக்குண்டர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் படி நெருக்குவதுடன் மட்டும் நின்று விடாது இச்சதியின் சகல அம்சங்களையும் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு அம்பலப்படுத்த நாம் தொடர்ந்து போராடுவோம். அம்பலாங்கொட வத்துகெதர -பரகஹதோட்ட மக்களிடமிருந்து எமக்கு ஏற்கனவே கிடைத்துள்ள ஆதரவினை நாம் பெரிதும் மதிக்கின்றோம்.

# பிரேமதாச அரசாங்கத்தின் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ளர்களுக்கு திருப்பிச் செலுத்தும் கடன், வட்டி கொடுப்பனவும் விளங்குகின்றன. அத்தோடு துண்டுவிழும் 6700 கோடி ரூபாய்களை அடைக்க மேலும் 2660 கோடி ரூபாய்களை வெளிநாட்டுக் கடனாகப் பெறப்போவதாக நிதி அமைச்சர்குறிப்பிட்டுள்ளார். இதற்கான நிலைமையாகவே முழு நாட்டினையும்முதலீட்டு வலயமாக்கும் வாக்குறுதியை பிரேமதாச அரசாங்கம் வழங்கியுள்ளது.

★ உலக வங்கி தாக்குதல்களுக்கு எதிராகவும் ★ வட—கீழ் மாகாண இனவாத யுத்தத்தினை நிறுத்தவும் ★ கிராமப்புற படுகொலைகளை நிறுத்தவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் யூ.என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றும் பொதுவேலை நிறுத்தத்துக்கான பிரச்சாரம் அவசியம். தொழிலாளர் பேராளர் மகாநாடு கூட்டப்பட்டு, இம்முடிவினை எடுக்க தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், மாணவர்கள்போராடுவது அவசியம் சமசமாஜ-ஸ்டாலினிச-நவசமசமாஜ—இ.தொ.கா துரோகிகளிற்கு எதிராக இப்போராட்டத்திற்கான தலைமையைக் கட்டியெழுப்ப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறு நாம்வேண்டுகின்றோம். அதன் மூலமே இந்த ஏகாதிபத்திய வேலைத்திட்டங்களுக்கு எதிராக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்கும் போராட்டத்தினை முன்னெடுக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



## காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி பகுதி 2ன் தொடர்ச்சி

அகிலத்தின் கொள்கைகளை அகிலமே பாராட்டிக் கொண்டிருக்கிற வேளையில், ஸ்டாலினிச கட்சிகளை இனிமேலும் சீர்திருத்தம் முடியும் என்று பேசுவது சாத்தியமில்லை. ஒரு புதிய, நான்காம் அகிலத்தை கட்டுவதற்கான வேலையைத் தொடங்குவது அவசியமாக இருந்தது.

''ஹிட்லரின் வெற்றியை உத்தரவாதம் செய்த கொள்கைகள் சவால் விட முடியாதவை என்று மாஸ்கோ தலைமை கூறியதோடு மட்டுமல்ல, என்ன நடந்தது என்பது பற்றிய அனைத்து விவாதங்களையும் தடை செய்தது. இந்த வெட்கம் கெட்ட தடையுத்தரவு மீறப்படவுமில்லை; தூக்கி வீசப்படவும் இல்லை. தேசிய மாநாடுகள் கிடையாது; சர்வதேச மாநாடு இல்லை, கட்சிக் கூட்டங்களில் விவாதம் கிடையாது: பத்திரிகையில் விவாதம் ஏதுமில்லை!

பாசிசத்தின் முழக்கத்தினால் வெகுண்டு எழாத இயக்கமும் அதிகாரத்துவத்தின் அவ்வாறான ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளுக்கு கழுதையை போன்று அடிபணிவதும் அதன் மூலமாக எடுத்துகாட்டுவது அது மோசமாகி விட்டது, அதனை ஒரு போதும் எதுவும் உயிர்ப்பிக்க முடியாது என்பதாகும். இதனை வெளிப்படையாகவும் பொதுவாகவும் கூறுவது தொழிலாள வர்க்கத்துக்கும் அதன் எதிர்காலத்துக்கும் நமது கடமையாகும் எமது அனைத்து அடுத்தடுத்த வேலைகளில் உத்தியோக பூர்வமான கம்யூனிச அகிலத்தின் வரலாற்று வீழ்ச்சியை நமது தொடக்க புள்ளியாக எடுப்பது அவசியமாகும்.'' (லியான் டிராட்ஸ்கியின் எழுத்துக்கள் 1322—33, பக்கம் 304-5). டிராட்ஸ்கி அவரது வாழ்க்கை காலத்தில் எடுத்த அனைத்து முடிவுகளிலும் நான்காம் அகிலத்தை ஸ்தாபிக்க எடுத்த முடிவைவிட மிக ஆழமானதும், தொலைநோக்கு கொண்டதும், சர்ச்சையானதும் மறுபரிசீலனை செய்ய முடியாததும் வேறு எதுவும் இல்லை. இதற்கு சோவியத் அரசாங்கமோ அதன் சர்வதேச அடிவருடிகளை கொண்ட இயந்திரமோ வெறித்தனமான கண்டனங்களை விடுத்தது, அது ஒரு சில வருடங்களுள் சோவியத் யூனியனின் எல்லைகளுக்குள்ளும் அப்பாலும் ஜி.பி.யு. — என்.கே.வி.டி. நடத்திய கொலைகளிலும் மாஸ்கோ வழக்கு குற்றச்சாட்டுகளிலும் அவற்றின் முடிவான வெளிப்பாட்டைக் காட்டியது டிராட்ஸ்கியின் அனுதாபிகளென தம்மை கருதிகொண்ட பலரின் மத்தியிலும் கூட அவர் நான்காம் அகிலத்தை அமைக்க விடுத்த அழைப்பானது, பக்குவமற்றதாகவும் புத்திசாலித்தனமற்றதாகவும், சாகசம் நிறைந்ததாகவும் கூட தோன்றியது. இவ்வாறான விமர்சனங்கள் பொதுவாக அரசியல் நிலைமையும தோற்றமளிக்கும் ''யதார்த்தங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது: அவை டிராட்ஸ்கி ஒரு சர்வதேச இயக்கத்தை கட்டுவதற்கு மிகவும தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார், அவருடைய அழைப்பு யாரினாலும் கவனிக்கப்படாதிருக்கும், சர்வதேச இயக்கத்தினுள்ளே மூன்றாம் அகிலத்தின்செல்வாக்கு இன்னும் பெரிதாகவே இருந்தது, ஒரு வெற்றிகரமான புரட்சிகர அடிப்படையிலிருந்து தான் ஒரு புதிய அகிலத்தை கட்ட முடியும் போன்றவை. ஆனால் அப்படியான ''யதார்த்தம்'' அது அவ்வப் போதைய கஷ்டங்களை அனுபவவாத முறையில் பட்டியல்போடுவதை கொண்டிருந்ததுமேலோட்டமான தன்மை கொண்டதாக இருந்தது.

டிராட்ஸ்கியை பொறுத்தவரையில் அரசியல் யதார்த்தம் என்ற தன்மை அடிப்படையானதும் விதியின்கீழ் செயல்படுவதுமான வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் தொடர்புடைய வேலைதிட்டம், கொள்கை பற்றியதாகும். ஜெர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் தோல்வியில் சோவியத் அதிகாரத்துவம் ஆற்றிய பங்கும் இந்த பேரழிவிற்கு அதன் எதிர்செயல்பாடும் அரசியல் சமூகபரிணாமத்தில் அல்லது ஸ்டாலினிச ஆட்சியின் சீரழிவில் ஒரு திருப்பு முனையைகுறித்தது என்று நாம் கூறலாம். நான்காம் அகிலத்தை உருவாக்க டிராட்ஸ்கி விடுத்த அழைப்பானது, அதிகாரத்துவமும், மூன்றும் அகிலமும் செய்த புதிய, மிக பயங்கரமான குற்றத்திற்கு தண்டனையாக எண்ணி விடப்படவில்லை அது சரியாக கூறுவோமாயின் ஸ்டாலினிச ஆட்சியும் விபச்சாரம் செய்யப்பட்ட மூன்றாம் அகிலமும், சீர்திருத்த முடியாத நிலைமையில் உள்ளது என்ற உண்மையை எதிர்கொள்ளும் அவசியமான அரசியல் பதிலாகும் ஜெர்மன் தொழிலாளர் வர்க்கத்தின் அழிவிற்கு வழிவகுத்த கொள்கைகளுக்கு ஆதரவளித்ததின் மூலம் மூன்றும் அகிலம் எடுத்து காட்டியதானது அது மிக குறைந்த பட்சம் கூடசர்வதேச சோசலிச வளர்ச்சிக்கு இனிமேலும் சேவை செய்யவில்லை என்பதாகும். மூன்றாம் அகிலத்துடன் இணைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் ஜி.பி.யு. — என் கே.வி.டி. யினால் கூலிக்கு அமர்த்தப்பட்ட எடுபிடிகள் ஆவார்கள். கிரெம்ளின் என்ற நகரத்திலிருந்து கிடைக்கும் எந்தவொரு கட்டளையையும் அவர்கள் செய்து முடிக்க தயாராயிருந்தனர் சர்வதேசிய மார்க்ஸிசத்துக்கு மறுபடி உயிரூட்டுவதை மூன்றாம் அகிலத்தை சீர்திருத்துவதன் மூலமாக செய்யப்பட முடியாது. ஆனால் அதற்கு எதிரான ஒரு ஈவிரக்கமற்ற போராட்டத்திலேயே ஆகும் இவ்வாறான உலக சோசலிச மார்க்சத்துக்கு தம்மை அர்ப்பணித்தவர்களுக்கு விடப்பட்டிருக்கும் ஒரே ஒரு ''யதார்த்தம்'' செயல் நடவடிக்கை ஒரு புதிய நான்காம் அகிலத்தை கட்டுவதாகும்.

பழைய அகிலம் சீர்திருத்த முடியாத நிலையில் இருப்பதை போலவே அரசாங்கமும் இருந்தது, அதன் கட்டளைகளையே அது பணிவுடன் நிறைவேற்றியது, கம்யூனிஸ்ட் கட்சி அரசு அதிகாரத்தை கொண்டிருந்த சோவியத் யூனியனுக்குள் ஆளும அதிகாரத்துவத்திற்கு எதிராக நான்காம் அகிலம் அரசியல் புரட்சிக்கொடியை உயர்த்தியது, ஸ்டாலினிச ஆட்சியை புரட்சிகரமான முறையில் தூக்கி வீசுவது; அவசியமானது. ஏனெனில் அதிகாரத்துவம் ஒரு தனிப்பட்ட சமூக தட்டாக இருக்கையில் அதன் பொருளாதார நலன்கள் தொழிலாளர் வர்க்கத்திடமிருந்து ஆழமாக அன்னியப்பட்டிருந்தது.

சோவியத் சமுதாயத்தின் மீது அதன் ஆதிக்கம் சோவியத் யூனியன் ஒரு தொழிலாளர் அரசாக நீடிப்பதுடன் உடன்பாடற்று இருந்தது. நான்காம் அகிலத்தை அமைப்பதற்கான அழைப்பை எந்த அரசியல் முடிவுகான அடிப்படையாகக் கொண்டு டிராட்ஸ்கி விடுத்தாரோ, அவற்றிற்கு தத்துவார்த்த ஆதாரமும் வழங்கப்பட்டு 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' என்ற நூலின் மூலமாக ஒரு முடிவான வேலைதிட்ட வடிவமும் கொடுக்கப்பட்டது. இங்கே தான் இந்நூலின் அடிப்படையான முக்கியத்தவம் இருக்கின்றது. 1914ல் லெனின் 'ஏகாதிபத்தியம்' என்ற நூல் சமூக ஜனநாயகத்தின் காட்டிக் கொடுப்பானது தொழிலாளர் இயக்கத்தினுள் அது சர்வதேச மூலதனத்தின் ஏஜென்ஸியாக சமூக பரிணாமம் அடைந்ததன் அரசியல் வெளிப்பாடாகும். ஸ்டாலினிச ஆட்சியின் குற்றங்களின் அவசியமான வெளிப்பாட்டுக்கு காரணமான அதன் பொருளாதார நலன்களையும் சமூக உறவுகளையும் காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி வெளிப்படுத்தியது. சமூக ஜனநாயகத்தைப் போல் ஸ்டாலினிசத்தையும் ''சீர்திருத்த முடியாது'' அதாவது தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்கு சேவை செய்யும் படியாக மாற்ற முடியாது. ஏனென்றால் அதன் சொந்த நலன்கள் ஏகாதிபத்தியத்தின் நலன்களுடன் பிணைக்கப்பட்டதாகவும், சோவியத் மற்றும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்தின் நலன்களுக்கு விரோதமாகவும் இருந்தது.

டிராட்ஸ்கியின் மதிப்பீடுகள் நிகழ்ச்சிகளின் மூலம் உறுதி செய்யப்படுவதற்கு அதிக காலம் எடுக்கவில்லை, ஹிட்லரின் வெற்றிக்கு பின்னர் ஸ்டாலினிச ஆட்சியும் கம்யூனிச அகிலமும் வலது சாரி திருப்பமெடுத்தது. பாசிச வெற்றிக்கு சோவியத் அதிகாரத்துவத்தின் எதிர் தாக்கம் நாடுகளின் கழகத்தில் (League of Nations) உறுப்பினர் பதவியை நாடியதாகும். அதனைத்தான் லெனின் ''திருடர்களின் சமையலறை'' என்று வர்ணித்திருந்தார்.

(தொடர்ச்சி- அடுத்த இதழில்)

## தம்பு – கம்யூனிச தொழிற்சங்கத்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை எனக் கூறி தடை செய்யும் தம்பு, ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளித்துவ நிர்வாகிகளதும் வேலைத்திட்டங்களை இங்ஙனம் சீ. எம். யு. உள்ளடங்கலான சகல தொழிலாளர் மீதும் சுமத்திவிட இப்பிற்போக்கு அரசியலில் ஈடுபட்டுள்ளது மட்டுமல்ல யூ. என். பி. அரசாங்கத்திலிருந்தும் விலகி தமது கையில் அரசியல் பலத்தைத் மாற்றிவிட செயற்படும் முதலாளித்துவ கும்பல்களுக்கு பக்கபலமாக சீ. எம். யூ.வை அணிதிரட்டவும் இன்று முன்வந்துள்ளார்.

சீ. எம். யூ. தொழிலாளர் இந்த ஏகாதிபத்தியப் பாணி. அடிமட்டம் வரை நாற்றமெடுத்துள்ள தம்பு உள்ளடங்கலான தலைமைகளை தூக்கி வீசிவிட நடவடிக்கை எடுப்பது தமது உரிமைகளுக்கான போராட்டத்துடன் இணைந்திருப்பதாக உணர்ந்து கொண்டு, புரட்சிகர தலைமைத்துவத்தைகட்டியெழுப்பும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணைவது அவசியமென நாம் தெரிவிக்கிறோம்.

## பில் பிரெஸ்ட் . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள புரட்சிகர மரபுகளை பெருமையுடன் கொண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் புதிய புரட்சிகரப் போட்டியின் உச்சியில் ட்ரொட்கிச இயக்கத்தினைத் தூக்கிப் பிடிப்பது, இந்த முக்கிய போக்குக்களே. ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிரான உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்கான அனைத்துலகக் குழுவின் இயக்கமும், சோவியத் யூனியனுள் அனைத்துலகக் குழுவின் கிளையை கட்டி எழுப்ப நடாத்தும் போராட்டமும் தாங்கள் நடாத்திய போராட்டத்தின் புரட்சிகர உள்ளடக்கத்துக்கு நல்ல சாட்சியாகும்.

புரட்சிகர திடசங்கற்பத்தினை பிரதிபலிக்கும் எமது உறுதிப்பாடானது இன்றைய தலைமுறையினரிடையே உங்கள் ஜீவிய காலப் போராட்டங்களின் வெளிப்பாட்டைக் குறிக்கிறது, இந்தப் பிரதிபலிப்புக்கள் மூலம் நீங்கள் உயர்த்திப் பிடித்து வந்த எதிர்பார்ப்புக்கள் ஊர்ஜிதம் செய்யப்படுவதோடு, மனித இனத்தின் சோசலிச எதிர்காலமும் உத்தரவாதம் செய்யப்படும்.

## பேர்ளின் மகாநாடு வழிகாட்டு....

(13 ம்பக்கத் தொடர்ச்சி)

கட்டி எழுப்புவதும் என்பது தெளிவுபடுத்தப்பட்டது.

நான்காம் அகிலத்தினைக் கட்டி எழுப்பும் பிரேரணை விளக்கியுள்ளது போல்: ''நா.அ.அ.கு.வினால் நீண்ட காலமாகத் தொடுக்கப்பட்ட போராட்டம், நான்காம் அகிலம் கட்டியெழுப்பப்பட வேண்டிய அடிப்படையை நிலைநாட்டியுள்ளது. வேறு அடிப்படையே கிடையாது. நான்காம் அகிலத்தினைக் கட்டி எழுப்புவது சகல சந்தர்ப்பவாதிகளும் காட்டி வந்தது போல மத்தியவாதிகளின் 'மறுஅணிதிரள்வின்' மூலமாக அன்றி ஏகாதிபத்தியத்தின் அரசியல் ஏஜன்டுகளால் விநியோகிக்கப்பட்ட கள்ளநோட்டு மோசடிகளில் இருந்து நிச ட்ரொட்ஸ்கிச வேலைத்திட்டத்தினைத் தொடர்ந்து பிரித்து வைப்பதன் மூலம் பிரிகோட்டினை வரைவதன் மூலமே இடம் பெறுகின்றது.

''அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் எதிர்காலம், சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியாக நான்காம் அகிலத்தினைக் கட்டி எழுப்புவதிலேயே தங்கியுள்ளது இப்பணி, புறநிலை நிலைமையினால் நேரடியாக முன் வைக்கப் பட்டுள்ளது. அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் ஐக்கியப்பட்ட நடவடிக்கை மூலம் மட்டுமே முதலாளித்துவ அமைப்பினைத்தூக்கி வீசுவதன் மூலம் மூன்றாம் உலக யுத்த அச்சுறுத்தலுக்கும் அணுவாயுத பேரழிவுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும். ஆனால் இந்த ஐக்கியத்தினை நான்காம் அகிலத்தினை அனைத்துலகக் குழுவின் தலைமையின் கீழ் கட்டி எழுப்புவதன் மூலம் மட்டுமே அடைய முடியும்.

''இம்மகாநாடு எங்கும் உள்ள தொழிலாளர், இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது: நான்காம் அகிலத்தின் பதாகையின் கீழ் வாருங்கள். சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியை கட்டி எழுப்புங்கள். அதன் மூலம் முதலாளித்துவ அமைப்பைத் தூக்கி விசவும், நாகரீகத்தை அழித்தொழிக்கும் அதன் அச்சுறுத்தலை அடியோடு ஒழிக்கவும் எல்லாவற்றுக்கும் மேலான தீர்க்கமான நடவடிக்கை எடுங்கள்.''

## பேர்ளின் நிதி இலக்கைத் தாண்டியது

பேர்ளின் உலகத் தொழிலாளர் மகாநாட்டை முன்விட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் திரட்டி வந்த 2 இலட்சம் நிதி பு.க.க.பேர்ளின் கிளைத் தோழர்கள் திரட்டி வழங்கிய பெருந்தொகையுடன் 2 இலட்சம் இலக்கைத் தாண்டிவிட்டது என்ற செய்தியை அறிவிப்பதில் பு.க.க. பெருமகிழ்ச்சி கொள்கின்றது. இது வரை ரூபா 217,750/- திரண்டுள்ளது. இந்நிதியை திரட்ட உதவிய அங்கத்தினர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது

படிப்பகம்

www.padippakam.com




# தொழிலாளர் பாதை

1-50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 43 ★ நவம்பர், 1991 ★


### அகில இந்திய தொழிலாளர் மாநாடு

ஏகாதிபத்திய நிதிநிறுவனங்களான பன்னாட்டு நிதியம், உலகவங்கி ஆகியவற்றின் நிபந்தனைகளை ஏற்று நரசிம்மராவின் இ.காங் முதலாளித்துவ அரசாங்கத்தால கொண்டு வந்துள்ள புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக இந்திய தொழிலாள வர்க்கத்தின் மீது கடும் வர்க்க ஒடுக்குதல் கூட்டப்பட்டுள்ளது. இதனால் மிகவும் அதிகரிக்கும் ஆலைமூடல்கள் ஆட்குறைப்பு சம்பளவெட்டு, DA சீலிங், சமூகசேவை வெட்டு, ஆலைகளை தனியார் மயமாக்குதல் ஆகியவற்றை எதிர்த்துப் போராட தொழிலாள வர்க்கத்துக்குள் இருக்கும முதலாளித்துவ ஏஜெண்டுகளான ஸ்டாலினிச, திரிபுவாத தலைமைகளை அகற்றி புரட்சிகர டிராட்ஸ்கிச தலைமையைக் கட்டவும், சோசலிச வேலைத்திட்டத்தை முன்னெடுக்கவும், சோசலிசத் தொழிலாளர் கழகம் ஏப்ரல் 1992ல் "அகில இந்தியத் தொழிலாளர் மாநாட்டைக் கூட்டவுள்ளது. அம்மாநாட்டில் கலந்து கொள்ள வருமாறும் மேலும் இம்மாநாட்டிற்கான நன்கொடையையும தந்துதவுமாறும் வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும், இளைஞர்களையும் சோசலிசத் தொழிலாளர் கழகம் அறைகூவி அழைக்கின்றது

# ஏகாதிபத்தியத்தின் 'புதிய உலக ஒழுங்கை' அமைக்க ஸ்டாலினிஸ்டுகள் நடத்தும் 'நவ. 29 ஒரு நாள் பந்த்'தை, தொழிலாளர்-விவசாயி அரசாங்கம் அமைப்பதற்கான காலவரையற்ற பொது வேலை நிறுத்தமாக்கப் போராடு !

முதலாளித்துவ காங்கிரஸ் கட்சியின் சிறுபான்மை அரசாங்கம் உலக வங்கி- பன்னாட்டு நிதியம் ஆகியவற்றின் நிபந்தனைகளை எற்று அரசு நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்த்தல், பன்னாட்டு பகாசுரக் கம்பெனிகளுக்கு கதவைத் திறந்துவிடல், நலிந்த ஆலைகளைமூடல், மானியங்களை வெட்டல், சமூக சேவை செலவுகளைக் குறைத்தல் போன்ற புதிய பொருளாதாரக் கொள்கைக்கு எதிராக—சோசலிச மற்றும் புரட்சிகர ஜனநாயக வேலைத் திட்டங்களைச் செயற்படுத்தும் தொழிலாளர்-விவசாயி அரசாங்கத்தை அமைக்கப் போராடுமாறு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம், தொழிலாளர் வர்க்கத்திற்கு அறைகூவல் விடுக்கின்றது. நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கத்தைக் கவிழவிடாது ஒருபுறம் காப்பாற்றிக் கொண்டும், மறுபுறம் அதன் புதிய பொருளாதார கொள்கைக்கு எதிராகத் திரண்டு எழுந்துவரும் தொழிலாளர்கள், விவசாயிகள், மற்றும் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன்—அதற்கு வடிகாலாக சிபிஐ (எம்) சிபிஐ ஸ்டாலினிசக் கட்சிகள் நடத்த இருக்கும் நவம்பர் 29, 'ஒருநாள் பாரத் பந்த்தை', தொழிலாளர் விவசாயி அரசாங்கத்தை அமைப்பதற்கு இட்டுச் செல்லும் காலவரையற்ற அகில இந்திய பொதுவேலை நிறுத்தமாக மாற்றப் போராடுமாறு தொழிலாள வர்க்கத்திற்கும், விவசாயிகள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் மற்றும் புரட்சிகர அறிவு ஜீவிகளுக்கும் சோசலிசத் தொழிலாளர் கழகம் வேண்டுகோள் விடுக்கின்றது. அத்துடன் சிபிஐ (எம்), சிபிஐ ஸ்டாலினிசக் கட்சித் தலைமைகளையும் சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி ஸ்டாலினிச தொழிற்சங்க அதிகாரத்துவத் தலைமைகளையும் முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டிக்குமாறும், தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றது.

## புதிய பொருளாதாரக் கொள்கை

பணத்தின் மதிப்பை 20% குறைத்த ராவின் அரசாங்கம், அந்நிய முதலாளிகள் உள்நாட்டு முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு, இந்தியத் தொழிலாள வர்க்கத்தை மேலும் ஒட்டச் சுரண்டுவதற்கு ஏதுவாக, வெளிநாட்டு வங்கிகள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கி உள்ளது ஸ்டாலினிஸ்டுகள் ஆதரித்துத் தாங்கிய ஜனதாதள அரசாங்கம் 41% வெளிநாட்டு மூலதனத்திற்கு கதவு திறந்த நிலையில், ராவின் அரசாங்கம் இன்னும் ஒருபடி போய் 51% கதவு திறந்து விட்டுள்ளது. அந்நிய மூலதனவரவாலும் பன்னாட்டுப் பகாசுரக் கம்பெனிகளின் நுழைவாலும் உள்நாட்டு தொழில் நிறுவனங்கள் போட்டியிட முடியாது நலிவடையும் அதே நேரத்தில், அரசு நிறுவனங்களைத் தனியார் மயமாக்கல் முதலாளிகளின் கோரச் சுரண்டலுக்கு இந்தியத் தொழிலாள வர்க்கத்தைப் பலியிடப் போகின்றது.

"எதிர்காலத்தின் அரசின் பணிகள், சுகாதாரம் போன்ற சமூக நலத்துறைகளுடன் கட்டுப்படுத்தப்படும். வர்த்தகம், தொழில் போன்ற துறைகளை தனியார் துறைக்கென ஒதுக்கப்படும்" என்று மத்திய நிதிஅமைச்சர் மன்மோகன் சிங் கூறியுள்ளார (தினமணி (2-11-91),

அடிப்படை உணவுப் பொருட்களின் உற்பத்திக்கான உரமானியம் போன்றவற்றில் ஏற்படுத்திய வெட்டானது, உணவுப் பொருட்களின் விலையைப் பன்மடங்கு உயர்த்தியுள்ளது. பேர்க்குவர்த்துக் கட்டணம முதற்கொண்டு சரக்குக் கட்டணம உட்பட அனைத்து ரயில், பஸ், விமான கட்டணங்களும் உயர்ந்துள்ளன ரயில் பெட்டிகள் தயாரித்தல். மின்உற்பத்தி, எண்ணெய் எடுத்தல், துறைமுகங்களைப் பராமரித்தல், பஸ் போக்குவரத்து, தொலைத் தொடர்பு உட்பட தனியார் மயமாககலுக்கு பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது. நஷ்டத்தில் இயங்கும் 83 ஆலைகளையும் மூடப்போவதாக அரசாங்கம அறிவித்துள்ளது. இதில் 46 தொழிற்சாலைகள் ஏற்கனவே தனியாரால்நடத்த முடியாமல்நலிந்துபோய்தான், அரசு ஏற்றது பி&சி, ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், போல் கதவடைப்புச் செய்யப்பட்ட தொழிற்சாலைகளாலும, 1,80,000 நலிவடைந்த ஆலைகளாலும் பரந்த அளவில் தொழிலாளவர்க்கம் வறுமை நிலைகுத் தள்ளப்பட்டிருக்கிறது. இந்நிலையில் அமலபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கும 'புதிய பொருளாதாரக் கொள்கை' இ.காங் முதலாளித்துவ அரசாங்கத்தின் திவாலைப்படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருக்கிறது.

## இந்தியப் பொருளாதார நெருக்கடி

1947-ல் இருந்து மாறிமாறி வந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களின் சாதனை வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் மக்கள் எண்ணிக்கை மூன்றில் இரண்டு பங்காகி விட்டது, 1970 களில் 804 கோடி ரூபாயாக இருந்த பற்றுக்குறை 1985-1986ல் 6 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்ந்தது. இறக்குமதிக்கு தாராளமாக கதவைத் திறந்து விட்டதால் வர்த்தகப் பற்றுக்குறை 15 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் போய் விட்டது. அந்நியக் கடன் 1989-91ஆம் ஆண்டில் 1½ லட்சம கோடியாய்த் தாண்டி விட்டது. 1991 செப்டம்பரில் ஒரு ரூபாயின் உண்மை மதிப்பு (1947ஐ அடிப்படையாகக் கொண்டால்) 6.47 பைசாவாகி விட்டது. இந்தியாவின் இறக்குமதி 48 ஆயிரம் கோடியைத் தாண்டி விடும்நிலை இருக்கிறது அந்நியச் செலாவணிக் கையிருப்பைக் கணககிட்டால், 4 ஆயிரம் கோடியைக்கூட திருப்பிச் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. நாட்டின் மொத்த வருமானத்தில் ஏற்கனவே வாங்கிய கடனுக்கான வட்டி மட்டும் 35%கு மேல் செலவிடப்படுகின்றது. பிறக்கும ஒவ்வொரு இந்தியக் குழந்தையின் தலையிலும் 1500 ரூபாய் வெளிநாட்டுக் கடன் சுமை உள்ளது

பின்தங்கிய நாடுகளிலேயே அதிக கடன் பெற்ற நாடு இந்தியாதான். வளர்ந்து செல்லும் பொருளாதார நெருக்கடி இரண்டு ஆண்டுகளுக்குள் மூன்று நான்கு அரசாங்கங்களை மாற்றிவிட்ட அரசியல் நெருக்கடிக்கு இட்டுச் சென்றுள்ளது.

## போருக்குப் பிந்தைய உடன்படிக்கைகளின் உடைவும் தேசிய முதலாளித்துவத்தின் 'சுயசார்பு' கொள்கையின் திவாலும்

இரண்டாம் உலகப்போருக்குப்பின் அச்சுறுத்திக் கொண்டிருந்த புரட்சிகர எழுச்சிகளை

நசுக்குவதற்காக ஸ்டாலினிசத்தின் முழு ஒத்துழைப்புடன், ஏகாதிபத்தியம் ஏற்படுத்திய 'புதியஉலகஒழுங்கு' நிர்மாணிக்கப்பட்ட போருக்குப் பிந்தைய உடன்படிக்கைகளின் அடிப்படையில், ஏகாதிபத்தியம் தனது நலனைப் காக்கும் நம்பகமான 'தேசிய முதலாளிகளின் கையில் அமைதியான ஆட்சி மாற்றத்தைக் கொடுத்தது; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சார்பு ரீதியான வளத்தை வைத்து உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தை உயிர் பிழைக்கச் செய்தது. இந்த வகையிலான போலி சுதந்திரத்தை வைத்துக் கொண்டு ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திலின்று சுதந்திரம் பெற்று விட்டதாக, தேசிய முதலாளிகள் தம்பட்டம் அடித்துக் கொண்டதுடன், 'சுயசார்பு பொருளாதாரத்தை' ஸ்தாபிக்கப் போவதாகவும் வாய்ச்சவடால் அடித்தார்கள். அப்படி கடந்த காலத்தில் நேரு போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த பாசாங்கு நடவடிக்கையும் தூக்கி எறிந்து விட்டு, இன்று ஏகாதிபத்திய மூலதனத்துக்கு வெளிப்படையாக கதவு திறந்து விட்டுள்ளது இந்திய முதலாளித்துவ காங்கிரஸ் அரசாங்கம். கடந்த காலத்தில் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் இடையேயான பனிப்போர் பதட்ட நிலைகளைப் பயன்படுத்திக் கொண்டு, இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்கள் 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' எனும் பாசாங்குகளின் பேரில், ஏகாதிபத்தியத்திடமும், ஸ்டாலினிச ஆட்சியாளர்களிடமும் பேரம் செய்தன. எனவே 'இந்தியனாக இரு; இந்தியப் பொருள்களையே வாங்கு' என்றெல்லாம் திட்டங்களைக் கொண்டு வந்தனர்,

(16ம் பக்கம் பார்க்க)

**தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு போராடு !**

**NSA, TADA, மிசா - கருப்புச் சட்டங்களை வாபஸ் வாங்கப் போராடு!**

படிப்பகம்

www.padippakam.com



# நவ. 29 ஒரு நாள் பந்த்..

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், கம்ப்யூட்டர் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட புரட்சியும் மைக்ரோசிப்ஸ் கண்டுபிடிப்பில் ஏற்பட்ட புரட்சியும் முதலாளித்துவப் பொருளாதாரத்தை பூகோள மயபடுத்தி இருக்கிறது- உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தை முன் என்றுமில்லாத வகையில் பின்னிப்பிணைத்திருக்கிறது. எனவே உலக முதலாளித்துவ பொருளாதாரத்தின் அழுத்தமே எல்லா தேசிய அரசுகளின் பொருளாதாரத்தின் மீதும் அழுத்தங்களை ஏற்படுததுகிறது, எனவே சுதந்திரமான தேசியப் பொருளாதாரம் என்பது காலாவதியாகி விட்டது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய கால உடன் படிக்கைகளின் மேல் கட்டப்பட்ட 'உலக ஒழுங்கு முறை நொறுங்கிப் போய் விட்டது, இதன் அடிப்படையில் ஏகாதிபத்தியம் அமைத்த வர்த்தகம் பற்றிய பொது உடன்பாடு (GATT) பிரிட்டன்வுட்ஸ் ஒப்பந்தம் ஆகியன உடைந்து போயுள்ளன, ஏகாதிபத்தியம் மூன்று முகாம்களாக (அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி) பிளவுண்டு சர்வதேச சந்தையை கைப்பற்றுவதற்கும், மலிவான கூலி உழைப்பு, மூல வளங்களைச் சுரண்டுவதற்குமான போட்டியில் இறங்கியுள்ளன. தனது சார்பு ரீதியான வளத்தைப் பயன்படுத்தி, இரண்டாம் உலகப் போருக்குப்பின் உலக முதலாளித்துவ பொருளாதாரத்தைப் புணரமைத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்று நிதி ரீதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. ராணுவ ரீதியில் மட்டும் வலிமையைக் கொண்டிருக்கின்ற அமெரிக்க ஏகாதிபத்தியம், பின்தங்கிய ஆசிய, அமெரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தனது காலனி ஆதிக்கத்தை நிர்மாணிக்கும் வேலையைக் கட்டவிழ்த்துள்ளது. இதுவே வளைகுடாப் பிராந்தியத்தில் நடத்திய புஷ் கூறிய புதிய உலக ஒழுங்கிற்கான இரத்தக்களறிகளாகும்.

## சூப்பர் 301—ஏகாதிபத்திய நிர்ப்பந்தம்

அத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் பின்தங்கிய நாடுகளை தனது சூப்பர் 301 என்ற வர்த்தகச் சட்டத்தை முன்வைத்து மிரட்டுகிறது. கண்டு பிடிப்புகள் பதிவு விஷயத்தில் இந்தியா கடைபிடிக்கும் உற்பத்தி முறையிலான உரிமம் என்பதற்கு பதிலாக, கண்டு பிடிப்புக்கான உரிமம் என்பதை இந்தியா ஏற்கவேண்டும் என நிர்ப்பந்திக்கிறது. அண்மையில் இந்தியாவிற்கு வந்த அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி கார்லாஹில்ஸ் அந்நிய மூலதனத்திற்கான இந்திய பணித்துறைக் கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்று கோரியதோடு வர்த்தகம் சார்ந்த துறைகளில் அந்நிய மூலதனத்திற்கு ஏற்றுமதி வருவாய் ஒரு நிபந்தனையாக இருக்க வேண்டும் என்ற இந்திய அரசாங்கத்தின் சட்டஷரத்தையும் எதிர்த்திருக்கிறார். இந்த ஏகாதிபத்திய நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியும் வகையில். புதிய பொருளாதார கொள்கைகளின்மூலம் கதவு திறந்து விட்டுள்ளது நரசிம்மராவின் அரசாங்கம்.

## ஸ்டாலினிசத்தின் காட்டிக் கொடுப்பு

சர்வதேசரீதியாக ஸ்டாலினிசமும், சமூக ஜனநாயகமும் கொடுத்த எதிர்ப்புரட்சிகர ஒத்துழைப்பின் பேரில்தான், இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரும் ஏகாதிபத்தியத்தால் உலக முதலாளித்துவத்தை உயிர் பிழைக்க வைக்க முடிந்தது. அக்டோபர் புரட்சியின் மூலம் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் தேசியமயமாக்கப்பட்ட சொத்துறவுகளில், ஒட்டுண்ணியாக இருந்த ஸ்டாலினிச அதிகாரத்துவம் — தொழிலாள வர்க்கத்திற்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து 'பெரஸ்துரொய்கா' முதலாளித்துவ மறுசீரமைப்புக் கொள்கையை அமல்படுத்துகின்றது. ஸ்டாலினிச அதிகாரத்துவம கடந்த காலத்தில் 'போட்ட ஏகாதிபத்திய எதிர்ப்பு' என்ற நடிப்பை எல்லாம் உதறி விட்டு, பின்தங்கிய நாடுகளின் ஆட்சியாளர்களைக் கைவிட்டு விட்டது உச்சக் கட்டமாக வளைகுடாப் போரில ஈராக்கில் அப்பாவி மக்களைக் கொன்று குவிக்கும் ஏகாதிபத்திய காலனி ஆதிக்கப் போருக்கு நேரடி ஒத்துழைப்பை சோவியத், சீன ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் வழங்கின. இந்த நிலை பின்தங்கிய நாடுகளின் ஆட்சியாளர்களை ஏகாதிபத்தியங்களிடம் தஞ்சம் புகுந்து தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர அச்சுறுத்தலில் இருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஓடும் ஓட்டத்தை விரைவு படுத்தியிருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய கால உடன்படிக்கைகளின் அம்சமாக, 1947-ல் இந்திய உபகண்டத்துத் தொழிலாள வர்க்கத்தை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து, (ஏகாதிபத்தியம் ஸ்டாலினிசத்தின் ஒத்துழைப்புடன்) பிறப்பித்தந்த இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இலங்கை போன்ற மத, வகுப்புவாத அரசுகளாகும். மத அடிப்படையில் முஸ்லீம்கள் தனி தேசிய இனமென்று மார்க்சியத்தைக் கொச்சைப்படுத்தி, 1947 துண்டாடலுக்கு இந்திய ஸ்டாலினிஸ்டுகள் துணை போனார்கள் பாசிசத்துக்கு எதிரான 'ஜனநாயக ஏகாதிபத்தியங்கள்' எனும் ஸ்டாலினின் கொள்கையை ஏற்று, பிரிட்டிஷ் காலனித்துவத்துக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்ததுடன், சுதந்திரமாக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த டிராட்ஸ்கிஸ்டுகளை, பிரிட்டிஷ் போலீசாரிடம் ஒப்படைத்தும், உளவு வேலை செய்தும் ஆகஸ்டு கருங்காலிகள் என அவப்புகழ் பெற்றவர்கள் இந்திய ஸ்டாலினிஸ்டுகள்.

ஏகாதிபத்தியத்தின் நலனுக்காக 1947 உபகண்ட பிரிவினையை இன்றும் காத்து வரும் இந்திய ஸ்டாலினிஸ்டுகள், ஸ்டாலின் வகுத்த 'மக்கள் முன்னணி' வர்க்க கூட்டுக் கொள்கையைப் பின்பற்றுவதன் மூலம், இந்திய ஆளும் முதலாளித்துவ வர்க்கத்திற்கு ஆபத்து ஏற்படா வண்ணம் இன்றும் பாதுகாத்து கொண்டிருக்கிறார்கள். 1947-ல் இருந்து ஆண்ட காங்கிரஸ் கட்சி அம்பலப்பட்டு செல்வாக்கு இழந்த போது இகாங் ஜனதா ஜனதா தளம் எனவும்சில வேளைகளில் 'பாரதிய ஜனதா' மத வகுப்பு வாதத்துக்கு எதிராக இ.காங்கிரஸ் தேவலாம் என்றும் மாறிமாறி தங்களது ஆதரவைக் கொடுப்பதன்மூலம், மொத்தத்தில் இந்திய முதலாளித்துவத்தின் ஆட்சி அதிகாரத்துக்கு—சுதந்திரமான தொழிலாள வர்க்க எழுச்சியினால் ஆபத்து ஏற்படாதவாறு பாதுகாத்து வருகின்றார்கள். ஆளும் வர்க்கத்திற்கு எதிராகத் திரண்டெழும் தொழிலாளர்களையும், விவசாயிகளையும், ஒடுக்கப்படும் மக்களையும் திசை திருப்பி. பாராளுமன்றத் தேர்தல் முறையில் சோசலிச அரசை ஏற்படுத்தப் போவதாக தொடர்ந்து தொழிலாள வர்க்கத்தை சீர்திருத்த பிரமைக்குள் புதைத்து வருகின்றார்கள். முழுமையாக ஏகாதிபத்தியத்துக்கு கதவைத் திறந்துவிட்ட, தனியார் மயத்தை தாராளமாக்கிய நரசிம்மராவின் சிறுபான்மை அரசாங்கத்தின்மீது நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்த போது. (ஐ.நாவில் ஈராக்கிற்கெதிரான ஏகாதிபத்தியத்தின் போர்த் தீர்மானத்தை நிறைவேற்ற அதில் கலந்து கொள்ளாது ஆதரவளித்த சீன ஸ்டாலினிச அதிகாரத்துவத்தைப் போல்) சிபிஐ (எம்), சிபிஐ நம்பிக்கை வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது, அவரது அரசைத் தக்க வைத்தனர். இதுபற்றி சிபிஐ(எம்) மத்தியகுழு உறுப்பினரும். பேற்கு வங்க முதலமைச்சருமான ஜோதி பாசு குறிப்பிடுகையில், "இன்னொரு தேர்தலை இப்போது நடத்த முடியாது. மக்கள் பாராளுமன்றத் தேர்தலில் நம்பிக்கை இழந்து விடுவார்கள்'' என்றார்.

## முதலாளித்துவ அமைப்புக்கு தொழிலாள வர்க்கத்தைப் பலியிடும் ஒருநாள் பந்த்

காங்கிரஸ் அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராக நடத்துவதாக ஸ்டாலினிஸ்டுகள் கூறிக் கொள்ளும் ஒருநாள் பந்த், மார்க்சிய விரோத வர்க்கக்கூட்டு மக்கள் முன்னணிக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டதாகும். வர்க்க ஒடுக்கு முறைகளுக்கு எதிராக ஒவ்வொரு முறையும் தன்னியல்பாக போராட்டம் வெடித்து எழுந்து வருகையில். அதனை வர்க்கக்கூட்டு அடிப்படையில் '1 நாள் பந்தாக முன்னெடுத்து போராட்டத்தை மழுங்கடித்து விடுவது ஸ்டாலினிஸ்டுகளின் தந்திரோபாயமாகும், இந்திரா காந்தியின் காங்கிரஸ் முதலாளித்துவ அரசாங்கத்துக்கு எதிராக 1982 ஜனவரி 19ல் ஸ்டாலினிஸ்டுகள் முன்னின்று நடத்திய பந்த்தும், ராஜீவ்காந்தியின் ஆட்சிக் காலத்தில 1989 ஆகஸ்டு 30ல் நடாத்திய ஒருநாள் பாரத் பந்த்தும், சந்திரசேகர் ஆட்சிக் காலத்தில் முன்னெடுத்த ஒருநாள் பாரத் பந்த்தும— முதலாளித்துவ வர்க்கத்தை தொழிலாள வர்க்கத்தின வர்க்கப் போராட்ட அச்சுறுத்தலில் இருந்து பாதுகாப்பதற்கான தந்திரோபாயமாகவே கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.. ஆனால் இன்று ஏகாதிபத்தியத்தின் பழைய ஒழுங்குக்கு அத்திவாரமாக இருந்த, போருக்குப் பிந்தைய உடன்படிக்கைகள் நொறுங்கிய நிலையில், நவம்பர் 29-ல் ஸ்டாலினிஸ்டுகள் நடத்த இருக்கும் 'பாரத் பந்த்' புதிய உலகஒழுங்கை -ஏகாதிபத்தியம் திர்மானிப்பதற்கு வகையாக, இந்தியத் தொழிலாள வர்க்கத்தின் புரட்சியின்பால் செல்லவிடாமலும்திசை திருப்புவதற்காகவும், தொழிலாளவர்க்கத்தின் மீதான முதலாளி வர்க்கத்தின் சுரண்டலை அதிகாப்பதற்குமான மாயமான் ஆகப் பயனபடுத்துகின்றனர். சிபிஐ (எம்) மின் ஜோதிபாசு லண்டன் சுற்றுப் பயணத்தின்போது, வெளிநாட்டில் வாழும் இந்தியமுதலாளிகளையும் பிற முதலீட்டினர்களையும்-இந்தியாவில் முதலீடு செய்ய வருமாறும், இப்போது சாதகமான நிலை இருக்கிறது என்று அழைப்பு விட்டார், அப்படி அவர் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான 'சாதகமான நிலையை' ஏற்படுத்திய புதிய பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து - ஒருநாள் அகில இந்திய பந்த் நடத்துவதாகக் கூறிக் கொள்வது அப்பட்டமான இரட்டை வேடமாகும். இதே நரசிம்மராவுக்கு எதிராக, வேட்பாளரை நிறுத்தாமல் அவரையும் அவர் ஆட்சியையும் பாதுகாத்து வரும் சிபிஐ (எம்), சிபிஐ ஸ்டாலினிஸ்டுகள் மற்றும் இடதுசாரி கட்சிகளின் 'பந்த்' வாய்ச்சவடால்கள் படுபிற்போக்குத் தனமான மோசடியாகும்.

கடந்த காலத்தில் இருந்து இன்றுவரை ஒவ்வொரு போராட்டத்தையும். ஏனைய பகுதித் தொழிலாள வர்க்கத்துடன் ஒன்றிணைக்காமல தனிமைப்படுத்தியே வந்து. இறுதியில் தொழிலாள வர்க்கத்தை சோர்வடையச் செய்து, முதலாளிகளின் ஒடுக்குமுறைக்குப் பணிந்து போகச் செய்தது. ஸ்டாலினிஸ்டுகளின் திட்டமிட்ட எதிர்புரட்சிகர வேலையாகும். 1982ல் தத்தாசமந்த் தலைமையில் நடைபெற்ற 2½லட்சம் துணி ஆலைத் தொழிலாளர் போராட்டத்துக்கு ஆதரவாக ஏனைய பகுதித் தொழிலாளர்களை களத்தில் இறக்க மறுத்து காட்டிக் கொடுத்தனர். 1974 ரயில்வெ தொழிலாளர் போராட்டத்தையும், 1989ல் 12 துறைமுகங்களில் நடைபெற்ற தொழிலாளர் போராட்டத்தையும், 1989ல் 4½ லட்சம் தொலைபேசித் தொழிலாளர்கள் போராட்டத்தையும், இவ்வாறேதான் காட்டிக் கொடுத்தனர். 800 ஆலைகளுக்குமேல் கதவடைப்புச் செய்யப்பட்ட நிலையில், 2 லட்சத்திற்குமேல் ஆலைகள் நலிவடைந்த நிலையில். பன்னாட்டு ஏகபோக கம்பெனிகளுக்கு ஆதரவான புதிய பொருளாதாரக் கொள்கையை முறியடிக்க-முதலாளித்துவத்திடம் இருந்து உற்பத்திச் சாதனங்களை பறித்தெடுப்பதற்கான தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமான வர்க்கப் போராட்டத்தை முன்னெடுக்க மறுக்கின்றதுடன், தடையாகவும், ஏகாதிபத்தியத்தினுடைய முதலாளித்துவத்தினதும திறம்மிக்க ஏஜண்டாக செயல்படுகின்றனர். சர்வதேச அளவில் எவ்வாறு ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து 'பெரஸ்துரொய்கா' முதலாளித்துவ மீட்சிக் கொள்கையைத் திணித்து அக்டோபர் புரட்சியின் வெற்றிகளை அழிக்கின்றதோ அதேபோல் கடந்த காலத்தில் தொழிலாள வர்க்கம் எண்ணற்ற தியாகங்கள் செய்து போராடி எடுத்த வெற்றிகள் ஒவ்வொன்றையும் முதலாளி வர்க்கத்திடம் தாரை வார்த்து வருகின்றன ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள்.

## முதலாளி வர்க்கத்தால் தீர்க்க முடியாத, ஜனநாயகக் கடமைகளும் ஸ்டாலினிசமும்

நிலப்பிரபுத்துவத்துக்கெதிரான முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்ற திராணியற்ற முதலாளி வர்க்கம் நிலப்பிரபுத்துவத்துடன் சமரசம் செய்து கொண்டு, நிலத்தில ஏகபோகத்தையும், கொத்தடிமையாக விவசாயக் கூலித் தொழிலாளர்களை ஒடுக்கி வருகின்றது. கிராமப்புறங்களில் கொழுந்து விட்டு எரியும் சாதிய ஒடுக்குமுறையின் பின்னால் நிலத்திற்கான வேட்கை கொண்ட வர்க்கப் போராட்டமே மறைந்து கிடக்கின்றது, பெரும்பாலான உழைக்கும் விவசாய கூலித்தொழிலாளர்கள் சாதி ரீதியாய் பிளவு படுத்தப்பட்டு, உயர்சாதி நிலப்பிரபுக்களால் உயிரோடு கொளுத்தப் படுகின்றனர். கீழ் வெண்மணி முதல் சுன்டூரு வரையிலான நிகழ்ச்சிகள் வெளி உலகுக்குத் தெரியா வண்ணமும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன கடந்த காலங்களின் ஸ்டாலினிசக் கட்சிகளின் காட்டிக்கொடுப்புக்களினால், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சோசலிச வேலைத்திட்டம நிராகரிக்கப்பட்டதால, தேசிய இன ஒடுக்கலுக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கும ஆளாகும் மக்கள் குட்டி முதலாளித்துவ தலைமைகளின்பின் அணிதிரளும்படி கைவிடப்பட்டனர். அந்தத் தலைமைகள் இப்போராட்டங்களை வர்க்கப் போராட்டத்திற்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு, ஏகாதிபத்தியத்தின், முதலாளித்துவத்தின் கருவிகளாகத்தான் இன்றளவும் செயல்பட்டு வருகின்றனர்.

ஏகாதிபத்தியம் ஸ்டாலினிசத்தின் ஒத்துழைப்புடன். வகுப்புவாத அரசுகளால் பிளவுபடுத்தப்பட்டு தேசிய முதலாளித்துவத்திடம் கைமாற்றப்பட்ட — இந்தியா, பாகிஸ்தான் சிறிலங்கா, பர்மா அரசுகள் இன்றும் தேசிய இனப்பிரச்சினைகளைத்தீர்க்காமல் அடக்கி ஒடுக்கி வருகின்றன. மொத்தத்தில் இந்திய உபகண்டம் தேசிய இனங்களின் சிறைக்கூடமாகத்தான் இருக்கின்றது தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுபவர்கள் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்பட்டு காஷமீர், தமிழீழம், அசாமில் நாளும் ரத்த வெள்ளத்தில மூழ்கடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சிறுபான்மை சீக்கிய பதப் பிரிவினர் பஞ்சாபில் நாளும் சுட்டுக் கொல்லப் பட்டுகொண்டுருக்கின்றனர் இந்த ஒடுககுமுறைக்கு சி.பி.ஐ, (எம்) ஸ்டாலினிஸ்டுகள் முழு ஆதரவு தருவதுடன், 'இந்தியஒருமைப்பாடு எனும் பேரில தேசிய வெறியின் கீழ் தொழிலாள வர்க்கத்தைப் பிணைத்துப் போடுகின்றார்கள் இந்து வெறி வகுப்புவாத பி.ஜே.பி. உட்பட ஏனைய முதலாளித்துவ இ. காங். ஜனதாதளம் ஆகியோருடன் 'ஒருமைப்பாட்டுக் கவுன்சிலில் அங்கம் வகிக்கும் ஸ்டாலினிஸ்டுகள், தேசிய இனங்களின் மீதான ஆளும் வர்க்கத்தின் ஒடுககுமுறைக்கு ஆதரவளிப்பதன் மூலம், தொழிலாள வர்க்கத்தின் மீதான இந்திய முதலாளித்துவத்தின் பிடியை

(18ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com




**Neue Arbeiterpresse Treffs**

**Berlin-Prenzlauer Berg**
Freitag, 24. Januar,, 18 Uhr
Seniorenclub Knaackstr. 35
(Ecke Kollwitzstr., U-Bahnhof Senefelderplatz)

**Berlin-Marzahn**
Freitag, 31. Januar 18 Uhr
Klub 2000 am Springpfuhl,
Allee der Kosmonauten (S-Bahnhof Springpfuhl)

**Duisburg**
Dienstag, 4. Februar, 19 Uhr
Ratskeller Duisburg Hamborn, Duisburger Straße 213
(Haltestelle Linie 909, Rathaus Hamborn)
(Weitere Veranstaltungen der Neuen Arbeiterpresse alle 14 Tage am gleichen Ort)

**Frankfurt/Main**
Donnerstag, 30. Januar, 19 Uhr
Bürgertreff Bornheim, Raum 6
Saalburgstr. 17 (U4 bis Bornheim Mitte)
(Weitere Veranstaltungen der Neuen Arbeiterpresse alle 14 Tage am gleichen Ort)

**Chemnitz**
Mittwoch, 5. Februar, 18 Uhr
Klub der Volkssolidarität
Barbarossastr. 101 (Ecke Limbacherstr.)
Kassberg
(Buslinien 23 und 31 ab Zentralhaltestelle)

**Stuttgart**
Freitag, 7. und 14. Februar, 19 Uhr
Jugendhaus Mitte, Hohe Straße

**Dortmund**
Freitag, 24. Januar, 7. Februar, 6. März
jeweils 18:30 Uhr
Diietrich-Keuning-Haus (direkt hinter dem Hauptbahnhof)

**Abonniert die** **neue ARBEITER PRESSE**

Wochenzeitung
des Bunds Sozialistischer Arbeiter

○ Ich möchte die Neue Arbeiterpresse ab Nr. ........ kennenlernen.
Für dieses Probeabonnement (10 Ausgaben) zahle ich DM 10,-
○ Ich möchte die Neue Arbeiterpresse ab Nr. ........ abonnieren
Für ein Jahr (52 Ausgaben) zahle ich
○ DM 65,- (BRD) ○ DM 85,- (Europa)
Für ein halbes Jahr (26 Ausgaben) zahle ich
○ DM 35,- (BRD) ○ DM 45,- (Europa)

Ich bin damit einverstanden, daß die Deutsche Bundespost POSTDIENST der Neuen Arbeiterpresse Adressenänderungen mitteilen darf.

Name, Vorname

Straße, Hausnummer

Postleitzahl, Ort

Unterschrift
Ich weiß, daß ich die Abonnement-Bestellung innerhalb von 7 Tagen gegenüber der Neuen Arbeiterpresse widerrufen kann, und bestätige dies durch meine 2. Unterschrift. Zur Wahrung der Frist genügt die rechtzeitige Absendung des Widerrufs.

Datum, Unterschrift
○ Ich habe DM .............. auf das Postgirokonto 21 185 – 431 in Essen überwiesen, Bankleitzahl 360 100 43
○ Ich habe der Bestellung einen Scheck über DM .......... beigelegt

Bestellungen an Neue Arbeiterpresse,
Postfach 100 105, W-4300 Essen 1


# இடம் பெயர்ந்தோர் ஊர்வலத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பிரச்சாரத்தை தடுக்க விடுதலைப் புலிகள் முயற்சி

1991 ஜூலை 17ல் அரசாங்கம் அமலுக்குக் கொண்டு வந்துள்ள அரசியல் அகதிகளை திருப்பி அனுப்பும் சட்டத்துக்கு எதிராக சர்வதேச மன்னிப்பு புஜை (Amnesty International) செஞ்சிலுவைச் சங்கம், கரித்தாஸ் (சமூக சேவை நிறுவனம்) மற்றும் எல்லாவித தமிழ் குட்டி முதலாளித்துவ பத்திரிகையாளர்களும் சேர்ந்து ஓர் ஊர்வலத்தை நடத்தினர் இதில் அதிகமான தமிழ் தொழிலாளர்களும் இளைஞர்களும் 4000க்கும் கலந்து கொண்டனர்.

கோல் அரசாங்கத்தின் நாடு கடத்தல் திட்டத்திற்கு எதிராகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், பண்ட் ஆர்பைடர் சோசலிஸ்டும் (BSA) நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ஜெர்மன்கிளை) 'தொழிலாளர்பாதை, துண்டுப்பிரசுரங்களுடன் ஊர்வலத்தில் தலையிட்டன. ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன்னரே துண்டுப் பிரசுர விநியோகமும் தொழிலாளர் பாதை' விற்பனையும் ஆரம்பமாகியது ஊர்வலத்தில் கலந்து கொண்ட தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இந்த அரசியல் தலையீட்டில் பெரிதும் அக்கறையும ஆர்வமும் காட்டினர்.


இந்த ஊர்வலத்தின் அமைப்பாளர்களும் அவர்களுடன் நெருக்கறாக செயல்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்களும், 'ஜெர்மன் முதலாளித்துவத்திடம் மண்டியிடுவதைச் சுட்டிக் காட்டும் சுலோக அட்டைகளுக்கும், பிரசுரங்களுக்கும் மட்டுமே அனுமதி வழங்கியதோடு, இத்தகைய 'நடவடிக்கைகள்' மூலம் மட்டுமே அரசியல் தஞ்சம் கோருவோரின் ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்பட முடியும் எனக் காட்டவும் முன் வந்தனா.

## கால்கட்டு

பு.க.க. அங்கத்தினர்களும், ஜெர்மன்டிராட்ஸ்கிஸ்டுகளும் இப்பிற்போக்கு முன்நோக்கின் தாக்கங்களை பத்திரிகை விற்பனை, துண்டுப் பிரசுர விநியோகத்தன்போது தொழிலாளர்களுக்கு அம்பலப் படுத்தனர். எமது அரசியல் தலையீடு, தமது பிற்போக்கு நோக்கங்களை அரசியல் அகதிகளின் தலையில் கட்டி அடிக்கும் திட்டத்துக்குப் பெரும் தடையாக விளங்குவதைக் கண்ட ஊர்வல அமைப்பாளர்களும் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களும் எமக்கு கால்கட்டுப் போடுவதில் இறங்கினர்

## பறிமுதல்

அவர்கள் முதல் நடவடிக்கையாக தொழிலாளர்கள் எம்மிடம் பத்திரிகை பிரசுரம் வாங்குவதை தடைசெய்வதில் ஈடுபட்டனர். இது தொழிலாளர்களை எம்பக்கம் மேலும் மேலும் ஈர்ப்பதற்கே



புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மேதினப் பேரணி

வழிவகுத்தது. எனவே தொழிலாளர்கள் எம்மிடம் வாங்கிய பத்திரிகை, பிரசுரங்களை பறிமுதல் செய்யும் பணியில் ஈடுபட்டனர். இதற்கு தொழிலாளர்களிடமிருந்து பெரும் எதிர்ப்பு கிளம்பியதால் இதனை அவர்கள் திருத்திக் கொள்ள நேரிட்டது. இது அமைதி ஊர்வலமாதலால் பு.க.க உறுப்பினர்களின் பத்திரிகை, பிரசுர விநியோகம் குழப்பங்களை உண்டாக்கும் எனவும் ஊர்வலத்தை 'தவறுன கண்ணோட்டத்தில்' அணுகச் செய்யும் எனவும் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் கூறினர். 'அமைதி' தவறுன கண்ணோட்டம்' பற்றிய இவர்களின் பிதற்றல்களை நிராகரித்த பு.க.க உறுப்பினர்கள் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களில் தலையிடுவதற்கு ஒரு புரட்சிக் கட்சிக்கு உள்ள ஜனநாயக உண்மையைத் தெளிவுபடுத்தினர், அவர்கள் 'மேன்மைக்குரிய' ஜெர்மன் ஏகாதிபத்திய உள்நாட்டமைச்சரின் 'மனிதாபிமானத்தில், அளவு கடந்த ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்ததால். தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை ஜனநாயக உரிமைகளில் அக்கறை கொள்ள தயாராக இல்லை.

## உத்தரவு

ஊர்வலம் உள்நாட்டு அமைச்சரின் அலுவலகத்தை நெருங்கிக் கொண்டிருந்த போது, பு.க.க. உறுப்பினர்கள் மீது கடும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. பத்திரிகை பிரசுர விநியோகத்தினை நிறுத்துமபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தொழிலாளர்கள் எம்மை அடையமுடியாதபடியும் அப்படி நெருங்கி வந்தாலும் அவர்கள் எம்மிடமிருந்து எதையும் பெறமுடியாதபடியும் சிலர் எம்மைச் சுற்றி வளைத்துக் கொண்டனர். விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களின் இந்த 'ஜெர்மன் முற்றுகைகள்' பற்றி தொழிலாளர்கள் எம்மிடம் கேள்வி எழுப்பினர். அதோடு அவர்கள் நாம் தொடர்ந்து இயங்க ஆதரவு தர முன்வந்தனர். தொழிலாளர்களின் இந்த ஆதரவைக் கண்டு கிலியடைந்த விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் தமது ஆத்திரமூட்டலை புதியதோர் கட்டத்திற்கு உயர்த்தினர் பு.க.க. தோழர் ஒருவரை சட்டையைப்பிடித்து ஊர்வலத்திற்கு புறத்தே நின்ற போலீசுக்கு அருகே இழுத்துச்சென்றனர். "தொடர்ந்து பத்திரிகைவிற்றால் பெரும்பிரச்சினைவரும்" என மிரட்டலும்விடுத்தனர்.

விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களின் நோக்கம், பத்திரிகை விற்பனையைத் தடுப்பதுடன் நின்று விடுவதல்ல. பு.க.க தோழர்களை ஏகாதிபத்திய அரச எந்திரத்திடம் ஒப்படைப்பதே அவர்கள்ஏற்படுத்த இருந்த 'பெரும்பிரச்சினை' கடந்தமே மாத இறுதியில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்பாடு செய்த கலை நிகழ்ச்சியின் போதும பத்திரிகை விற்பனையில் ஈடுபட்ட தோழர்கள் இந்த 'பெரும் பிரச்சினைக்கு' முகம் கொடுத்தனர் எம்மை அங்கிருந்து அப்புறப்படுத்த போலீசாரை அழைக்கப் போவதாக அவர்கள் மிரட்டினர்.

ஊர்வலம் உள்நாட்டு அமைச்சர் அலுவலகத்தின் எதிரில்வந்ததும அமைச்சரின் செயலாளர் ஓர் சிற்றுரை வழங்கினார். 'நீங்கள் நடந்து கொண்டவிதம் என்மனதைக் கவர்ந்துள்ளது. நாங்கள் இப்பிரச்சினை தொடர்பாகப் பாராளுமன்றத்தில் பேசஉள்ளோம, அது உங்களுக்கு நல்ல முடிவாக அமையும்' என அவர்பேச்சைத்தொடங்கினார்.

இந்தப் பிரச்சாரம் ஜெர்மன் முதலாளித்துவ அமைப்பினுள் தமிழ் தொழிலாளர்களுக்கு மிகவும் வாய்ப்பான நிலைமை உருவாகும் என்ற குட்டி முதலாளித்துவ நப்பாசைகளையும் அவர்கள் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைகளில் இருந்து விடுபடப்போராடத் தயார் இல்லை என்பதையும் அம்பலப்படுத்தியது.

தொழிலாளவர்க்கத்தினுள் புரட்சிக்கட்சியின் முன்நோக்கும், வேலைத்திட்டமும் சென்றடைவதை தடைசெய்யும் இந்த குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் ஆத்திரமூட்டல்களை முழுத் தொழிலாள வர்க்கமும, ஒடுக்கப்படும் மக்களும் கண்டிக்க வேண்டும்.

இந்த ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான பு;க.க.தமிழ் துண்டுப் பிரசிரங்கள் விநியோகிக்கப்பட்டதோடு 20 'ஆர்பைடர் பிரஸ்' பத்திரிகை(BSAன் பத்திரிகை)களும் 240 தொழிலாளர் பாதை பத்திரிகைகளும் விற்பனையாயின.


## தொழிலாளர் பாதை சந்தா விபரம்

| | தபால் |
| --- | --- |
| ஆறுமாத சந்தா (6 இதழ்கள்) | ரூ. 10/- |
| ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) | ரூ. 20/- |

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

தபாற்பெட்டி எண் 938,
பெரம்பூர் பாரக்ஸ் சென்னை-600 012


படிப்பகம்

# நவ. 29 ஒரு நாள் பந்த்...

(16ம் பக்கத் தொடர்ச்சி)

இறுகச் செய்யும் வேலையை சுலபமாக்குகின்றார்கள். தொழிலாள வர்க்கத்தின் நேசசக்திகளான விவசாயக் கூலித் தொழிலாளர்களையும் சோஷலிசத்திற்கான வேலைத் திட்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில் கொண்டு வருவதன் மூலமே இவர்களுக்கு விடிவு கிடைக்கும்.

நதிநீர்ப் பங்கீடுகள் தொடர்பாகவும், மாநிலங்களுக்கிடையில் பிரச்சினைகள் இன்றும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாகக் காவிரி நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக ஆளும் வர்க்கம் இனரீதியாக பிளவுகளை ஏற்படுத்துவதற்கு செயலில் இறங்கியதை அண்மையில் காண முடிந்தது. இதற்கு சி.பி.ஐ; (எம்) சி.பி.ஐ. ஸ்டாலினிஸ்டுகள் முழுமையான ஆதரவைத் தந்தனர். கர்நாடக இ.காங்' அரசு காவிரி நீரைவிட மறுத்து பந்த் நடத்தியதில் அங்குள்ள ஸ்டாலினிஸ்டுகள் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டில் உள்ள அ.தி.மு.க முதலாளித்துவ அரசு நீர்விடக் கோரி பந்த் நடத்தியபோது அதற்கும் ஆதரவளித்தனர். இங்குள்ள ஸ்டாலினிஸ்டுகள் இதுஸ்டாலினிஸ்டுகளின் அப்பட்டமான சந்தர்ப்பவாதத்தையும், பிராந்திய வெறியையுமே காட்டுகிறது. எப்படி சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் தங்களது சலுகையின் அளவைக்கூட்ட தனித்தனியான பேரங்களுக்காக, தேசிய வெறிக்கு அடிபணிந்து பல குடியரசுகளை உடைக்கின்றார்களோ, அதேபோல் இந்திய ஸ்டாலினிஸ்டுகளும் பிராந்தியத் துண்டாடல்களில் ஆதாயம் காண்பவர்களாக பாறி வருகின்றனர்.

## வேலையின்மையும் மண்டல் கமிஷனும்

லாப நோக்கத்திற்கான முதலாளித்துவ உற்பத்தியின் கீழ் வேலையின்மை இருந்தே தீரும். முதலாளிவர்க்கம் உபரி உழைப்பை சுரண்டுவதற்கும், மலிவான கூலியுழைப்பைப் பெறவும் முதலாளித்துவத்திற்கு வேலையின்மை இன்றியமையாததாக இருக்கிறது. சந்தைக்கான அராஜக உற்பத்தியில் போட்டா போட்டியில் ஏற்படும் பிரழ்வுகளாலும், ஆலைகள் நவீனமயமாக்கல்களாலும் இருக்கின்ற வேலைகளும் இல்லாமல் ஆக்கப்படுகின்றன, தற்போதைய வேலை இல்லாதோர் எண்ணிக்கை பன்னிரண்டு கோடி ஆகும். இல்லாத வேலைகளுக்கு இடஒதுக்கீடாக — சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீடு எனும் பேரில் ஜனதாதள ஆட்சி அமல்படுத்திய மண்டல் கமிஷனின் பரிந்துரை இளைஞர்களிடையே பாகுபாட்டினையும் பகை உணர்வுகளையும் ஊட்டி வருகிறது. சாதிரீதியான இடஒதுக்கீடு எனும் பிற்போக்குக் கொள்கையை ஸ்டாலினிஸ்டுகளும் மாவோயிஸ்டுகளும் ஆதரிப்பதன் மூலம், முதலாளித்துவத்துவத்துக்குள் வேலையின்மை பிரச்சினையை சாந்தப்படுத்தும் முதலாளித்துவ வர்க்கத்தின் திட்டங்களுக்கு இளைஞர்கள் மத்தியில் பிரமைகளை விதைத்து வருகின்றனர். வேலையின்மைக்கு எதிராகக் கிளர்ந்து எழும் இளைஞர்களை எதிரும் புதிருமாய் நிறுத்தும் இத்திட்டத்தை ஆதரிப்பதன் மூலம், வேலையின்மைக்கு எதிராகப் போராடும் இளைஞர் இயக்கத்தைப் பலவீனப்படுத்துகின்றார்கள்.

## இந்துமத வெறி வகுப்பு வாத பிஜேபியும் பாசிசம் வளர்வதற்கான பேரபாயமும்

பாசிசம் என்பது முதலாளித்துவத்தின் கோரமான வடிவமாகும். முதலாளித்துவத்தின் கோரச் சுரண்டலுக்காக தொழிலாளர் வர்க்க அமைப்புக்கள் எல்லாவற்றையும் நசுக்கி, தடை செய்து ஆளும் வர்க்கம் தனது சுரண்டலாட்சியை ரத்த வெள்ளத்தில் நடத்திச் செல்வதாகும்.

1947ல் இருந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தேசிய முதலாளித்துவம் ஏகாதிபத்தியத்தின் நலனைப் பேணும் அரசாங்கங்களை ஆளும் வர்க்கத்தின் (காங், ஜனதா, இ.காங், ஜனதாதளம்) பல்வேறு தருப்புச் சீட்டுக்களை வைத்து ஸ்டாலினிஸ்டுகளின் ஒத்துழைப்புடன் நடத்திக் கொண்டு வந்தது. ஆனால் இன்றுள்ள காலப்பகுதியில், திரண்டு எழுந்து வரும் வர்க்கப் புரட்சி அலைகளை நசுக்குவதற்கு பாசிச வடிவத்தை எடுப்பதற்தாக பி.ஜே.பி. போன்ற இந்து மதவாத, முதலாளித்துவ வர்க்கல கட்சியை முன்னுக்குக் கொண்டு வருகின்றது. 1933-ல் ஜெர்மன் தொழிலாள வர்க்கப் புரட்சியை நசுக்குவதற்காக ஹிட்லரின் தலைமையில் யூதர்களைக் கொன்று குவித்து ஜெர்மனியர், ஆரியர் என்ற வெறியுடன் கொண்டு வரப்பட்டதைப் போன்றே, பி ஜெ பியும் இந்துமத வெறியைக் கக்கிக் கொண்டு சிறுபாண்மை முஸ்லீம் மக்களுக்கு எதிரான படுகொலைக்குத் தூபமிட்டு வளர்ந்து வருகின்றது.

ஏழை விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களுக்கும், சிறுபான்மை இனக் குழுக்களுக்கும், மதப்பிரிவினருக்கும், அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் புரட்சிகர ஜனநாயக வேலைத் திட்டங்களுக்கு தொழிலாள வர்க்கத்தை, தலைமை கொடுக்க விடாது ஸ்டாலினிஸ்டுகள் தடுத்த காலம்-இவை குட்டி முதலாளித்துவ, பிற்போக்கு, மத வெறி முதலாளித்துவ கட்சிகளின் பால் அணிதிரளும்படி பொறிக் கிடங்குக்குள் தள்ளப்பட்டனர்.

பாசிசம் இன்னொரு வகையிலும் காலூன்ற முயற்சிக்கும். கிராமப்புற விவசாயிகளையும், நகர்ப்புற குட்டி முதலாளித்துவத்தையும் தளமாகக் கொண்டுள்ள மாவோயிச குழுக்கள்-வளர்ச்சியடைவதையும் தனக்கு சாதகமாக்கிக் கொள்ளும், தொழிலாள வர்க்கத்தின் தலைமையை நிராகரித்து, நான்கு வர்க்கக்கூட்டு மக்கள் முன்னணி வேலைத்திட்டத்தில் செயல்படும் குட்டி முதலாளித்துவ மாவோயிச குழுக்களை-தங்களின் திவாலான அரசியல் வேலைத் திட்டத்தின் காரணமாகவும்-வர்க்க ஊசலாட்டத்தின் காரணமாகவும் ஆளும்வர்க்கம் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும். சிறலங்காவில் இப்படி வளர்ந்து வந்த ஜே.வி.பி, இயக்கம் இறுதியில், தொழிலாள வர்க்கத்தை இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தி. வேலை நிறுத்த உரிமையையும் வேலைக்குப் போகும் உரிமையையும் துப்பாக்கி முனையில் நசுக்கினர் தொழிலாள வர்க்க இயக்கங்களின் தலைவர்களையும், தொழிலாளர்களையும் சுட்டுப் பொசுக்கினர். இவ்வாறு முதலாளித்துவத்தின் நலனைக் காக்க தொழிலாள வர்க்கத்தைப் பலியிடும் பாசிச சக்தியாக வளர்ந்தனர் அதன் சொந்த முடிவு அதன் அரசியல் திவால் தன்மையினால் ஏற்பட்ட போதிலும் அதன் தளமாக இருந்த இளைஞர்கள் லட்சக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்டனர். மொத்தத்தில் தொழிலாள வர்க்கத்தின் நேச சக்தியான கிராமப்புற ஏழை விவசாயிகளை பேரளவில் கொன்று குவிக்க வழி ஏற்படுத்திக் கொடுத்தனர், ஒருபுறம் அரசியல் ரீதியாக ஆயுதபாணியாக்குவதற்குப் பதிலாக வெறும் ஆயுதத்தை முன் வைத்துப் போராட்டம் நடத்தும் மாவோயிசக் குழுக்களையும், மறுபுறம் இந்துமதவாத வெறியைத் தூண்டி வளர்ந்து வரும் பி.ஜே.பி. போன்றவற்றின் மூலமும் பாசிசத்தை வளர்த்து விட இந்திய ஆளும் வர்க்கம் முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. பி.ஜே.பி.யும் பஜ்ரங்தளம், சிவசேனை, விஸ்வ இந்துபரிஷத், ஆர்.எஸ்.எஸ். ஆகிய அமைப்புக்களும் சேர்ந்து 16 ஆம் நூற்றுண்டு அரசன் பாபரின் மசூதியை இடித்து கற்பனைக் காவியத்தின் நாயகனை இராமனின் கோவிலைக் கட்டும் வெறியை பிரச்சாரப் படுத்திக் கொண்டு வருகின்றன. இதன் மூலம் சிறுபான்மை முஸ்லீம்களுக்கு எதிரான வகுப்பு வாதத்தைத் தூண்டிவிட்டு, இந்திய உபகண்டத்துத் தொழிலாள வர்க்கத்தை மத ரீதியில் துண்டாடியது போதாதென்று, தொடர்ந்து அதனைப் பேணும் வேலையைச் செய்து வருகின்றன. உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசு தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி. கோயில் கட்ட நிலத்தைக் கையகப்படுத்தியதும, பாபர் மசூதியின் மேல் ஆக்கிரமிப்பு நடத்த அனுமதித்ததும் மத, வகுப்புவாத கலவரங்களைத் தூண்டிவிடும் நோக்குடையதாகும். அலிகார், ஹைதராபாத் போன்ற மதக்கலவரங்களை ஆளும் வர்க்கத்தால் தொடர்ந்து கட்டவிழ்த்து விடப்படுகின்றன.

மதவகுப்பு வாதத்திற்கு எதிரான போராட்டம் என்பது நிலபிரபுத்துவ முதலாளித்துவ சுரண்டல்களில் இருந்து விடுபடுவதற்கான சோசலிசத்திற்கானபோராட்டத்துடன் தொடர்புடையதாகும்; ஆனால் சோசலிசத்திற்கான போராட்டத்தை நிராகரிக்கும் ஸ்டாலினிஸ்டுகள் வகுப்புவாத சக்திகளுக்கு எதிராக மத நல்லிணக்க ஊர்வலத்துடன் நிறுத்திக் கொண்டு, வகுப்பு வாதத்தைத் தூண்டிவரும்—முதலாளித்துவ கட்சிகளுடனேயே கூட்டு வைத்துக் கொள்கின்றனர். பஞ்சாப்பில் தேர்தலுக்கான அறிவிப்பு வந்ததும், பி.ஜே.பி யுடன் கூட தேர்தலில் தொகுதிகளில் போட்டியிடாமல், ஸ்டாலினிஸ்டுகள் ஒத்துழைப்புத்தர முன் வந்ததும், மத. வகுப்புவாத சக்திகளுக்கு எதிரான போராட்டம் வெறும் வாய்ச்சவடால்தான் என்பதை நிரூபிக்கின்றது.

## இந்திய-பாகிஸ்தான் யுத்தங்கள்

1947 ல் இந்திய உபகண்டத்துத் தொழிலாளர்களை ரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து, ஏகாதிபத்தியத்திடமிருந்து கைமாற்றிக் கொண்ட தேசிய முதலாளித்துவ, ஆட்சியாளர்கள், இந்திய பாகிஸ்தானில் தொழிலாள வர்க்கத்தை தொடர்ந்து பிளவுபடுத்தவும் உள்நாட்டில் சுரண்டலை உக்கிரப்படுத்தவும் மூன்று யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டனர். இரு நாடுகளிலும் உள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்கள் இன்றும் தேசிய வெறியை ஊட்டி பிரச்சாரம் செய்து வருகின்றனர். உள்நாட்டில் சொந்த மக்களைக் கொன்று குவிக்கும் ஆட்சியாளர்கள் பாதுகாப்பு என்ற பேரில் ராணுவத்திற்கு பல கோடி செலவினங்களைக் கூட்டியுள்ளனர், நடந்து முடிந்த ஒவ்வொரு யுத்தத்தின் செலவும் உள்நாட்டு மக்களின் தலையில் சுமத்தப்பட்டன. தொழிலாள வர்க்கத்தின் ரத்தத்தில் கறந்தெடுக்கப்பட்டன. உள்நாட்டில் வர்க்க ஒடுக்குமுறைக்கு எதிராக தொழிலாளர்களும்; ஒடுக்கப்படும் மக்களும் கிரண்டெழும் பொழுதெல்லாம் ஆளும் வர்க்கம் யுத்த வெறியையும் தேசிய வெறியையும் கட்டவிழ்த்து விட்டு, தொழிலாள வர்க்கத்தின் திசை திருப்பும், இந்தப் பிரச்சாரத்திற்கு ஸ்டாலினிஸ்டுகளும ஒத்துழைப்பதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை தேசியவாத நுகத்தடியில் மாட்டி வைக்கும் வேலையைச் செவ்வனே செய்து வருகின்றனர்.

இந்திய முதலாளித்துவ ராணுவம், அசாம் காஷ்மீர் பஞ்சாப் தமிழீழம் மணிப்பூர் பகுதிகளில் கட்டவிழ்த்து விட்ட அரசபயங்கர வாதத்திற்கு ஸ்டாலினிஸ்டுகள் முழு ஒத்துழைப்புத் தருகின்றனர்' புங்களாதேஷை விடுவிக்க எனும் பேரில் அங்குள்ள முக்திவாஹினி வீரர்களைக் கொன்றொழித்த இந்திய முதலாளித்துவ ராணுவம்1989ல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க அனுப்பப் பட்டது. 1961ல் ரயில்வே தொழிலாளர் வேலைநிறுத்தம், 1989ல் மக்கள் வேலைநிறுத்தம் 1990-ல் துறைமுகத் தொழிலாளர் போக்கிற்கு எதிராகவும் ஈடுபடுத்தப்பட்டது' இந்த முதலாளித்துவ ராணுவத்தை நமது ராணுவம் என்றும் தமிழீழத்தில் நடத்திய படுகொலைக்கு நன்றி அறிவிப்பு தீர்மானம் ஸ்டாலினிஸ்டுகளால் சி.ஐ.டி.யு. 5வது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. சுரண்டலுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்துவரும் தொழிலாள வர்க்கத்தின் போராட்டங்களை ஒடுக்க ஒடுக்குமுறை எந்திரமான முதலாளித்துவ இராணுவம், போலீஸ். BSFC ஆகியன நவீனப்படுத்தப்பட்டு வருகின்றன.

## கருப்புச் சட்டங்கள்

1947லிருந்து இன்றுவரை மத்தியிலும் மாநிலத்திலும் மாறிமாறி ஆட்சிக்கு வந்த அனைத்து முதலாளித்துவக் கட்சிகளும் சரி, கேரளா, மே.வங்காளத்தில் ஆட்சி ஏற்ற ஸ்டாலினிச கட்சி அரசாங்கங்களுக்கும் சரி — உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற கொடிய சட்டங்களைப் போட்டு தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் சிறுபான்மை மக்களையும் நசுக்கி வருகின்றன. கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான ஜனநாயக உரிமைகள், கூட்டம், மாநாடு கூட்டும் உரிமை, பத்திரிகை உரிமைகளை முதலாளித்துவ ஜெயலலிதாவின் அ.தி.மு.க. அரசாங்கமும், காங்கிரஸ் அரசாங்கமும் போலீசின் பூட்சுகளின்கீழ் வைத்து நசுக்குகின்றன. தமிழீழ தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகப் பேசுவோர் பயங்கரவாதிகளாகவும், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிப்போர் தேசத் துரோகிகளாகவும், அரச எந்திரங்களால் பிரச்சாரம் செய்யப்படுகின்றனர். ஏகாதிபத்தியப் போருக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக சோசலிசத் தொழிலாளர் கழகம் நடத்திய முன்னேடி மாநாட்டின் போது போலீசின் ஆத்திரமூட்டல் தலையீடும், மாவோயிஸ்டுகளின் தமிழீழ அகதிகளுக்கு ஆதரவான மாநாட்டைத் தடை செய்ததும், வளைகுடாப் போர் எதிர்ப்பு ஊர்வலங்களைக் காட்டுமிராண்டித் தனமாகத் தாக்கியமையும் ஆளும் வர்க்கத்தின் ஏகாதிபத்திய விசுவாசத்தையும், பீதியையும் வெட்ட வெளிச்சமாக்குகின்றன.

## டிராட்ஸ்கிச வேலைத்திட்டம்

புரையோடிப் போய்விட்ட முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எந்த தேசியவாத வேலைத் திட்டமும் தீர்வைத் தராது. உலக முதலாளித்துவத்தைத் தோற்கடித்து, உலகத் தொழிலாள வர்க்கம் உற்பத்தி சக்திகளைத் தனது கையில் எடுத்து, திட்டமிட்ட பொருளாதார முறையில், தேவைக்கேற்ற சோசலிச உற்பத்தி முறைக் கொண்டு வரும்-உலக சோசலிசப் புரட்சி வேலைத்திட்டத்தின் மூலமே, தீர்வு காண முடியும். இவ்வேலைத் திட்டத்தை முன்னெடுக்கும் சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதியாக இந்திய டிராட்ஸ்கிசக் கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகத்தைக் கட்டி எழுப்ப வேண்டியது மிக இன்றியமையாததாகும்.

இந்தியா போன்ற பின்தங்கிய நாடுகளில் தீர்க்கப்படாத ஜனநாயகக் கடமைகளால் ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அனைவருக்கும்'' விவசாயிகள், குட்டி முதலாளிகள், ஒடுக்கப்படும் தேசிய இனம், சிறுபான்மை மொழி, மதப்பிரிவினர் அனைவருக்கும் தொழிலாளர் வர்க்கம் தலைமை கொடுக்கும் சோசலிசப் புரட்சிக்கான போராட்டத்தின் மூலமே விடிவு ஏற்படும்-அந்த சோசலிசப் புரட்சியும் சர்வதேச பாட்டாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்து முன்னெடுக்கப்படும் உலக சோசலிசப் புரட்சிமுன் நோக்கின் மூலமே முழுமை பெறும். இதுதான் டிராட்ஸ்கி காட்டிய நிரந்தரப் புரட்சித் தத்துவத்தின் சாராம்சம். மாறாக ஸ்டாலினிச அதிகாரத்துவம் முன்னெடுத்த 'தனி ஒரு நாட்டில்சோசலிசம்' என்ற பிற்போக்கு தேசியவாதக் கொள்கை-சோவியத் யூனியனில் ஸ்டாலினிசக் கட்சியை

(★19ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



## நவ. 29 ஒரு நாள் பந்த்...
(12ம் பக்கத் தொடர்ச்சி)

கரைந்ததிலும், கிழக்கு ஐரோப்பிய ஆட்சிகள் கவிழ்ந்ததிலும் தனது திவால் தன்மையை வெளிப்படுத்தி விட்டது. ஸ்டாலினிசம் ஏகாதிபத்தியத்தின் நேரடி ஏஜெண்சியாகத் தொழிலாளர் வர்க்க இயக்கத்துக்குள் இயங்கி வருகிறது. இதனைத்தான் 1938ல் லியான் டிராட்ஸ்கி நான்காம் அகிலத்தின் ஸ்தாபன வேலைத் திட்டமான 'இடை மருவு வேலைத்திட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''அகிலமானது (ஸ்டாலினிச அதிகாரத்துவத் தலைமையின்கீழ் இருந்த மூன்றும் அகிலமானது) சீரழிந்து செல்லும் முதலாளித்துவ சகாப்தத்தில் சமூக ஜனநாயகத்தின் பாதையைப் பின்பற்றத் தொடங்கி உள்ளது' ஆனால் பொதுவாக, அங்கே வரிசைக்கிரமமான சமூக சீர்திருத்தங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை. பாட்டாளி வர்க்கத்தின் ஒவ்வொரு முக்கிய கோரிக்கையும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் ஒவ்வொரு முக்கிய கோரிக்கையும் தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவ சொத்துறவுகளின் மற்றும் முதலாளித்துவ அரசின் எல்லைகளுக்கு அப்பால் செல்கிறது.

நான்காம் அகிலத்தின் தொலை நோக்குப் பணி முதலாளித்துவத்தை சீர்திருத்துவதில் அல்ல; அதனைத் தூக்கி வீசுவதிலேயே உள்ளது, அதனுடைய அரசியல் நோக்கம் முதலாளித்துவ வர்க்கத்திடமிருந்து உடைமைகளைப்பறித்தெடுப்பதற்காக பாட்டாளி வர்க்கத்தின் ஆட்சியதிகாரத்தை ஏற்படுத்துவது ஆகும்'' (இடைமருவு வேலைத் திட்டம் 1938, பக்கம் 4, லேபர் பப்ளிகேஷன்ஸ் வெளியீடு).

இந்திய உப கண்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகளான இந்திய டிராட்ஸ்கிச கட்சியான சோசலிசத் தொழிலாளர் கழகமும், இலங்கை டிராட்ஸ்கிச கட்சியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும்—இந்திய உபகண்ட மத வகுப்பு வாதப் பிரிவினைக்கெதிராக—உலக சோசலிசக் குடியரசுகளின் பகுதியாக இந்திய உபகண்ட சோசலிசக் குடியரசுகளை அமைக்கும் உலக சோசலிசப் புரட்சிமுன்னோக்கை தொழிலாள வர்க்கத்தின் முன் வைக்கின்றது அந்த அடிப்படையில் ஏகாதிபத்திய காலவருடி காங் அரசாங்கத்தின் தொழிலாள விரோதக் கொள்கைகளை எதிர்த்துப் போராட இந்தியத் தொழிலாள வர்க்கம் உலகத் தொழிலாள வர்க்கத்துடன் புரட்சிகர ஐக்கியம் கொண்டு இந்திய முதலாளித்துவ வர்க்கத்தைத் தூக்கிவீசுவதற்கான வேலைத்திட்டத்தைப் பற்றி விவாதிக்க வருகின்ற ஏப்ரல் மாதம்' அகில இந்திய தொழிலாளர் மாநாட்டைக் கூட்டவிருக்கிறது. அதில் கலந்து கொள்ளுமாறு இந்தியத் தொழிலாள வர்க்கத்தைச் சோசலிசத் தொழிலாளர் கழகம் அறைகூவி அழைக்கிறது. அத்துடன் வருகின்ற நவம்பர் 29-ல் ஸ்டாலினிஸ்டுகள் முன் நின்று நடத்த இருக்கும் ஒருநாள் பாரத்பந்த்தை காலவரையற்ற அகில இந்திய வேலை நிறுத்தமாக நீட்டிக்கப் போராடுமாறு இந்தியத் தொழிலாள வர்க்கத்துக்கும், ஒடுக்கப்படும் ஏழை விவசாயி மற்றும் ஒடுக்கப்படும் சிறுபான்மை தேசிய, இன, மொழி, மத பிரிவினருக்கும் அறை கூவல் விடுக்கின்றது.

ஃ முதலாளித்துவ ஆட்சி அமைப்புகளுக்கு மாற்றாக, தொழிலாளர்களின் சபைகளை (சோவியத்துக்களை) நகர்ப் புறத்திலும், கிராமப் புறங்களில் தொழிலாளா-விவசாயி சோவியத்துகளையும் அமைக்க வேண்டும்.

ஃ முதலாளித்துவ அரச ஒடுக்குமுறை சாதனங்களாகிய போலிஸ், இராணுவம் இவற்றின் ஒடுக்கு முறையில் இருந்து பாதுகாக்க தொழிலாளர்களின் சொந்த படை அணிகளை அமைக்க வேண்டும்!

ஃ ஏகாதிபத்திய வங்கியாளர்களிடமிருந்து பெற்ற அனைத்து கடன்களையும் திருப்பிச் செலுத்துவதை நிராகரிக்க வேண்டும்!

ஃ சி.பி.ஐ. (எம்), சி.பி.ஐ. ஸ்டாலினிச கட்சித்தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டிக்குமாறு நிர்ப்பந்திக்கவேண்டும்!

ஃ சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இந்தியப் பகுதியாக சோசலிசத் தொழிலாளர் கழகத்தைக் கட்டி எழுப்ப வேண்டும்!

ஃ முதலாளிகளுக்கு ஒரு பைசா நஷ்டஈடின்றி அனைத்து தொழிற்சாலைகளையும் வங்கிகளையும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசிய மயமாக்கும் தொழிலாளர் - விவசாயி அரசாங்கத்தை அமைக்கப் போராட வேண்டும்.

இந்த அரசாங்கம் நிலப் பிரபுக்களின் நிலங்களை சுவீகரித்து நிலமற்ற ஏழை விவசாயகளுக்கு பங்கிடும்- அனைத்து கருப்புச் சட்டங்களையும் விலக்கி. அரசியல் கைதிகளை விடுவிக்கும், நதிநீர்வளங்களை ஒன்றிணைத்து குடிநீர். பாசனநீர் சட்டுப்பாட்டை இல்லாமல் செய்யும், -அனைத்து தேசிய இனங்களின், பிரிந்து போகும் தேசியசுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கும்.

—அனைத்து மொழிக்கும் சம அந்தஸ்தினை வழங்கும்.

....மதத்தை தனிநபரின் சொந்த விஷயமாகக் கருதும் அதே வேளை மதம் ஸ்தாபன் ரீதியாக சுரண்டலுக்கான கருவியாவதை தடை செய்யும். மத நிறுவனங்களின் சொத்துக்களை தொழிலாளர் அரசாங்கத்தின்கீழ் தேசிய மயமாக்கும்.

... மாதிரிக் கூட்டுப் பண்ணைகளை அமைத்து. விவசாயிகளிடையே கூட்டுப்பண்ணை மயமாக்கலைத் தானாக செயற்பட வைக்கும், இதன்மூலம் விவசாயத் துறையை பேரளவில் தொழில் மயமாக்கி சாதிக்கான பொருளாயாத அத்திவாரத்தை இல்லாமல் செய்யும்.

... ஆண். பெண் சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் விஞ்ஞான முறையிலான கல்வியையும். வேலைவாய்ப்பையும் உத்தரவாதப்படுத்தும்

...உலகத் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியம் கொண்டு உலக சோசலிசக் குடியரசுகளை உருவாக்கப் போராடும்.

—இதுவரை மனிதகுலம் கண்டுபிடித்த அனைத்து வளங்களையும் பயன்படுத்தி மனித குலத்தின் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்து, சோசலிச கலாச்சாரம் வளர்ச்சியடையப் போராடும்,

# துப்புரவுத் துறையைத் தனியாரிடம் ஒப்படைப்பதை முறியடி !

பன்னாட்டு நிதியம், உலக வங்கி ஆகிய ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் கட்டளைகளை ஏற்று தொழிற்துறைகளையும் துப்புரவுத் துறை போன்ற சமுக சேவைகளையும் தனியாரிடம் தாரை வார்க்கும் முதலாளித்துவ அ.தி.மு.க., இ. காங். அரசாங்கத்தின் முயற்சியை முறியடிக்க— முதலாளித்துவ ஆட்சியினைத் தூக்கி வீசி— தொழிலாளர் விவசாயி அரசாங்கம் அமைக்கின்ற பொதுப் போராட்டத்தில் ஒன்றிணையுமாறு துப்புரவுத் தொழிலாளர்களை சோசலிசத் தொழிலாளர் கழகம் அறை கூவி அழைக்கிறது.

### கொத்தடிமை நிலையில் துப்புரவுத் தொழிலாளர்கள்

சுமார் 10,000க்கும் மேற்பட்ட துப்புரவுத் தொழிலாளர்கள மாநகராட்சியின்கீழ் பணி புரிந்து கொண்டிருக்கின்றார்கள. சுமார் 2,000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் நிரந்தம் செய்யப்படாமல் இருக்கின்றனர். இந்த தொழிலாளிகள அனைவருமே அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் வண்டியை தாங்களே ஒட்டி குப்பையை வாரிக் கொட்டுகிறார்கள். வண்டியில் குப்பை அதிகமாகும பொழுது வண்டியின் குப்பையின்மேல் ஏறி மிதிக்கின்றார்கள். இதனால் அவர்களது கால்கள் கண்ணாடித் துண்டுகளால் கிழிக்கபபடுகின்றன. இவர்களுக்கு செருபபு தாப்படுவது இல்லை, குபபையில் பிறரால் எறியபபட்ட கிழிந்த பழைய செருபபுகளை தேடி எடுத்து போட்டுக் கொள்கிறார்கள். இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான செருப்பு, சோப்பு, டவல், கையுறை எண்ணெய் போன்றவை மறுக்கப்படுகின்றன, மெடிகல் லீவ் உண்டு ஆனால் அனுமதி மறுக்கபபடுகிறது. பண்டிகை விடுமுறை என்பதெல்லாம் கிடையாது. வாரத்திற்கு சனிக்கிழமை ½ நாளும் ஞாயிறுக்கிழமை ½ நாளும் விடுமுறை. ஆனால் முழு நாளும வேலையை செய்து விட்டுத்தான் செல்ல வேண்டும். ஒருநாள் விடுமுறை தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்டு இன்னும் தரப்படவில்லை மேலும் இவர்கள் பணியிலிருந்து ஓய்வு பெற்று செலலும் பொழுது அவர்களுக்கு சேர வேண்டிய பணம் இழுத்தடிக்கப்பட்டு சில வருடங்கள் கழித்து தரப்படுகிறது.

அதிகாரிகளான CIகள்தொழிலாளருக்கு சேரவேண்டிய எந்தப் பணமாகஇருந்தாலும் கமிஷன் ஏஜென்ட் போல் 100க்கு 10 என்று எடுக்கிறார் தொழிலாளி யாராவது எதர்த்து கேட்டால் அவரை வேறு இடத்திற்கு மாற்றுகிறார். இல்லையேல் வேலையே கொடுக்காமல் மேல் அதிகாரியைப பார் என்று கூறி மாதக் கணக்கில் அலைய விடுகிறார்.

துப்புரவுத் தொழிலாளர்களுக்காக 'பெயரளவிற்கு' இருக்கக்கூடிய தொழிற் சங்கத் தலைமை சந்தா வசூல் செயவதில் கண்ணும் கருத்துமாக செயல்படுகிறது ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளியை காட்டிக் கொடுத்தவரும் முது பெரும ஸ்டாலினிஸ்டுமான கே.டி.கே, தங்கமணி தான் இதன் கௌரவத் தலைவர். கருப்பண்ணனும் தங்கமணியும் அங்கம் வகிக்கும் இச் சங்கம் கார்ப்பரேஷன் நிர்வாக்கத்தின் ஏஜென்சியாக தொழிலாளர்களுக்குள் செயல்பட்டு வருகின்றது. கருப்பண்ணன் தொழிலாளர்தள் மடக்கிப் பிடித்து தங்கள் குறைகளைத் தீர்க்க போராடுமாறு நிர்ப்பந்தித்தால், மாநகராட்சி உயர் அதிகாரிகளுக்கு கூழைக் கும்பிடு போட்டு. அவர்கள பாதத்தை நக்கி தொழிலாளர்களின் வயிற்றிலடிப்பதே இவரது வாடிக்கையாகும். இது கருப்பண்ணனின் தனிப்பட்ட குணம்சத்தோடு சம்பந்தப்பட்டதல்ல. மாறாக அவர் சார்ந்திருக்கும் சிபிஐ. ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் எதிர்ப்புரட்சிகர ஏஜென்சி பாத்திரத்தின் ஓர் அங்கமாகும்.

### ஸ்டாலினிச மக்கள் முன்னணிக் கொள்கையை நிராகரி

CPI, CPI(M) ஸ்டாலினிச கட்சிகள் வர்க்கக்கூட்டு வைத்துக் கொண்டு மக்கள் முன்னணியை அமைத்து முதலாளித்துவ ஆட்சியை தக்க வைப்பதையே தனது வேலைத் திட்டமாக கொண்டுள்ளன. தொழிலாள வர்க்கத்தின் ஒரு பகுதியினரின் போராட்டத்திலிருந்து மற்றொரு பகுதியைத் தனிமைப்படுத்தி ஒன்று சேரவிடாமல் முதலாளித்துவத்திற்கு முண்டு கொடுத்து வருகின்றன. ஏகாதிபத்தியத்தின் புதிய ஒழுங்கு முறையை சமன்படுத்த ஸ்டாலினிஸ்டுகள் முழு ஒத்துழைப்புடன் செயல்படுகின்றனர். வேலையின்மை. விலைவாசி உயர்வு, சம்பள வெட்டு, ஆட்குறைப்புஇவிலிருந்து விடுபட தொழிலாள வர்க்கம் எழுச்சி கொண்டு வரும் பொழுது வருடத்திற்கு ஒருமுறை 'பாரத் பந்த்' என்று தொழிலாளர்களின் எழுச்சியை மட்டுப்படுத்துகின்றன. எனவே துப்புரவுத் தொழிலாளர்கள் இத்துரோகத் தலைமையிலிருந்து விடுபட வேண்டும். விடுபட்டு சீர்த் திருத்தவாத முதலாளித்துவ தலைமையைக் கட்டுவதன் மூலமும (அ.தி.மு.க தி.மு.க. காங்கிரஸ், ஜனதா. பா.ஜனதா) தீர்வு காணமுடியாது. மாறாக துப்புரவுத் தொழிலாளர்களை புரட்சிகரத் தலைமையான டிராட்ஸ்கிச அணியைக் கட்ட வேண்டும். துப்புரவுத் துறையை தனியார் மயமாக்கலுக்கு எதிரான போராட்டமானது அ.தி.மு.க. காங்கிரஸ் திமுக ஜனதா பா ஜனதா போன்ற முதலாளித்துவ கட்சியின ஆட்சிகளை தூக்கியெறிந்து தொழிலாளர்களின் ஆட்சியை அமைக்கும் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்ததாகும். ''இன்றைய சகாப்தத்தில் தொழிற்சங்கங்கள் ஏகாதிபத்தியமும் முதலாளித்துவமும். புரட்சியைத் தடுப்பதற்காகத் தொழிலாளர்களை கீழ்ப்படியச் செய்து அடக்குவதற்கான இரண்டாம் உபகரணங்களாக மாற வேண்டும். அல்லது அதற்கு நேர்மாறாகத் தொழிற்சங்கங்கள பாட்டாளி வர்க்க புரட்சி இயக்கத்தின் உபகரணங்களாக மாற வேண்டும்?' என்று டிராட்ஸ்கி கூறியதுபோல் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு புதிய புரட்சிகர வேலைத் திட்டமும் புரட்சிகரத் தலைமையுமே முதல் தேவை ஆகும். எனவே துப்புரவுத்தொழிலாளர்கள் பின்வரும வேலைத்திட்டத்தின் கீழ் போராட வேண்டும் என டிராட்ஸ்கிச தொழிலாளர் அணி முன் வைக்கிறது.

ஃ அனைத்து ஊழியர்களும் நிரந்தரம் செய்யப்பட வேண்டும.

ஃ அடிப்படை வசதிகளான சோப்பு, செருப்பு, எண்ணெய், டவல், கையுறை போன்றவை அனைத்தும் வழங்கப்பட வேண்டும!

ஃ தொழிலாளி உட்பட அவரது குடும்பத்திற்கு முழு மருத்துவ வசதியும்

தொழிலாளி குடியிருப்பு வசதியும அளிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தையும் பெற

ஃ அனைத்து தொழிற் துறைகளையும், வங்கிகளையும். முதலாளிகளுக்கு ஒரு பைசா நஷ்ட ஈடின்றி தொழிலாள வர்க்க ஆதிக்கத்தின்கீழ் தேசிய மயமாக்க ஒரு கால வரையற்ற அகில இந்திய பொது வேலை நிறுத்தத்தின் மூலம தொழிலாளர் விவசாய அரசாங்கம் அமைக்கப் போராட வேண்டும்,

சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்), ஸ்டாலினிசத் தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டிக்குமாறு தொழிலாளர்கள் நிர்ப்பந்திக்க வேண்டும். புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்திற்காக போராடும் சோசலிச தொழிலாளர் கழகத்தை பரந்த கட்சியாக கட்டியெழுப்ப முன்வருமாறு துப்புரவுத் தொழிலாளர்களை அழைக்கிறோம். எம்.கே.

## சி.பி.ஐ (எம்), சி.பி.ஐ. ஸ்டாலினிசக் கட்சித் தலைமைகளை முதலாளித்துவக் கட்சிகளுடனான உறவைத் துண்டிக்குமாறு நிர்ப்பந்தி !

வெளியீடு : சோசலிசத் தொழிலாளர் கழகம் தபால் பெ. எண் 968, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை-12 அச்சிட்டோர் ; பரணி அச்சகம், சென்னை-12.
ஆசிரியர் : எஸ். சக்தி

www.padippakam.com

# முதலாளித்துவ மக்கள் முன்னணி வேண்டாம்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்கப்படும் இளைஞர்களையும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும். தமது வர்க்க அமைப்புக்களுள் தீர்மானங்கள் நிறைவேற்றியும் அவசியமான இடங்களில் அமைப்புக்களை நிறுவியும் முன்னணி வகிக்குமாறு வர்க்க நனவுகொண்ட தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை பு.க.க. வேண்டுகின்றது.

★ இம்மகாநாடு உலக வங்கி, யூ. என். பி. அரசாங்கம், முதலாளிகளின் தாக்குதல்களுக்கு எதிராகவும், தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான இலங்கை முதலாளித்துவ அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும், கிராமப் புறப் படுகொலைகளுக்கு எதிராகவும் சகல அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்யவும் பொது வேலைநிறுத்தத்தினை ஏற்பாடு செய்யத் தீர்மானம் செய்யவேண்டும். சகலதொழிலாளர் அமைப்புக்களிலும், கிளைகளிலும், வேலைத்தலங்களிலும், இளைஞர்களிடையேயும் தீர்மானங்கள் நிறைவேற்றவும், பேராளர் மகாநாட்டினைக் கூட்டவும் போராட வேண்டும். அவ்வாறே பொதுவேலை நிறுத்த தீர்மானம் எடுக்க மாபெரும் பிரச்சார இயக்கத்தினை ஆரம்பிக்கும்படி வர்க்க நனவு கொண்ட சகல தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும். இளைஞர்களையும் வேண்டுகின்றோம்.

★ இப்போராட்டத்தின் அத்தியாவசிய நடவடிக்கையாகத் தொழிலாளர் வசிப்பிடங்களிலும், வேலைத்தலங்களிலும், கிராமப்புறங்களிலும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் குழுக்களை அணிதிரட்டி ஆயுதம்தாங்கிய தொழிலாளர் பாதுகாப்பு அணிகளை நிறுவ வேண்டும்.

தொழிலாளர்க்ள், ஒடுக்கப்படுவோர் தமது பலத்தினை அணிதிரட்டும் பொருட்டு தொழிலாளர் — விவசாயிகள் சபைகளை — சோவியத்துக்களை—கட்டியெழுப்ப முன்வரவேண்டும்.

தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படுவோரினதும் இப்போராட்டம், இதற்கு எதிராகஉள்ளஏகாதிபத்தியப் பிடியை உடைப்பதுடனும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிவர்க்க ஆட்சியை ஒழிப்பதுடனும் இணைந்துள்ளது: தொழிலாளர் — ஏழை விவசாயிகள் முகம் கொடுக்கும் சமூகப் பிரச்சினைகளுக்கும் விவசாய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளையும் தமிழ் தேசிய இனத்தை ஒடுக்குவதற்கு முடிவு கட்டுவதற்கும், ஏகாதிபத்தியச் சார்பு ஆட்சியை ஒழித்து. ஏகாதிபத்தியத்தினை தூக்கிவீசும் பொருட்டு உலகத்தொழிலாளவர்க்கத்துடன் முன்செல்ல வேண்டும். ஏகாதிபத்தியச் சொத்துக்களையும் முக்கிய முதலாளித்துவக் கைத்தொழில்களையும் தொழிலாளர் கட்டுப்பாட்டின் கீழ் தேசியமயமாக்க வேண்டும். விவசாயிகளின் நிலப்பிரச்சினையைத்தீர்த்து, இடைநடு தரகர்களின் சுரண்டலை ஒழித்து, வங்கிகளுக்கும், வட்டிக்காரர்களுக்குமான கடன்களை ஒழிக்க வேண்டும். வடக்கு—கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் சுயநிர்ணய உரிமையை உத்தரவாதம் செய்ய வேண்டும். இப்பணியினை நிறைவேற்றும் பொருட்டுதொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் யூ.என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றி, இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினை—சோவியத் சபைகளை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் — விவசாயிகள்அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர வேண்டும்.

இலங்கை — தமிழ் ஈழம் பிராந்தியங்களைச் சேர்ந்த தொழிலாளர்— ஒடுக்கப்படும் மக்களின் இந்தப் புரட்சிகரப் போராட்டம், உலகச் சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக — இந்தியத் துணைக் கண்டத்தில் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சிகளைத் தூக்கி வீசி, துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைப்பதுடன் வரலாற்று ரீதியில் இணைந்துள்ளது. 'சார்க்' மகாநாடு எனப்படுவதன் கீழ் தற்போது ஆளும் வர்க்கங்கள் பிராந்திய நாடுகளின் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக 'பயங்கரவாத' ஒழிப்பு என்ற பேரில் ஏற்படுத்திக்கொண்டுள்ள எதிர்ப்புரட்சிக் கூட்டுக்களைத் தோற்கடிக்கவும் அவ்வாறே பாட்டாளி வர்க்கப் புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லவும், காக்கவும், அபிவிருத்தி செய்யவும் இந்தியத் துணைக் கண்ட சோசலிச குடியரசு ஒன்றியத்தினை அமைக்கப் போராடுவது தீர்க்கமானது.

★ தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் தமது அரசியலமைப்புச் சபைக்கும், வர்க்கப் போராட்டத்தின் விருத்திக்கும், தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்துக்குமான போராட்டத்தினை இங்ஙனம் முன்னெடுக்கையில்சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் ''போராட்டத்தினை பிளவுபடுத்தவும், மோதுதலை உண்டுபண்ணவும்''செயற்படுவதாகக்கூறிக் கொண்டு பாய்ந்து விழலாம். முதலாளிகளுடன் கூட்டுக்களுக்காக எமது சுயாதீனமான போராட்டத்தினைக் கைகழுவிவிட நாம் தயார் இல்லை என்பது தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் குரலாக ஒலிக்கவேண்டும். முதலாளித்துவ மக்கள் முன்னணி வேண்டாம்! தொழிலாளர் — ஏழைகளின் போராட்டத்தினை சுயாதீனமாகஅணிதிரட்டு! இதுவே தொழிலாளர்—ஏழைகள் அவர்களுக்கு செய்யும் சிபார்சாக விளங்க வேண்டும்! தொண்டமான் — செல்லச்சாமி தலைமையை கொலைகார பிரேமதாச அரசாங்கத்தில் இருந்து வெளியேறி, இ. தொ கா.வை தொழிலாளர்களின் சுயாதீனமான போராட்டத்தில் ஈடுபடுத்த வேண்டும் என தோட்டப்புற, நகர்ப்புறத் தொழிலாளர்கள் ஒரே குரலில் கூறவேண்டும்.

இவ்வளவு தூரம் சென்று ஏகாதிபத்தியத்துக்குச் சேவை செய்யும் பொருட்டு தமக்குப் பொறிக்கிடங்கு தோண்டும் இத்தலைவர்களை நம்பாதீர் என நாம் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

இலங்கை-தமிழ்ஈழம் பிராந்தியங்களிலும் இந்தியத் துணைக்கண்டப் பிராந்தியத்திலும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர வேலைத்திட்டத்தினையும், கட்சியையும் நிர்மாணிக்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இந்தியாவில் அதன் சகோதர இயக்கமான சோசலிசதொழிலாளர் கழகமும் மட்டுமே போராடுகின்றன. பாட்டாளி வர்க்கத்துக்குப் புரட்சிகர முன்நோக்கினை அனைத்துலகக் குழுவின் கிளைகள் மட்டுமே வழங்குகின்றன. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருமாறும் அதன் பத்திரிகைகளான 'தொழிலாளர் பாதை', 'கம்கறு மாவத்த' பத்திரிகைகளை வாசிக்குமாறும் நாம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களை வேண்டுகின்றோம். பலம்வாய்ந்த இளைஞர் இயக்கங்களை கட்டி எழுப்புவதன் மூலம் புரட்சிக் கம்யூனிட் கழகத்தினைஉறுதிசெய்ய 'இளம் சோஷலிஸ்டுகள்' இயக்கத்தில் சேருங்கள்.

அனைத்துலக ரீதியில் ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்திற்கும் எதிராக - உலகத் தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் நடவடிக்கையின் ஒரு பாகமாக 1991 நவம்பர் 16-17ம் திகதிகளில் அனைத்துலக குழு பேர்ளினில் கூட்டும் உலக மகாநாட்டுக்கு ஆதரவளிக்கும்படியும் அதன் வெளியீடுகளை ஆய்வு செய்யும்படியும் நாம் சகல தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

முதலாளித்துவத்தின் மரண ஓலமும்
நான்காம் அகிலத்தின் பணிகளும்
இடைமருவு வேலைத்திட்டம்
நான்காம் அகிலத்தின் ஸ்தாபக மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

ஏகாதிபத்திய யுத்தத்தையும்
காலனித்துவத்தையும் எதிர்!
நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் விஞ்ஞாபனம்

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும்
காலனித்துவத்துக்கும்
எதிரான போராட்டமும்
பேர்ளின்
உலக மகாநாட்டின்
முன்நோக்கும்
நான்காம் அகிலத்தின்
அனைத்துலகக் குழுவின்
நான்கு தலைவர்களின்
உரைகளின் தொகுப்பு

அவசியம் படிக்க
வேண்டிய புத்தகங்கள்

ஆகஸ்ட் சதியின் பின்னர்:
சோவியத் யூனியன்
எங்கே செல்கிறது?

தொழிலாளர் பாதை வெளியீடு

தொடர்புகளுக்கு

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN

தொழிலாளர் பாதை

சந்தா

Tholilalar Pathai
POSTFACH 1609
7120 BIETIGHEIM-
BISSINGEN

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின்
இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்
தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் தொழிலாளர் பாதை மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

பெயர் ______
விலாசம் ______
______ திகதி

புதிய சந்தா விபரம்.
12 பிரதிகள் DM 26.-

படிப்பகம்